தொல்லியல் கருத்தரங்கு-2

நூல் சேர்க்கை
எண்.
சென்னை - 600 008

பொருளடக்கம்

தொல்லியல்

வ. எண் பக்க எண்

1. ஆர்க்காட்டின் தொல்லியல் சின்னங்கள்
—கலைவாணன், எம்.ஏ. ... 3
2. கொத்தபாளையம் பெருங்கற்கால மட்கலயங்களும் குறியீடுகளும்
—து. துளசிராமன், எம்.ஏ. ... 7

கல்வெட்டியல்

3. அடிக்கீழ்த்தளம்
—தி. சுப்பிரமணியன், எம்.ஏ. ... 17
4. அரசன் ஆணை
—ஆர். வசந்தகல்யாணி, எம்.ஏ. ... 23
5. ஓம்படைக்கிளவி
—பொ. இராசேந்திரன், எம்.ஏ. ... 29
6. பல்லக்குத் தூக்கிகள்
—செ. போசு, எம்.ஏ. ... 37
7. நடுகல்லில் தொறு
—இரா. செல்வராசு, எம்.ஏ. ... 44
8. முதல் பராந்தகன் கல்வெட்டு
—சி. முனுசாமி, எம்.ஏ. ... 52
9. A Rare Document of Maratha
—CHANDRAVANAN, M.A. ... 57
10. Vadi
—NATANA. KASINATHAN, M.A. ... 66

வரலாறு

11. அத்திக் கோசத்தார்
—ஆர். பூங்குன்றன், எம்.ஏ. ... 73

12. கோயில் காத்தான்
—சீ. வசந்தி, எம்.ஏ. ... 86
13. சோழர் காலத்தில் சேத்திரபாலர் வழிபாடு
—கி. ஸ்ரீதரன், எம்.ஏ. ... 87
14. உடன்கட்டை ஏறிய தேவதாசி செப்பேடு
—அ. அப்துல் மஜீத், எம்.ஏ. ... 95
15. பூராதிராயன் அத்திமல்லன்
—நா. மார்க்சீய காந்தி, எம்.ஏ. ... 102
16. மலையடிக்குறிச்சி
—வெ. வேதாசலம், எம்.ஏ. ... 106
17. தஞ்சை மராட்டியர்-நீதி பரிபாலனம்
—ச. கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ. ... 116
18. விக்கிரம பாண்டியன்
—ஆ. பத்மாவதி, எம்.ஏ. ... 121

தொழில் நுட்பம்

19. கல்தேர்ந்தெடுத்தல்
— ச. குருசுவாமி, டி.எஸ்.ஏ. ... 129
20. செப்பு உருவங்கள் மற்றும்
காசுகள் சுத்தம் செய்தல், பாதுகாத்தல்
—த. ஆனந்தன், பி.எஸ்.சி. ... 134

பொதுவியல்

21. வழக்கொழிந்த இரு மரபுகள்
—அ. இராசேந்திரன், எம்.ஏ. ... 141
22. மன்று-ஒரு வரலாற்றுப் பார்வை
—சொ. சாந்தலிங்கம், எம்.ஏ. ... 145
23. Pulankuricci Inscription-a relook
—NATANA KASINATHAN, M.A. ... 157
24. Early Structural Temples in Tamilnadu
—N. S. RAMASWAMI ... 166

★

பதிப்புரை

தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறையால் மாவட்டந்தோறும் ஆராய்ச்சிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதில் முதல் கட்டமாக தஞ்சாவூரில் முதல் வரலாற்றுக் கருத்தரங்கு நடைபெற்றது. அதில் படித்தளிக்கப் பட்ட ஆய்வுக்கட்டுரைகள், தொகுதி I-ல் இடம் பெற்றுள்ளன.

இரண்டாவது வரலாற்றுக் கருத்தரங்கு ஆகஸ்ட் 24, 25 ஆகிய இரண்டு நாட்களில் திருச்சி, குறிஞ்சி கல்யாண மண்ட பத்தில் நடைபெற்றது.

இவ்வாய்வுக் கருத்தரங்கில் 54 ஆய்வாளர்கள் கலந்து கொண்டு தங்கள் ஆய்வுப்படைப்புக்களை வழங்கினர்.

இக்கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட 54 கட்டுரைகளில் 21 கட்டுரைகள் மட்டும் இந்நூலில் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாய்வரங்கில் வழங்கப்பட்ட கட்டுரைகள் அனைத்தும் தரமிக்கவை; என்றாலும் பக்க எல்லை கருதி யாவற்றையும் இந்நூலில் கொண்டுவர முடியவில்லை.

இத்தொகுப்பில் சேர்க்கப்படாத கட்டுரைகள் முறையாகக் 'கல்வெட்டு' இதழில் வெளியிடப்படும்.

இந்நூல் பதிப்பிக்கும் பணியை என்னிடம் வழங்கிய திரு நடன. காசிநாதன், எம்.ஏ., இயக்குநர் (பொறுப்பு) அவர் களுக்கு நன்றி. அச்சுப்பிழைகளைத் திருத்துவதில் உடன் இருந்து உதவிய திருமதி ஆர். வசந்தகல்யாணி, எம்.ஏ., அவர்களுக்கும், இந்நூல் உருவாவதில் சிறப்பாக ஒத்துழைத்த திரு அ. அரங்கநாதன், திரு மு. சீனிவாசன் மற்றும் இத்துறை அச்சுப்பிரிவுப் பணியாளர்களுக்கும் நன்றி.

பதிப்பாசிரியர்,
அ. இராசேந்திரன்.

அறிமுக உரை

தமிழ்நாட்டில் அண்மைக் காலங்களில் தொல்லியல் கண்டு பிடிப்புகள் பல நிகழ்ந்துள்ளன. அவைகளில் தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோயிலூர்ப் பகுதியில் கிடைத்துள்ள வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய ஓவியங்களும், ஜம்பைக் கல்வெட்டும், இராமநாதபுரம் மாவட்டம் அழகன்குளம் தொல்பொருட்களும், பூலாங்குறிச்சிக் கல்வெட்டும் குறிப்பிடத்தக்கவை.

வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய தமிழகத்தின் வரலாறு எழுதுவதற்கு இவ்வோவியங்களின் கண்டுபிடிப்பு மிகவும் சிறந்த ஆதாரங்களாக அமைகின்றன. சங்க காலத் தமிழகத்தையும், அதனைத் தழுவிய காலத் தமிழகத்தையும் தெளிவாக உணர்வதற்கு மேலே குறிப்பிடப்பெற்ற தொல்பொருட்களும், இரு கல்வெட்டுக்களும் உறுதுணையாக விளங்குகின்றன.

இதுபோன்று, இன்னும் பல தொல்லியல் ஆதாரங்கள் இன்னமும் கண்டுபிடிக்கப்படாமல் தமிழகத்தில் ஆங்காங்கே உள்ளன. அவைகளைப் பற்றிய ஒரு எழுச்சியை கற்றறிந்தோர் மத்தியிலும், சாதாரண பொதுமக்கள் மத்தியிலும் ஏற்படுத்துதல் வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை மாவட்டந்தோறும் தொல்லியல் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. அவ்வாறு நடத்தப் பெற்ற இரண்டாம் கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பே இந்நூலாகும்.

இத்தொகுப்பின் கட்டுரைகள் அனைத்தும் இத்துறையின் அலுவலர்களாலேயே (இறுதி ஒன்றைத் தவிர) எழுதப்பட்டிருப்பவை. இவை ஆராய்ச்சி நோக்கில் அமையப் பெற்றவை. தொல்லியல் ஆர்வம்கொண்டோர் அனைவருக்கும் இத்தொகுதி பல புதிய செய்திகளைத் தருவதாக அமையும் என்ற நம்பிக்கையில், அவர்களின் நல்லாதரவை வேண்டுகிறேன்.

அன்பன்,

நடன. காசிநாதன்

தொல்லியல்

ஆர்க்காட்டின் தொல்லியல் சின்னங்கள்

கலைவாணன், எம்.ஏ.,
காப்பாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, ஆர்க்காடு

ஆர்க்காடு தமிழகத்தின் தலைநகரான சென்னையிலிருந்து 125கி.மீ. தென்மேற்கே சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இவ்வூர் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த ஊராகும்.

இவ்வூருக்கு ஆர்க்காடு (ஆறு+காடு) எனப் பெயர் வந்ததே ஒரு சுவைமிக்கச் செய்தியாகும். அன்னையை மணம் முடிக்க எண்ணி இறைவன் கைலாய மலையை விட்டு விலகிக் காஞ்சி நகர் வந்தடைந்தாராம். இறைவனின் மணவிழாக் காண முனிவர்கள் பலரும் காஞ்சி நகர் நோக்கி வந்தனராம். அக்காலக் காஞ்சி ஆரவாரம் மிகுந்து காணப்பட்டதால் காஞ்சியில் தங்காமல் காஞ்சியைச் சுற்றியிருந்த காடுகளில் முனிவர்கள் தங்கினராம்.

அவ்வாறு தங்கியவர்களில் வால்மீகி முனிவர் சூதவனத்திலும் (மேல்விசாரம்), வசிட்டர் சமீவனத்திலும் (வேப்பூர்), பாரத்துவாசர் காரைவனத்திலும் (புதுப்பாடி), அகத்தியர் விசவனத்திலும் (வன்னிவேடு), கௌதமர் குடமல்லிகா வனத்திலும் (கரை), துர்வாசகர் நிம்பாரண்யத்திலும் (பூங் கோடு), தங்கி யாகங்களைச் செய்தனர். அவற்றின் அறிகுறி யாக மேற்கூறிய எல்லா இடங்களிலும் இன்றும் சிவன் கோயில்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆறு அடவிகளின் மையப்பகுதியாக ஆர்க்காடு இருந்தமையால் (ஆறு+காடு) ஆர்க்காடானது என்பர்.

பெருமாள் கோயில்

இக்கோயில், ஆர்க்காடு அக்ரகாரத் தெருவில் அமைந் துள்ளது. இவ்வாலயத்தின் மூலவர் கூர்மத்தின் மீது நின்ற

பெருமாளாக உள்ளது குறிப்பிடத் தக்கது. இந்த ஆலயத்தில் உள்ள கல்வெட்டு (11-ஆம் நூற்றாண்டு) இராஜேந்திர சோழன் இக்கோயிலுக்கு நிலம் வழங்கியதைக் கூறுகிறது. இக் கல்வெட்டு இவ்வூரைத் 'திருவழுத்தூர்' என அழைக்கிறது.

காசி விஸ்வநாதர் ஆலயம்

பாலாற்றங்கரையின் தெற்குக்கரையில் அழகிய அடவியின் இடையில் இக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் மிகப் பழமையானது எனக் கருதப்பட்டாலும் விஜயநகரர் கட்டிடக் கலைப் பாணியிலேயே காணப்படுகிறது.

முப்பதுவெட்டி

ஆர்க்காட்டின் பழமைக்குப் பெருமை சேர்க்கும் சின்னங் களில் இவ்வூர் முப்பது வெட்டி (முப்பந்+தொட்டி) சோம நாதீஸ்வரர் கோயிலும் ஒன்றாகும். ஆர்க்காட்டின் கிழக்குப் பகுதியில் அழகிய வயல்வெளியில் அமைந்துள்ள இக்கோயிலின் அருகே முப்பது தொட்டிகளில் எப்பொழுதும் கஞ்சி பொங்கிக் கொண்டே இருந்ததாம். இங்கு ஏழைகள் வந்து பசியாறிச் சென்றவண்ணம் இருந்தனராம். இந்த முப்பது தொட்டி என்ற பெயரே காலத்தால் மருவி இன்று முப்பது வெட்டி என ஆர்க்காட்டின் ஒரு பகுதியாக அழைக்கப்படுகிறதாம். இவ்வூரில் உறையும் சோமநாதப் பெருமான் உலாவரும் காட்சியைப் புலவர் ஒருவர் உலாவாகப் பாடியுள்ளார். இத் திருக் கோயிலின் விமானம் விருத்த விமான அமைப்பைக்கொண்டது. இவ்வாலயத்தின் உற்சவ மூர்த்தியான ஆடவல்லப்பெருமான் அழகிய சோழர்காலக் கலைப்பணிக்கு சிறந்த எடுத்துக்காட்டு.

ஆர்க்காட்டு நவாப்புகள் ஐதராபாத் சுபேதார்களின் பிரதி நிதிகளாகக் கர்நாடக நவாப்புகள் என்ற பெயருடன் ஆர்க் காட்டைத் தலைநகராய்க் கொண்டு ஆட்சி செய்தனர். ஆகவே இவ்வூரில் திரும்பிய திசையெல்லாம் ஆர்க்காட்டு நவாப்புகளின் சின்னங்கள் காட்சி தருகின்றன. இவ்வூரில் 365 தர்க்காக்களும் மசூதிகளும் உள்ளன. ஒவ்வொரு இசுலாமியரும் வருடத்தின் ஒவ்வொருநாளும் ஒரு தர்க்காவிற்குச் சென்று தொழுகை நடத்துதல் வேண்டுமாம். ஆனால் இன்று இவ்வழக்கம் இசுலாமியர்களிடம் இல்லை.

பச்சைக்கல் மசூதி

ஆர்க்காட்டின் தலையாய தொல்லியல் சின்னம் பச்சைக்கல் மசூதி என அழைக்கப்படும் திப்பு ஒளலியாவின் சமாதியே ஆகும். முழுவதும் பளபளக்கும் பச்சை நிறக் கருங்கல்லால் 18-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் கட்டப்பட்ட இக் கட்டிடம் சாதுல்லா என்ற ஒளலியாவின் மசூதி ஆகும். இச் சாதுல்லாவின் ஆசியாலேயே திப்புசுல்தான் பிறந்ததாகச் சொல்லப் படுகிறது. இவரே இராசாதேசிங்கின் மனைவியின் நினைவாகப் பாலாற்றின் வடகரையில் இராணிப்பேட்டை என்ற ஊரை ஏற்படுத்தியவர்.

டெல்லி கேட்

அன்வருதீனுக்கும், சந்தாசாகிப்பிற்கும் நடந்த உரிமைப் போரில் 1751-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 26-ஆம் தேதி ஆங் கிலேயப் படைகள் அன்வருதீன் சார்பாகச் சந்தா சாகிப்பின் படைகளைத் தோற்கடித்து ஆங்கில ஆட்சிக்கு இந்தியாவில் துவக்க விழா நடத்தியதன் நினைவாக ராபர்ட் கிளைவால் பாலாற்றின் தென்கரையில் கட்டப்பட்டுள்ள கட்டிடமே டெல்லிகேட்டாகும்.

இக் கட்டிடத்தின் மேல்தளம் எதிரிப் படைகள் வருவதை வேவுபார்க்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

நவாப்புகள் கோட்டை

நவாப்புகளின் கோட்டைப் பகுதி இன்று பெரும்பாலும் அழிந்துவிட்ட மண்மேடாகவே காட்சியளிக்கிறது. கோட்டை மேட்டுப் பகுதியைச் சுற்றிலும் தூர்ந்துவிட்ட அகழியின் பகுதிகள் உள்ளன. இன்று, நவாப்புகளின் குடும்பத்தினர் நீராடிய குளமும், அதனைச் சுற்றியுள்ள மூன்று சிறு அறைகளும் மட்டுமே (உடைகள் மாற்றுவது போன்ற காரணங் களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்) நல்ல நிலையில் உள்ளன.

இவை தவிர கோட்டைப் பகுதியில் நவாப்பு குடும்பத்தார் வழிபட்ட ஒரு தர்க்காவும், ஒரு குளமும் உள்ளன. இக்குளத்தில்

கை, கால், முகம் முதலியவற்றைக் கழுவிச் சுத்தம் செய்து கொண்டு நேராகத் தர்காவின் தொழுகை இடத்திற்குச் செல்லும் வண்ணம் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்சொன்ன அனைத்துத் தொல்லியல் சின்னங்களும் ஆர்க்காட்டின் பழம் பெருமைகளைப் பறைசாற்றிக்கொண்டிருக்கின்றன.

★

கொத்தபாளையம் பெருங்கற்கால மட்கலயங்களும் குறியீடுகளும்

து. துளசிராமன், எம்.ஏ.,
அகழ்வாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28

கரூர் - திண்டுக்கல் நெடுஞ்சாலையில் கரூருக்கு 30 கி.மீ. தூரத்தில் அரவக்குறிச்சி என்னும் ஊர் உள்ளது. அரவக் குறிச்சிக்கு வடமேற்கில் 5 கி.மீ. தூரத்தில் கொத்தபாளையம் அமைந்துள்ளது.

ஈமச்சின்னங்கள்

அரவக்குறிச்சியிலிருந்து கொத்தபாளையம் செல்லும் மண் பாதையைச் செப்பனிடும் பொருட்டு கொத்தபாளையத்திற்குக் கிழக்கே 'யானைகட்டிகாடு' என்னுமிடத்திலிருந்து மண்ணை வெட்டி எடுக்கும்போது, மண்ணுக்கடியில் ஈமத்தாழிகள் பல இருப்பது தெரியவந்தது. இதில் ஏறக்குறைய 30 தாழிகள் வரை சிதைந்து விட்டன. இத்தாழிகளிலிருந்த மட்கலயங் களும் சிதைக்கப்பட்டு விட்டன. இதுகுறித்து விவரம் அறிந்த வுடன், அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு. எஸ். சோமசுந்தரம் அவர்கள் கொத்தபாளையம் சென்று சிதைந்த ஈமத்தாழியின் பகுதிகள் மற்றும் தாழிகளிலிருந்து எடுக்கப்பட்ட முழுவடிவிலான மட்கலயங்கள், எலும்புத் துண்டுகள் போன்றவற்றைச் சேகரித்து வந்து தம்பொறுப்பில் வைத்திருந்தார். மேலும் இதுகுறித்து இவ்விடத்தில் விரிவாக ஆராயும் பொருட்டுத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறைக்குக் கடிதமும் எழுதியிருந்தார். உடன், கொத்த பாளையம் பகுதியில் தாழிகள் புதைந்துள்ள இடத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இப்பகுதியில் சுமார் 10 ஏக்கர் பரப்பளவிற்கு ஈமத் தாழிகள் புதைப்பட்டிருக்கும் புதை குழிகள் காணப்,

படுகின்றன. சில இடங்களில் புதை குழிகளுக்கு மேல் சிறிதும் பெரிதுமான கற்களைக்கொண்டு குவிக்கப்பட்டுள்ள கற்குவியல்கள் (Cairns) உள்ளன இதனைச்சுற்றி கல் வட்டமும் (Cairn circle) காணப்படுகிறது. சில கற்குவை களுக்கு நடுவில் 4 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை உயரமுள்ள குத்து கற்கள் (Menhirs) நடப்பட்டுள்ளன. இங்கு காணப் படும் ஈமத்தாழிகளை இப்பகுதி மக்கள் 'மூத்தான்தாழி' என்று அழைக்கின்றனர்.

மண் அடுக்குகள் (Layers)

ஒரு ஈமத்தாழி பாதி சிதைந்த நிலையில் தோண்டப்பட்ட குழியின் பக்கச் சுவரோடு ஒட்டி காணப்பட்டது. இச்சுவரினை நன்கு கத்தியால் சுரண்டி சமப்படுத்தி மண் அடுக்குகள் குறிக் கப்பட்டன. மொத்தம் மூன்று மண் அடுக்குகள் காணப் பட்டன. முதல் மண் அடுக்கு சாம்பல் நிறத்தில் பிற்காலத்தில் ஏற்பட்டதாகக் காணப்படுகிறது. இரண்டாவது மண் அடுக்கு சிவப்பாகவும் கடினமாகவும் சிறுகற்கள் கலந்தும் உள்ளது. மூன்றாவது மண்அடுக்கு மிகவும் கடினமாகவும் கறுப்பாகவும் காணப்பட்டது. இரண்டாவது மண் அடுக்கில் தாழியைப் புதைப்பதற்கான குழி தோண்டப்பட்டுள்ளது. முதல் மண் அடுக்கு இக்குழியை (Ceiling layer) மூடியுள்ளது.

கொந்தபாளையம் மட்கலங்கள்

கொந்தபாளையத்திலிருந்து சேகரித்து வரப்பெற்ற 16 மட் கலங்களில், 5 சுடுமண் தாங்கிகளும் 5 தட்டுகளும் 2 தாங்கி களோடு கூடிய கோப்பைகளும் ஈமக்குடுவை ஒன்றும் கூம்பிய கைப்பிடியோடு கூடிய மூடி ஒன்றும் அடங்கும்.

சுடுமண் தாங்கிகள்

இவை வெவ்வேறான உருவ அமைப்புகளைக் கொண் டுள்ளன. உதாரணமாக, ஒரு தாங்கி வட்டவடிவில் கலயம் போன்று காணப்படுகிறது. இத்தாங்கியின் இடைப்பகுதி சுருங்காமல் சிறிதளவு சாய்வாக இறங்கிக் கீழ்வட்டம் வெளியில் நீட்டிக்கொண்டிருப்பது போல் உள்ளது. இவற்றில் இரண்டு

தாங்கிகளில் குஞ்சம் போன்ற குறியீடு காணப்படுகிறது. மூன்று தாங்கிகள் கறுப்பு வண்ணமாகவும் இரண்டு தாங்கிகள் சிவப்பு வண்ணமாகவும் உள்ளன.

தட்டுகள்

உட்புறம் கறுப்புநிறமும் வெளிப்புறம் சிவப்புநிறமும் கொண்டு பளபளப்போடு காணப்படும் ஒருதட்டு சாப்பிடுவதற்கும், ஏதேனும் உணவுப்பொருட்களை வைத்து வழங்குவதற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். ஆதிச்சநல்லூரில் ஒரு ஈமத் தாழியில் இதுபோன்ற தட்டில் எலும்புகள் குவியலாக வைக்கப் பட்டிருந்தது. கலயங்களின் மேலும் குடுவைகளின் மேலும் மூடுவதற்கு உபயோகப்படும் மூடிகள் போன்ற தட்டுகள் நான்கு இங்கு கிடைத்துள்ளன. இவற்றில் மூன்றில் குஞ்சம் போன்ற குறியீடு காணப்படுகிறது.

ஈமக்குடுவை

இக்குடுவை உட்புறம் கறுப்பு வண்ணமும், வெளிப்புறம் சிவப்பு வண்ணமும் கூம்பிய அடிப்பகுதியும் (conical end) கொண்டு விளங்குகிறது. நன்கு சுடப்பட்டுப், பளபளப்யோடு, ஈமத்தாழியைப் போன்று காணப்படும் இக்குடுவையில் எலும் புத்துண்டுகள் வைக்கப்பட்டிருந்தன. கூம்பிய அடிப்பகுதியைக் கொண்டுள்ள இக்குடுவை சுடுமண் தாங்கிமீது வைத்து உபயோகப்படுத்தப்பட்டிருக்கலாம்.

தாங்கிகளோடு கூடிய பாளிகள்

பானங்கள் அருந்துவதற்குப் பயன் படுத்தப்பட்டுத் தாங்கி களோடு கூடிய பாளிகள் அல்லது கோப்பைகள் இரண்டு இங்கு கிடைத்துள்ளன. இவைகளின் வெளிப்புறத்தில் அலைபோன்ற அலங்காரக் கோடுகளும், வளைவுக்கோடுகளும் வெண்மையான நிறத்தில் தீட்டப்பெற்று அதன் மேல் செம்பழுப்புப் பூச்சு கொடுக்கப்பட்டுள்ளது.

கைப்பிடி கொண்ட மூடி (Lid with knob)

கலயங்கள் மற்றும் குடுவைகள்மீது மூடுவதற்குக் கூர்முனைக் கைப்பிடி கொண்ட மூடி ஒன்றும் கிடைத்துள்ளது. மேற்புறம்

கறுப்பு வண்ணம்கொண்டு காணப்படும், இதுபோன்ற கூர் முனை கைப்பிடியுள்ள செம்பாலான மூடிகள் ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ளன.

குடுவை

உருண்டையான அடிப்பகுதியும், அகன்ற இடைப் பகுதியும், குறுகிய வாயும் கொண்ட இக்குடுவை பழுப்பு நிறத் தில் பளபளப்புடன் காணப்படுகிறது. இதன் கழுத்துப் பகுதி யில் குஞ்சம் போன்ற குறியீடு காணப்படுகிறது.

ஈமத்தாழிகள்

இத்தாழிகள் அகன்ற நடுப்பகுதியும், கூம்பிய அடிப்பகுதி யும் கொண்டு சொரசொரப்பாக சிவப்பு நிறத்தில் உள்ளன. இவற்றில் எலும்புகளும், ஈமப்பொருட்களும் வைத்து, அகன்ற மூடிகொண்டு மூடிக் குழியில் வைத்துப் புதைத்துள்ளனர். சில தாழிகளின் கழுத்துப்பகுதிக்குச் சற்று கீழே ஒரு செ.மீ அகலத் திற்குக் கயிறு போன்ற (Rope design) அலங்காரமும், சிலவற் றில் விரல் கொண்டு அழுத்திச் செய்யப்பட்ட (Thump mark decoration) அலங்காரமும் காணப்படுகிறது.

ஆய்வு

கொத்தபாளையத்தில் கிடைத்த மட்கலயங்கள் யாவும் சக்கரத்தால் வனையப்பட்டவையாகும். பெரிய ஈமத்தாழிகள் மட்டும் கையால் செய்யப்பட்டவை. பானையின் உட்புறம் முழுவதும் கறுப்பாகவும், வெளிப்புறத்தில் விளிம்புப் பகுதி தவிர பிற பகுதி சிவப்பாகவும் இருக்கும் மட்கலயங்கள் கறுப்பு சிவப்பு வண்ண மட்கலயங்கள் (Black and Red ware) எனப் படும். இவ்வகை மட்கலயங்கள் இங்கு 5 கிடைத்துள்ளன. இக்கலயங்களைச் சுடும்முறை தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். சூளையில் மட்கலயங்களை ஒன்றின்மேல் ஒன்றாகத் தலை கீழாக அடுக்கிச் சுடும்போது ஏற்படும் இரசாயன மாறுதல்களால் இக்கலயங்கள் உட்புறம் கறுப்புநிறமாகவும் வெளிப்புறம் சிவப்புநிறமுமாக வண்ணம் பெறுகின்றன.

வண்ணக்கோடுகள் தீட்டி (வெண்மை) செம்பழுப்பு நிறம் பூசிய கறுப்பு சிவப்பு வண்ண மட்கலயங்கள் (Painted Russet

coated Black and Red ware) இரண்டும், உள்ளும் புறமும் கருமை நிறத்துடன் காணப்படும் கறுப்பு வண்ண மட்கலயங்கள் நான்கும் (Black ware) மட்கலயங்கள் மூன்றும் இங்கு கிடைத்துள்ளன. இவையாவும் பளபளப்புடன் காணப்படுகின்றன. சக்கரத்தில் வைத்து வனைந்து சூளையில் இட்டு எரியூட்டி, இளஞ்சூட்டில் இருக்கும்போது இக்கலயங்கள் மீது உப்பு தூவுவதால் (salt glazing) இத்தகைய பளபளப்புத்தன்மை ஏற்படுகிறது.

குறியீடுகள் (Graffiti marks)

கொத்தபாளையத்திலிருந்து சேகரித்து வரப்பட்ட 16 மட்கலயங்களையும் இராசயன சோதனைக் கூடத்தில் சுத்தம் செய்து பார்த்தபோது ஏழு கலயங்களில் குறியீடுகள் இருப்பது தெரியவந்தது.

பெருங்கற்காலம் மற்றும் துவக்கநிலை வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த மட்கலயங்களின் மேற்புறத்தில் பலவகையான குறியீடுகள் காணப்படுகின்றன. இக்குறியீடுகள் எதைக் குறிக்கின்றன; எத்தகைய கருத்துகளைத் தெரிவிக்கின்றன என்பதைச் சரியாக அறிந்துகொள்ள இயலவில்லை. பொதுவாக இவை எழுத்துக்களின் முன்மாதிரி வடிவம் எனக் கருதப்படுகிறது. இக்குறியீடுகளுக்கும் பிராமி எழுத்துக்களுக்கும் உள்ள ஒற்றுமை, வளர்ச்சிநிலைகளைப் பற்றியும் ஆராய்ச்சியாளர்கள் எழுதியுள்ளனர். இக்குறியீடுகள் குறித்து பி.பி. லால்[1] என்னும் அறிஞர் விரிவாக ஆராய்ச்சி செய்து பெருங்கற்காலக் குறியீடுகளுக்கும் அரப்பாவில் காணப்படும் களிமண் தகடுகளிலுள்ள குறியீடுகளுக்குமுள்ள ஒற்றுமையை விளக்கிக் கூறிக் கருத்துகள் தெரிவிக்கும்போது 'ஒரு குறிப்பிட்ட புதைகுழியில் ஒருகுறிப்பிட்ட குறியீடு மட்டும் அல்லாமல் பலகுறியீடுகள் காணப்படுகின்றன' என்னும் கருத்தினைத் தெரிவித்துள்ளார். இக்குறியீடுகள் எதைக் குறிக்கின்றன என்பதற்குக் கீழ்க்கண்டவாறு கருத்துகள் கூறப்பட்டுள்ளன.

1. பல குயவர்கள் சேர்ந்து தங்களது பானைகளை ஒரே சூளையில் இடும்போது தங்கள் மட்கலயங்களைப் பிரித்து அறிந்துகொள்வதற்குக் குறியீடுகள் இட்டுக் கொள்வது உண்டு

எனவே இதைக் குயவர் குறி என்று கூறுவது மரபு. ஆனால் பெரும்பாலும் இக்குறியீடுகள் கலயங்கள் சுட்ட பின்னரே பொறிக்கப்பட்டவை. கலயங்கள் சுடப்பட்ட பின்னர் குயவர்கள் குறியீடுகள் பொறிப்பது தேவையில்லாதது.

2. மட்கலயங்களை வாங்கிப் பயன்படுத்தியவர்கள் தங்களது உடைமை எனக்குறிக்க குறி இடுவதுண்டு. எனவே இவற்றை உடைமைக்குறி என்றும் கூறலாம். சில கலயங்களில் சுடுவதற்கு முன்பே குறியீடு பொறிக்கப்பட்டுள்ளது. கலயங்களைச் சுடுவதற்கு முன்னர் உடைமைக் குறி பொறிப்பது இயலாததாகும்.[2]

ஒரே தாழியிலிருந்து சேகரிக்கப்பட்ட மட்கலயங்களைத் தனியாகவும், பின்னர் பிறரால் சேகரித்துக்கொடுக்கப்பட்ட கலயங்களைத் தனியாகவும் ஆணையர் திரு. சோமசுந்தரம் அவர்கள் பிரித்து வைத்திருந்தார்.

ஒருகுறிப்பிட்ட தாழியிலிருந்து கிடைத்த மட்கலயங்களில் ஆறில் குஞ்சம் அல்லது இலைகள் அற்ற சிறிய மரக்கிளை போன்ற குறியீடு காணப்படுகிறது. பிறரால் சேகரித்து கொடுக்



குறியீடு எண். 1



குறியீடு எண். 2

கப்பட்ட மட்கலயங்களில் கோப்பை வடிவிலான கலயத்தின் விளிம்புப் பகுதியில் அரை நீள்வட்டத்தின் நடுவில் ஒரு நேர் கோடு வரைந்திருப்பது போன்ற குறியீடு காணப்படுகிறது.

இவ்விரண்டு குறியீடுகளும் கலயங்கள் சுட்டபின்னர் பொறிக்கப்பட்டவை. முதலில் கூறப்பட்ட குஞ்சம் போன்ற குறியீடு பெருங்கற்காலக் கலயங்களில் பல இடங்களில் கிடைத்துள்ளது. குறிப்பாகக் கோவை, சேலம், ஈரோடு மாவட்டங்களில் இத்தகைய குறியீடு பொறித்த மட்கலயங்கள் பல கிடைத்துள்ளன. கர்நாடக மாநிலத்தில் பிரம்மகிரி, சந்திராவளி போன்ற இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வில் கிடைத்த மட்கலயங்களிலும்,[3] அரப்பாவில் கிடைத்த மட்கலயங்களிலும் இதுபோன்ற குறியீடு காணப்படுகிறது.

இரண்டாவதாக அரை நீள்வட்டத்தின் நடுவில் ஒரு நேர் கோடு வரைந்திருப்பது போன்ற குறியீடு இதுவரை எங்கும் கிடைக்கவில்லை. எனவே, இக்குறியீடு பெருங்கற்காலத்தைப் பற்றி அறிவதற்குப் பயன்படும் குறியீடுகளோடு புதிதாகச் சேர்ந்துள்ளது.

ஒரு குறிப்பிட்ட ஈமச்சின்னத்தில் ஒரு குறிப்பிட்ட குறியீடு மட்டுமல்லாமல் பல குறியீடுகள் காணப்படுகின்றன என்று பி.பி. லால் அவர்கள் கூறுவது போலல்லாமல் கொத்தபாளையத்தில் ஒரு குறிப்பிட்ட தாழியிலிருந்து சேகரிக்கப்பட்ட கலயங்களில் ஒரே மாதிரியான குறியீடு மட்டுமே காணப்படுவது சிறப்பானதாகும். இக்குறியீடு உடைமையாளரின் பெயரைக் குறிக்கிறதா அல்லது குலம், (Totemic symbol) இனம் போன்றவற்றைக் குறிக்கிறதா என உறுதியாக அறிவதற்கு இவ்விடத்தில் விரிவான அகழ்வாய்வுகள் மேற்கொண்டு கிடைக்கும் மட்கலயங்களின் குறியீடுகளை ஒப்பு நோக்கி ஆய்வு செய்தால் உண்மைகளை அறிந்து கொள்ள இயலும்.

அடிக்குறிப்புகள்

1. From Megalithic to the Harappa tracing back the Graffiti on pottery B.B. Lal - Ancient India No. 12. pp 4-24.
2. பெருங்கற்காலம் - டாக்டர் இரா. நாகசாமி, தொல்பழங்காலம் - பக். 248
3. Brahmagiri and Chandravalli 1947 Megalithic and other Cultures in the Chitaldrug District, Mysore State, R.E.M. Wheeler - page 213.

கல்வெட்டியல்

அடிக்கீழ்தளம்

தி. சுப்பிரமணியன், எம்.ஏ.,
காப்பாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, கோயம்புத்தூர்

பண்டைய காலத்திலிருந்து பல பெருவழிகள் போக்கு வரத்துக்காக இருந்துள்ளன. இந்தப்பெருவழிகளில் போர் புரியச் சென்ற படைவீரர்கள், சமயத்தைப் பரப்பச்சென்ற மத குருமார்கள், வணிகர்கள் போன்ற பல பிரிவினர்கள் பயணம் செய்துள்ளனர். பெருவழிகள் காடுகளினூடேயும் மலைப் பகுதிகளினூடேயும் சென்ற காரணத்தால் பயணிகளின் காவலுக்காக வீரர்கள் பெருவழிகளில் இருந்துள்ளனர். இவர் களில் அரசனால் நியமிக்கப்பட்டவர்கள், வணிகர்களுக்காகச் சென்ற வீரர்கள், சுங்கம் வசூலித்த வீரர்கள் போன்று பல பிரிவினர்கள் இருந்துள்ளனர். இத்தகைய வீரர்களே "அடிக் கீழ்தளம்" அமைய முன்னோடிகளாக இருந்துள்ளார்கள். மத்தியகாலக் கல்வெட்டுகளில் பெருவழிகளில் இருந்த வீரர் களுக்குப் பல்வேறு பெயர்கள் இருந்ததாகத் தெரியவருகின்றது. எறிவீரர்கள், செட்டிவீரப்புத்திரர்கள், அடிக்கீழ்தளத்து வீரர்கள் போன்றவர்கள் சிலர். இவர்களில் அடிக்கீழ்தளத் திலிருந்த வீரர்களைப் பற்றி இங்கே காண்போம்.

சங்க காலம்

சங்க இலக்கியங்களில் வணிகர்கள் கழுதைகள், எருதுகள், வண்டிகள் ஆகியவற்றில் வணிகப் பொருள்களை ஏற்றிக் கொண்டு தரைவழியாகச் சென்று வாணிபம் செய்துள்ளனர். இவர்கள் போகின்ற வழிகளில் வழிப்பறிக் கொள்ளைக்காரர் வந்து கொள்ளையடித்துச் சென்றிருக்கின்றனர். வழிகளில் வழிப்பறி செய்யும் கொள்ளைக்காரர்களுக்கு அஞ்சிச் சென்ற வணிகர்களைப் பற்றி அகநானூற்று பாடல் களில் காணலாம்.[1] வணிகர்கள் ஆறலைக்கள்வர்களிட மிருந்து பாதுகாத்துக்கொள்ளத் தங்களுடன் வீரர்களை

அழைத்துச் சென்றனர். இதை அகநானுற்றுப் பாடலில் பார்க்கலாம்.

"களரி பரந்த கல்நெடு மருங்கில்
விளரூன் தின்ற வீங்குசிலை மறவர்
மைபடு திண்டோள் மலிர ஆட்டிப்
பொறைமலி கழுதை நெடுநிரை தழீஇய
திருந்துவான் வயவர் அருந்தலை துமித்த
படுபுலாக் கமழும் ஞாட்பு"

(அகம்-89-9-14.)

மேற்கண்ட பாடலில் சாத்துடன் சென்ற வயவர்களின் தலையைக் கள்வர்கள் துண்டித்தார்கள் என்றும் அதனால் பெருவழிகளில் பிணமும், நாற்றமும் மிக்கிருந்தது என்றும் கூறப்படுகின்றது. இப்பாடலில் வரும் "வயவர்" என்பது வணிகரைக் குறிப்பதாகும். வணிகர்கள் பண்டங்களைக் கழுதையில் ஏற்றிக்கொண்டு செல்வார்கள். அவர்களுடன் வீரர்கள் இருக்கின்றனர். அவர்களைச் சாத்து என்று கூறாது வயவர் என்று கூறினர். இதனால் சங்ககாலம் தொட்டு வணிகர்களுடன் பாதுகாப்பிற்கு வீரர்களும் சென்றுள்ளனர் என்பது விளங்கும் மேலும் தொல்காப்பியமும் வணிகர் படை வைத்திருந்ததை எடுத்துரைக்கின்றது. இவற்றைத்தவிர மதுரைக் காஞ்சி, பெரும்பாணாற்றுப்படை போன்றவற்றிலும் குறிப்புகள் காணப்படுகின்றன. மதுரைக்காஞ்சி பெருவழியில் செல்கின்ற வணிகர்களுக்குக் காவலாக வீரர்கள் இருந்தனர் என்பதையும், வீரர்கள் தங்களுடைய கைகளில் வில் வைத்திருந்தனர் என்பதையும் விளக்குகின்றது.[2] வீரர்கள் புல்வேயப்பட்ட குடிசைகளில் இருந்துள்ளனர். என்பதையும் மான்தோலை படுக்கையாகப் பயன்படுத்தியதையும் தெரிவிக்கின்றது.

பல்லவர் காலம்

பல்லவர் காலக் கல்வெட்டுகளிலும், செப்பேட்டிலும் பெருவழி வீரர்களைப் பற்றிச் சில செய்திகள் கிடைக்கின்றன. தர்மபுரி மாவட்டத்தில் கானம்பட்டியில் உள்ள நடுகல் "வதி செலாவன் கல்" என்று கூறுகின்றது.[3] இது சிம்மவிஷ்ணு காலத்தைச் சார்ந்ததாகும். 'வதி' என்றால் 'வழி' என்றும் பொருள்[4]. ஆகவே இந்த நடுகல் வழியில் செல்கின்ற வீரனுக்கு

எடுக்கப்பட்ட நடுகல் என்பது விளங்குகிறது. எனவே, வழிச் செல்வான் பெருவழியில் இருந்த வீரனாக இருந்திருக்க வாய்ப்புகள் உள்ளன. இரண்டாம் நந்திவர்மனின் புல்லூர்ச் செப்பேட்டில் "பிரமதேயத்தில் நாடுகாப்பானும், வியவனும் புகப்பெறாமையும்" என்று வருகின்றது[5]. 'வியவன்' என்பதற்கு 'வழி செல்வான்' என்றும் 'திண்ணியன்' என்றும் சொல் அகராதி உரைக்கின்றது.[6] இதில் வழிசெல்வான் என்ற பொருளை எடுத்துக்கொண்டால் செப்பேட்டில் வருகின்ற 'வியவன்' என்பவனைப் பெருவழியிலிருந்த வீரனாக எடுத்துக் கொள்ளலாம். ஆகவே சங்க காலத்தில் இருந்த வீரர்களைப் போன்று பல்லவர் காலத்திலும் பெருவழிகளில் வீரர்கள் நிலைபெற்றிருந்தமை தெரியவருகின்றது.

அடிக்கீழ்தளம்

மத்திய காலத்திலும் பெருவழிகளில் வீரர்கள் இருந்ததைப் பற்றிக் கல்வெட்டு வாயிலாக அறிகிறோம். கொங்கு நாட்டுப் பகுதிகளில் கிடைக்கின்ற மத்திய காலத்தைச் சார்ந்த கல் வெட்டுகளில் 'அடிக்கீழ்தளம்' என்ற சொல் அதிகமாக இடம் பெற்றுள்ளன. இந்தப் பகுதியைத் தவிர வேறு பகுதிகளில் அரிதாகவே காணப்படுகின்றது. 'தளம்' என்பதற்குப் படைகள் தங்கும் இடம் என்று பொருள் கூறப்பட்டுள்ளது.[7] 'தள அதிகாரி' என்பதற்குப் 'படை அதிகாரி', 'தளவாய்' என்று தென் னிந்தியக் கோயில் சாசனம் கூறுகின்றது.[8] ஆகவே படைகள் தங்குமிடம் தளம் என்பது தெளிவாகின்றது. எஸ். வைத்தியநாத ஐயர் அவர்கள் அடிக்கீழ்தளம் என்பதற்குப் படைகள் தங்கு மிடம் என்று பொருள் கொள்கிறார். அடிக்கீழ்தளம் என்ற சொல் வணிகக் கல்வெட்டுகளில் அதிகமாகக் காணப்படுகின்ற காரணத்தாலும், இப்பொழுது அடிக்கீழ்தளம் பற்றிய கல் வெட்டுகள் கிடைக்கின்ற ஊர்கள் தற்போதைய தேசீய நெடுஞ் சாலைகளில் இருக்கின்ற காரணத்தாலும் இது பெருவழியில் இருந்துள்ளது என்ற முடிவுக்கு வரமுடிகின்றது. ஆகவே அடிக் கீழ்தளம், பெருவழிகளில் வணிக வீரர்கள் தங்கிய இடம் என் பதில் சந்தேகத்திற்கு இடம் இல்லை.

வாணிபத்திற்கு இந்த வீரர்கள் இன்றியமையாதவர்களாக இருந்திருக்கின்றனர். ஆகவேதான் சங்ககாலத்தில் வணிகர்கள்

துணைக்காக வீரர்களைத் தங்களுடன் அழைத்துக்கொண்டு சென்றதாகக் கூறப்படுகின்றது.[9] ஆனால் மத்திய காலத்தில் இவர்கள் அடிக்கீழ்தளத்தில் தங்கி இருந்துள்ளனர் என்று கூற வேண்டியுள்ளது. கல்வெட்டுக்கள் அடிக்கீழ்தளத்தை கூறும் பொழுது 'கரையான அடிக்கீழ்தளம்' என்றும் 'அடிக்கீழ்தளத்து அய்நூற்றுவர்' என்றும் குறிப்பாக உரைக்கின்றது.[10] எனவே இங்கு தங்கிய வணிகர்களுக்கு இவர்கள் காவலாக இருந்துள்ளனர்.

கொங்கு நாட்டில் அடிக்கீழ்தளம்

மத்தியக் காலத்தில் கொங்கு நாட்டில் பல பெருவழிகள் இருந்துள்ளன. அவை முக்கியமான நகரங்கள் அனைத்தையும் இணைத்துள்ளன. ராஜகேசரிப் பெருவழி, காரைத்தொழு பெருவழி, வஞ்சிப் பெருவழி, சேரனை மேற்கொண்ட சோழப் பெருவழி, அசுரர் மலைப் பெருவழி, வீரநாராயணன் பெருவழி, சோழமாதேவிப் பெருவழி, ராஜமகேந்திர பெருவழி, கொழுமம் பெருவழி, போன்றவைகள் கல்வெட்டுகளில் கிடைக்கின்றன.[11] இத்தகைய பெருவழிகள் கிடைக்கின்ற காரணத்தால் கொங்கு நாட்டில் அதிகமான அளவு வியாபாரம் நடைபெற்றிருக்க வாய்ப்புகள் உள்ளன. ஆகவே வணிகர்களின் காவலுக்குப் பல அடிக்கீழ்தளங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அடிக்கீழ்தளம் பயின்று வரும் கல்வெட்டுகள் ஆறு கிடைத்திருக்கின்றன. அவைகள் 1 பல்லடம் வட்டம் பெருமாநல்லூர், 2 தாராபுரம் வட்டம் எல்காம்வலசு, 3 திருமுருகன்பூண்டிக் கல்வெட்டு 4 நடுவச்சேரிக் கல்வெட்டு, 5 அன்னூர் சிவன் கோவில் கல்வெட்டு போன்றவைகளாகும்.[12] இந்தக் கல்வெட்டுகள் கிடைக்கின்ற ஊர்கள் அனைத்தும் தற்போதைய தேசீய நெடுஞ்சாலைகளிலே இருக்கின்றன என்பது குறிப்பிடப்படவேண்டிய ஒரு கருத்தாகும். தர்மபுரி மாவட்டம், கொத்தூரிலுள்ள கல்வெட்டில் அடிக்கீழ்தாளம் வருகின்றது. இந்த ஊரும் பண்டைய பெருவழியில் இருக்கின்றது.

பெருவழியில் இருந்த வீரர்கள் யாரால் நியமனம் செய்யப்பட்டனர், இவர்களுடைய தகுதிகள், செய்த பணிகள், எந்த எந்த பிரிவைச் சார்ந்த வீரர்கள் இருந்தனர், இவர்களுக்கு ஊதியம் கொடுத்தது யார் என்பது பற்றிய விரிவான செய்திகள்

கிடைக்கவில்லை. எனினும் இவர்களுக்கு வணிகர்களே ஊதியம் கொடுத்திருக்க வேண்டும் என்று கூறலாம். ஏனெனில் வியாபாரிகளின் நலன்கருதி அவர்களுடன் சென்று கொள்ளைக்காரர்களை எதிர்த்துப் போரிட்டு வியாபாரம் செய்ய வழிவகுத்துள்ளனர். இந்த வீரர்களுக்கென்று அரசன் தானமோ, ஊதியமோ கொடுத்ததாகச் சான்றுகள் இல்லை. இவற்றை எல்லாம் நோக்கும் போது இவர்கள் வணிகர்களில் ஒரு பிரிவினராகவே இருந்திருக்க வேண்டும் என்று கூறுவது மிகவும் பொருத்தமானதாகும்.

பழங்கரை

பல்லடம் வட்டம், பெருமாநல்லூர்க் கல்வெட்டு 'வடபரிசார நாட்டிற் கரையானடிக் கீழ்தளத்திருக்கும் வியாபாரி' என்று வருகின்றது. வடபரிசார நாடு என்பது அவிநாசி, திருமுருகன் பூண்டி போன்ற பகுதிகளைத் தன்னகத்தே கொண்டதாகும்.[13] கரையான அடிக்கீழ்தளம் என்பதிலுள்ள 'கரை' என்ற ஊரில் அடிக்கீழ்தளம் இருந்திருக்கின்றது. 'கரை' என்று வழங்கப்பட்ட ஊர் எது என்று நோக்கும் போது கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. திருமுருகன்பூண்டிக் கல்வெட்டில் கரையான அடிக்கீழ்தளம் வருகின்ற காரணத்தால், திருமுருகன் பூண்டியின் ஒரு பகுதியாக அடிக்கீழ்தளம் இருந்துஇருக்க வேண்டும் என்று ஒரு கருத்து உள்ளது.[14] ஆனால் நடுவச்சேரிக் கல்வெட்டிலும் கரையான அடிக்கீழ்தளம் என்று வருகின்றது. ஆகவே இது அவ்வளவு பொருத்தமானதாகத் தெரியவில்லை. அவிநாசி அருகில் இப்பொழுது 'பழங்கரை' என்ற ஒரு ஊர் உள்ளது. இந்த ஊர்க் கல்வெட்டுகளில் இது 'பழங்கரை' என்று குறிக்கப்படுகின்றது. ஆகவே இந்தப் பழங்கரையே கல்வெட்டில் வருகின்ற கரையான அடிக்கீழ்தளம் என்று கூறலாம். இதுமட்டுமின்றி இந்த ஊர் கோவை, கள்ளிக்கோட்டை தேசியப்பெருவழியில் அமைந்துள்ளது. மற்ற அடிக்கீழ் தளங்கள் எங்கெங்கு இருந்தன என்று கூறுவதற்குப் போதுமான சான்றுகள் கிடைக்கவில்லை.

வணிகர்கள் நாடோடிகள் போன்று திரிந்து சென்று (Itinerant trade) வியாபாரம் செய்துள்ளனர். இவ்வாறு சென்றபோது அடிக்கீழ்தளத்தில் தங்கியுள்ளனர். அப்பொழுது

அடிக்கீழ்தளத்துக்கு அருகில் உள்ள ஊர்களுக்குச் சென்று வியாபாரம் செய்துள்ளனர். அதுமட்டுமின்றி அடிக்கீழ்தளத்திலும் வியாபாரம் செய்தனர். இதுபோன்று பல அடிக்கீழ்தளங்களில் தங்கி வியாபாரம் செய்த வண்ணமாக நகரங்களை அடைந்துள்ளனர். ஒவ்வொரு வியாபாரக் குழுவும் இத்தகைய முறையையே கையாண்டிருக்கவேண்டும்.

நாட்டைக்காக்க அண்டை நாடுகளுடன் போரிட்டு வீர மரணம் எய்தியவர்களைப் பற்றி நிறையச் சான்றுகள் கிடைக்கின்றன. ஆனால் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிய வணிகர்களுக்கு ஊன்றுகோலாக இருந்து உயிர் துறந்த வீரர்களைப் பற்றி முழுமையான செய்தி கிடைக்கவில்லை. இந்த வீரர்கள் சங்ககாலத்திலிருந்து வணிகர்களுக்கு முதுகெலும்பாக இருந்துள்ளனர் என்று கூறுவது பொருத்தமானது.

அடிக்குறிப்புகள்

1. அகநானூறு-245-5-7.
2. பெரும்பாணாற்றுப் படை-73,82.
3. பல்லவர் செப்பேடுகள் முப்பது-பக்கம் 203.
4. Lexicon vol. VI- 3689.
5. தர்மபுரி கல்வெட்டு தொகுதி I எண். 76 பொறுப்பாசிரியர். டாக்டர் இரா. நாகசாமி.
6. Lexicon vol. VI 3489.
7. கம்பராமாயண அகராதி III-ப.51. அ.செ. சுந்தரராஜன்.
8. தென் இந்தியக் கோயிற் சாசனங்கள்-பாகம் 3, தொகுதி-2. பக். 1441.
9. பழங்காலத் தமிழர் வாணிகம், மயிலை சீனி-வேங்கடசாமி, பக்கம். 29.
10. கோவை பதிவு அலுவலர் கல்வெட்டுப் பதிவேடு - இரா. பூங்குன்றம்.
11. Ancient Highways (not published). R. Poongundren.
12. கோவை பதிவு அலுவலர் கல்வெட்டு பதிவேடு - இரா. பூங்குன்றன்.
13. கொங்கு நாட்டு வரலாறு-கோவை கிழார்.
14. உரையாடலின்போது கூறியவை. பதிவு அலுவலர் இரா. பூங்குன்றன்.

அரசன் ஆணை

ஆர். வசந்தகல்யாணி, எம்.ஏ.,
கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28

நம் தமிழ் மன்னர்கள்,

குடிதழிஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கு முலகு

என்பதுணர்ந்து மக்கள் மனமறிந்து, அவர் தம் குறை கேட்டு, ஆட்சி புரிந்தனர் என்பதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இங்கு காட்டப்படும் ஓரிரு கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டு நாம் அறியத்தக்க செய்திகள்:

1. சோழ, பாண்டிய மன்னர்களின் அரண்மனைகள் இருந்த ஊர்கள்.

2. அவ்வரண்மனையினுள் இருந்த ஒவ்வொரு இடத்திற்கும் ஒவ்வொரு பெயர். அங்கிருந்த அரசிருக்கைகளுக்கும் தனித் தனிப் பெயர்கள்.

3. அரசனுடைய எளிமையும், அவனை மக்கள் எவ்விதத் தடையுமின்றிச் சென்று பார்த்துக் குறை தீர்த்த இயல்பு.

4. அரசனுக்கு அல்லும் பகலும் மக்கள் நலனில் இருந்த அக்கறை.

5. ஆணைகள் எங்கெங்கு பிறப்பித்திருந்தானோ அவ்வவ் விடங்களைத் தெளிவாகக் கூறி, உடனுக்குடன் அவ்வாணைகள் நிறைவேற்றப்பட்ட இயல்பு ஆகியவை ஆகும்.

கௌடிலியர் தம் அர்த்த சாத்திரத்தில் அரசன் நாள் தோறும் செய்யத்தக்க காரியங்கள் பற்றிக் கூறுகிறார். பொழுதினைக் கூறுகளாகப் பிரித்து அதில் பகற்கூறு என்பதை

எட்டாக்கி ஒவ்வொரு கூறிலும் இன்னின்ன காரியங்களைச் செய்தல் வேண்டுமென்கிறார்.[1]

இதில் சாணக்கியரின் கூற்றுப்படி அரசன் பகற்கூறில் ஒரு சிறு பகுதி மட்டுமே பொது மக்கள் குறை கேட்க ஒதுக்கப் படுகிறது. ஆனால் தமிழ் மன்னர்கள் காலங் கருதாது செல்லு மிடங்களிலெல்லாம் மக்கள் குறை கேட்டுத் தீர்த்தனர். உண்ணுமிடத்தில், திருமஞ்சனசாலையில், விளையாட்டு அரங்கில், தோப்பில் இளைப்பாறுகையில், பள்ளியறை யில், இறைவன் திருக்கோயிலில் என்று இடமும் காலமும் பாராது அரசன் நிர்வாகப் பொறுப்பில் ஈடுபட்டான். அவ்வாறு அரசன் குடிமக்கள் குறை கேட்டு அதனைத் தீர்த்து வைக்கும் நேரம் எதுவாயினும் அவன் அருகிலேயே இருந்து அவன் சொல்வதையெல்லாம் கேட்டு உடனுக்குடன் ஆணையெழுதும் திருவாய்க்கேழ்வி என்பான் ஓலையில் எழுதி உடன் நடவடிக்கை எடுத்தான். அவ்வாறு எடுத்து எழுதும் போது மிகவும் கவனமாக அரசன் எங்கு, எந்த நேரத்தில் யாருக்கு அளித்தான் என்பது தெளிவாக எழுதப்படுகிறது.

உண்ணுமிடத்தில்

உத்தம சோழன் கல்வெட்டொன்று; "ஸ்வஸ்திஸ்ரீ கோனே ரின்மை கொண்டான் திருநறையூர் நாட்டு நாட்டார்க்கும் பிரம்மதேயக் கிழவர்க்கும் தேவதான பள்ளிச்சந்தக் கணி முற்றூட்டு வெட்ட பேறூர்களிலார்க்கும் நகரங்களிலார்க்கும் யாண்டு 9-ஆவது நாள் 280 னால் பழையாற்று நம்வீட்டிலுள்ளால் ஆச்சி கோயிலின் முன்பில் கூடத்து நாம் உண்டிருக்க"[2] எனத் தொடர்கிறது. இது சிறு குளத்தாருடை யானுக்கு ஜன்மக் காணி அளித்தது பற்றிக் குறிக்கிறது. அரசன் தன் அரண்மனையில் தேவியின் இருப்பிடத்தில் உணவு உட் கொண்டிருக்கும் போது ஆணையிட்டிருக்கிறான். இதுபோலவே முதல் இராஜேந்திரன் காலத்தில் அவன் கொடுத்த ஆணை:

". . . . நமக்கு யாண்டு முப்பதாவது நாள் நூற்றொரு பதினால் காஞ்சீபுரத்து நம் வீட்டில் உள்ளால் சித்திர மண்டபத்தில் ராஜேந்திர சோழ பிரம்மாதிராஜனில் நாம் உண்ணுவிருந்து ராஜேந்திர சிங்க வளநாட்டு மண்ணி நாட்டு

சோழ மார்த்தாண்டச் சருப்பேதி மங்கலத்து அளந்தபடி . . .[3] எனத் தொடர்கிறது. இங்கு இராஜேந்திர சோழன் காஞ்சீபுரம் அரண்மனையில் ராஜேந்திர சோழ பிரம்மாதிராஜனில் அமர்ந்து உண்ணும் பொழுது அளித்த ஆணையைக் காண்கிறோம்.

திருமஞ்சன சாலையில்

மக்கள் நலனிலும் இறைவன் திருப்பணியிலும் அரசர்களுக்குப் பெரும் அக்கறை இருந்தது. தனிப்பட்டவரும் கோயில் தொடர்பானவர்களும் அரசனை எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் கண்டு முறையிட்டு தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளலாம். அரசன் திருமஞ்சனசாலையிலிருந்தபோது வெளியிட்ட ஆணையைக் கீழ்வரும் கல்வெட்டு விளக்கும்:

"கோச்சடையவன்மரான உடையார் சோழ பாண்டிய தேவர் ராஜேந்திரசோழபுரத்துக் கோயிலுள்ளால் திருமஞ்சன சாலையில் பள்ளிப்பீடத்து எழுந்தருளியிருந்த போது இராஜராஜப் பாண்டி நாட்டு உத்தமசோழ வளநாட்டு முள்ளி நாட்டு நிகரிலிசோழ சதுர்வேதிமங்கலத்து தென்கரையில் எழுந்தருளி இருக்கும் கைலாசமுடையார்க்கு"[4] தேவதான இறையிலி நிலம் அளிக்கிறான்.

தோப்பில்

அரசர்கள் ஆங்காங்கு ஊர்களுக்குச் செல்லும்போது ஓய்வுக்காகத் தங்குவதுண்டு. முதற்குலோத்துங்கன் காஞ்சியில் உள்ள அன்பில் என்ற தோப்பில் ஓய்விற்காக அமர்ந்திருக்கிறான். அப்போது இறையிலி நிலமளித்துள்ளான் என்பதை ஒருகல்வெட்டு குறிப்பிடுகிறது.[5] இதே போல் இன்னொரு கல்வெட்டு குலசேகர பாண்டியன் (1190-1217) களக்குடியில் எழுந்தருளி இருந்தபோது வெளியிட்ட ஆணையாகும். இச் செயல் ஒரு நாடகக் காட்சிபோல் விளக்கப்படுகிறது.

"ஸ்ரீ கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலசேகர தேவற்கு யாண்டு 9 நாள் 1430 னால் களக்குடியில் எழுந்தருளியிருக்க . . ."
(அரசன் எழுந்தருளியிருக்கிறான் அவனிடம் மந்திரி உரைக்கிறான்).

"... நாலாமாண்டு முதல் அந்தராயம் உட்படத் தேவதான இறையிலியாக இடப் பெற வேணுமென்று ஐய்யன் காலிங்கராயர் நமக்குச் சொன்னமையில் ... (அரசன் அதனைக் கேட்டு உடன் ஆணை தருகிறான்).

"இறையிலியாக இடுகவென்றும் இப்படி சந்திராதித்தவரை செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிவித்துக் கொள்க வென்று திருவாய் மொழிந்தருளினபடி ... (அந்த ஆணை உடனடியாகச் செயல்படுகிறது)" ... அந்தராயம் உள்படத் தேவதான இறையிலியாக இடுக நங்கேள்வியும் வரியிலார் எழுத்திட்ட உள்வரியும் தரச்சொன்னோம்..."

இவ்வாறு ஒரே கல்வெட்டில் அரசன் ஆணை செயல்பட்ட விதம் தெளிவாக விளக்கப்படுகிறது. மேலும் மன்னன் ஒரு குறிப்பிட்ட ஆட்சியாண்டில் எங்கு இருந்தான், எந்த ஊர் களுக்குச் சென்றான் என்ற வரலாற்றுக் குறிப்புக்களும் நமக்குக் கிடைக்கின்றன.

இறைவன் திருக்கோயிலில்

விக்ரம சோழன் திருவிடைமருதூர்க் கோயிலில் அமர்ந் திருந்த போது அக்கோயிலுக்குக் கொடுத்த தானம் பற்றி ஒரு கல்வெட்டு குறிக்கிறது:

"...கோப்பரகேசரி பற்மராம திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீவிக்ரம சோழதேவர் திருவிடைமருதூருடையார் ஸ்ரீகோயிலில் தியாகசமுத்திரன் திருவெடுத்துக் கட்டிலில் சோழ கோனில் எழுந்தருளியிருந்து செய்யத் திருவாய் மொழிந்தருளினபடி உடையார் திருவிடைமருதூர் கோயிலில் விக்ரம சோழன் திருமாளிகைக்குள்ளுக் கோயிலிலேய் எரியக் கடவதாக நாம் வைத்த எட்டு நிலையன் விளக்கு இருபதினால் விளக்கு...".[6]

இதேபோன்று மன்னார்கோயில் கோபாலசாமி கோயிலில் உள்ள கல்வெட்டொன்றில் ஜடாவர்மன் சுந்தரசோழ பாண்டியனின் 16-ஆம் ஆட்சியாண்டில் சேரமன்னன் ராஜராஜ தேவர் இத்தேவர் கோயிலில் வாசல் கோபுரத்து மேல் நிலை எழுந்தருளியிருந்து ஒரு ஆணையிடுகிறான்.[7]

பள்ளியறையில்

மக்கள் நலனில் பெருங்கவனம் செலுத்தி பள்ளியறைக் கட்டிலில் படுக்கச் செல்லும் நேரம் வரையிலும் பொது மக்களையும், மந்திரிகளையும் கண்டு ஆலோசனை கூறியும் ஆணைகள் இட்டுமிருக்கிறான். ஜடாவர்மன் ஸ்ரீவல்லவனின் 4-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று அவ்வரசனின் நாலாவது பிள்ளையார் சுந்தரபாண்டிய தேவர் ஆண்மாநாட்டு அறுகைக் குளத்தூரில் எழுந்தருளியிருந்த போது சுந்தர பாண்டியச் சதுர்வேதி மங்கலத்து சபையாருக்கு அளித்த நிவந்தம் பற்றிக் குறிக்கிறது. அவ்வரசன் உள்ளாலைப் பள்ளியறைக் கூடத்துப் பள்ளிக் கட்டிலில் எழுந்தருளியிருந்து இவ்வாணையைத் தருகிறான்.[8]

விளையாட்டு அரங்கில்

சோழ பாண்டிய நல்லூர் என்ற பெயரில் ராஜேந்திர சோழ விண்ணகர் தேவர்க்கு இறையிலியாக நிலம் அளிக்கிரான் சுந்தரபாண்டிய தேவர். இந்த தானத்தை அரசன் ராஜேந்திர சோழபுரத்துக் கோயிலின் உள்ளாலை ஆட்டத்து வெளி மேலை மண்டபத்து (open ground) எழுந்தருளியிருந்த போது தருகிறான். இங்கிருந்த படியே மற்றொரு ஆணையைத் தரும் செய்தியை இன்னொரு கல்வெட்டு மூலம் அறிந்துகொள் கிறோம்.[9]

மாடக் குளக்கீழ் மதுரையில்

இங்குள்ள அரண்மனையில் அரச பீடத்திற்குக் கலிங்கத்த ரையனிலிருந்து பாண்டிய மன்னர்கள் குறிப்பாக ஸ்ரீவல்லபன் நிறைய தானங்களையும், சிறப்புகளையும் செய்துள்ளான். இவ்வரண்மனையிலுள்ள அழகிய பாண்டியன் கூடத்துப் பள்ளிக்கட்டில் பாண்டிய ராஜனிலும், உள்ளாலை பள்ளிப் பீட முனையதரையனிலிருந்தும், பள்ளியறைக் கூடத்துப் பள்ளிப் பீடம் மழவராயனில் எழுந்தருளி இருந்தும், நாடக சாலையில் எழுந்தருளியிருந்த போதும் ஏராளமான ஆணைகள் இடப் படுகின்றன.

இவ்வாறு மன்னர்களை மக்கள் சென்று காண்பதோ, அல்லது அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதோ கடினமான

செயலன்று. அரசனிடம் அணுக்கமாக உள்ளவர்கள் மூலமோ, நேராகவோ சபையாரோ, தனிமனிதரோ அணுகிக் காரியங்களை முடித்துக் கொண்டனர். அரசனின் ஆணைகளும் விரைந்து, சரியான முறையில் செயல்பட்டன. அரசன் மக்கள் குறைகளை நேரில் தெரிந்து கொண்டு உடனுக்குடன் ஆணைகள் மூலம் அதைத் தீர்த்தான். மற்றும் வரலாற்றுக்குத் தேவையான முறையில் அரசன் எங்கெங்கு சென்று வந்தான், என்பன போன்ற விவரங்களையும் நம்மால் உணரமுடிகிறது. இவ் வாணைகள் வரலாற்றுக்கு இன்றியமையாத ஆதாரங்களையும் அளித்து நிற்கின்றன என்றால் அது மிகையாகாது.

அடிக்குறிப்புகள்

1. கௌடலியரின் அர்த்தசாஸ்திரம் பக். 109
2. S.I.I. vol XXIII No. 257
3. S.I.I. vol XXIII No. 48
4. S.I.I. vol XIV No. 194
5. S.I.I. vol XVI No. 207
6. S.I.I. vol XXIII No. 276
7. S.I.I. vol XIV No. 154
8. S.I.I. vol XIV No. 205
9. S.I.I. vol XIV No. 145. 157

TAMIL NADU STATE DEPARTMENT OF ... MADRAS-28.
LIBRARY.
ACC No. 10264
Date ...

ஓம்படைக்கிளவி

பொ இராசேந்திரன், எம்.ஏ.,
கல்வெட்டாய்வாளர்
திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை.

அறம் போற்றி வாழ வேண்டும் என்பதனை வலியுறுத்தும் வள்ளுவர்,

அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கு இல்லை கேடு (குறள்: 41)

என்கிறார். "ஈதல் இசைபடவாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" (குறள்: 241) என்பதுணர்ந்து பலதானங்கள் செய்யப்பட்டுள்ளன. இங்ஙனம் வழங்கப்பட்டுள்ள தானங்கள் அனைத்தும், சந்திர சூரியன் உள்ளவரை, புல்லும் பூமியும் உள்ளவரை, கல்லும் காவிரியும் உள்ளவரை என்றென்றும் பாதுகாக்கப்பட வேண்டியவை. இதனை வலியுறுத்தும் வகையில் தானங்களைக் குறிக்கும் ஆவணங்களின் இறுதிப் பகுதியாக ஓம்படைக்கிளவி காணப்படுகிறது. 'அறத்தைப் போற்றி வாழ்மின்,' 'அறத்தாற் போற்றி வாழ்மின்,' என்று வலியுறுத்த வந்த ஓம்படைக்கிளவி, சமுதாயத்தில் நிலவிய புண்ணிய பாவங்களை உணர்த்தும் வாசகங்களாகவும் உள்ளன. இவ் வாசகங்கள் தானத்தைக் காக்கும் கவசங்களாக அமைந்து, தானத்தைக் காப்பதால் உண்டாகும் பலன்களை விளக்கி, தானத்தை அழிப்பாருக் குண்டாகும் தீங்குகளை எடுத்தியம்பி, எச்சரித்து, அறம் காக்கும் அரும்பணிகளைப் புரிகின்றன.

பல்லவர் செப்பேடுகளில் காணப்படும் பெரும்பாலான ஓம்படைக் கிளவிகள் பூதானத்தை மிகுதியும் வலியுறுத்துவனவாக உள்ளன. 'பலர் பூதானம் செய்திருக்கிறார்கள்; பலர் பரிபாலித்திருக்கிறார்கள்; பூதானத்திலும் மிகுந்த தானம் இருந்ததில்லை; இருக்கப் போவதுமில்லை; அதை அபகரிப்பதிலும் மிகுந்த பாவம் இருந்ததுமில்லை; இருக்கப் போவதுமில்லை' என்பதனை பல்லவர் செப்பேடுகள் தெளிவாக வலி

யுறுத்துகின்றன. பூதானஞ் செய்வான் எத்தனை அடிகள் தானஞ் செய்தானோ, அத்தனை காலம் சுவர்க்கத்தில் இன்புறு வான் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வலியுறுத்த லுள்ளது.

தான் அளித்தது பிறர் அளித்தது எது வாயினும் பூமியை அபகரித்தவன், நூறாயிரம் பசுக்களைக் கொன்ற பாவத்தை அடைவான்; எந்நாளும் துக்கத்தில் மூழ்கி மறுபடியும் நரகத் தில் உழல்வான்; அறுபதினாயிரம் ஆண்டுகள் மலத்தில் புழு வாகப் பிறந்து உழல்வான்; மறுபிறவியிலும் தொடர்ந்து துன்புறுவான் என வலியுறுத்துகிறது. இப்பிறவியில் அவன் 'சரீர தண்டனைக்குட்படுவான்' எனவும் எச்சரிக்கிறது. தீய வழியில் அபகரிப்பது கொடிய தீமைபயக்கும் என்ற நம்பிக்கை யிருந்ததை பல்லவர் செப்பேடுகளில் காணப்படும் ஓம்படைக் கிளவிகள் உறுதி செய்கின்றன; இவை நல்லது செய்தல் ஆற்றீ ராயினும் அல்லது செய்தல் ஓம்புமின் என்ற புறப்பாடலை நினைவுறுத்துவனவாயும் உள்ளன.

வழங்கப்படும் தானங்கள் அனைத்தும் காக்கப்பட வேண் டியவை என்பதால்தான் தானங்களைக் குறிக்கும் ஆவணங் களின் இறுதியில் பன்மாகேசுவர ரட்சை, வைஷ்ணவ ரட்சை, கணப் பெருமக்கள் ரட்சை, மாத்ரு கணத்தார் ரட்சை, மாதேவ கணப் பெருமக்கள் ரட்சை, தெயவீர ரட்சை, திணைக் களத்தார் ரட்சை, பொற்கோட்டு கணத்தார் ரட்சை, புரவரிக் கணத்தார் ரட்சை, திருமலை வீரரும், பராந்தக வீரரும் ரட்சை, புள்ளகுடி யூரும், பரம்பையூரும் ரட்சை போன்ற காப்பு வாசகங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் தானங்கள் அனைத்தும் உரியவர் களிடம் ஒப்படைக்கப்பட்டு உரிய முறையில் பாதுகாக்கப்பட் டன என்பது தெளிவு. 'பண்டே, அறம் செய்தான், அறம் ரட்சித்தார் காத்தாந்பாதம் திறம்பாமல் சென்னிமேல் வைத்து,' 'இவை அடி என் தலை மேலே,' இவை ஆயிரத் தெழுநூற்றுவர் ஸ்ரீபாதம் என்தலை மேலன' போன்ற தொடர்கள் அறம் காப்பவருக்கு, அரசும் சமுதாயமும் அளித்த சிறப்பினைப் புலப் படுத்துகின்றன.

அளிக்கப்படும் தானங்கள் தொடர்ந்துகாக்க உரிய நட வடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக

நுந்தா விளக்கிற்கான நெய்க்கு ஒருவன் ஆடுகள் அளித்தால், அவற்றை சாவாமூவாப் பேராடாகப் பெற்று காத்து நெய்யட்டும் பொறுப்பை ஏற்கும் இடையனிடம் பிணை கோரிப் பெறப்பட்டுள்ளது. அப்படியும் சில சமயங்களில், தானம் உரிய முறையில் காக்கப்படுதலில் பிழை நேரும்போது அதற்குரிய தண்டம் பெற்றுக்கொண்டு தொடர்ந்து காக்க முயலப்பட்டுள்ளது. 'இந்நெய் முட்டில் இத்தேவ கன்மிகளே விடையிட்டு தண்டம் கொண்டும், பிந்னையும் எந் வற்கத்தாரையும் கொண்டு செலுத்தக் கல்வெட்டிக் கொடுத்தேன்', போன்று வரும் தொடர்கள் இவ்வகையின. சில சமயங்களில் தண்டத்தோடு தான முதலீட்டை இரட்டித்துக் கொடுத்தலும் பின்பற்றப்பட்டுள்ளது. 'இப்பரிசு செலுத்தாது குத்துக்காற்படில், இத்தேவர்க்கேய் ஐந்து காசு தண்டமும் பட்டுச் செலுத்தாது விட்ட முதலிரட்டியுங் குடுப்பது' போன்று வரும் தொடர்கள் இவ்வகை மரபினைத் தெளிவு படுத்துகின்றன. இந்த தர்ம ஸேது (தர்மத்தின் அணை அல்லது இணைக்கும் பாலம்) அரசர்கள் அனைவருக்கும் பொதுவானது. அந்தந்தக் காலங்களில் உங்களால் ரட்சிக்கப் பெற வேண்டியது' என்று இப்போது உள்ள அரசர்களையும் வரப்போகும் அரசர்களையும் இராமன் திரும்பத்திரும்ப கேட்கிறான்' என்பன போன்ற தொடர்கள், அளிக்கப்பட்ட தானம் தொடர்ந்து காக்கப்படுவதில் அரசர்கள் எடுத்துக்கொண்ட அக்கறையினை உணர்த்துகிறது.

இவ்வளவு தூரம் அக்கறை எடுத்து தானத்தைக் காப்பதால் ஏற்படும் பலன் என்ன என்பதையும் ஓம்படைக்கிளவி பல இடங்களில் தெளிவு படுத்தத் தவறவில்லை. தானம் அளிப்பவர்கள் அளிக்கும் தானத்திற்கியைய பலன் பெறுவர் என்று நம்பிக்கை நிலவியதைப்போல, தானத்தைக் காப்போரும் உரிய பலனைப் பெறுவர் என்ற நம்பிக்கை நிலவியிருக்கிறது. பொதுவாக தானத்தைக் காப்போர் அசுவமேதயாகம் செய்த பலனைப் பெறுவர் என்றும், சிவப் பிரதிட்டை பண்ணின பலனைப் பெறுவர் என்றும், விஷ்ணு பிரதிட்டை பண்ணின பலனைப் பெறுவர் என்றும், பிரம்ம பிரதிட்டை பண்ணின பலனைப் பெறுவர் என்றும், அன்ன சத்திரங்கள் பண்ணிவைத்த பலன் பெறுவரென்றும், புத்திர மித்திர களத்திரத் திகழுடனொக்கமே

யிருப்பரென்றும், சிவ காயுச்சியம் பெறுவர் என்றும், கன்னிகா தானம் பண்ணின பலன் பெறுவர் என்றும், கோதானம் பண்ணிய பலன் பெறுவரென்றும், பூதானம் பண்ணிய பலன் பெறுவரென்றும், தேசதானம் பண்ணிய பலன் பெறுவரென்றும், கங்கை ஆடின பலன் பெறுவரென்றும், தனுக்கோடி தீர்த்தமாடின பலன் பெறுவரென்றும், அக்கிரகாரம் பண்ணின பலன் பெறுவரென்றும், ஆயுசு வர்த்தனையும், அட்ட லட்சுமிகரமும், சந்தான லட்சுமியும், சகல பாக்கியமும் மென்மேலு முண்டாகப் பெறுவரென்றும், சாலோப சாரூப சாமீப சாயுட்சிய பதவியைப் பெறுவரென்றும், ஆயுள் ஆரோக்கியம் பெறுவரென்றும், வமிச பரம்பரை சௌபாக்கியம் பெறுவரென்றும், அநேக சொற்காதி போகங்களைப் பெறுவரென்றும், பழனியில் சந்நிதியில் தீர்த்தமாடின பலன் பெறுவரென்றும், பழனியப்பரையும், வள்ளி தெய்வானையையும் சேவித்த பலன் பெறுவரென்றும், புத்திர சம்பத்துடனே வாழ்ந்திருப்பரென்றும் கூறப்படுகிறது. 15,16, 17,18-ஆம் நூற்றாண்டு ஓம்படைக்கிளவிகளில் இவை மிகுதியும் காணப்படுகின்றன.

அறத்தைக் காப்பதால் உண்டாகும் பலனைக் கூறும் ஓம்படைக்கிளவி, ஒருவன் எந்தெந்த வகையில் அறத்தினைக் காக்கலாம் என்ற வழி வகைகளையும் கூறுகிறது. மனச்சகாயம் சரீர சகாயம், அர்த்த சகாயம், வாக்கு சகாயம் ஆகியன இவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

அறத்தைக் காப்பதால் உண்டாகும் பலன்களைக் கூறிய ஓம்படைக்கிளவி, அறத்திற்குக் கேடு செய்தால் உண்டாகக் கூடிய தீங்குகளையும் தெளிவாகக் கூறி எச்சரிக்கிறது. தானத்திற்குத் தீங்கு விளைவிப்போர் பஞ்சபாதகனாய்ப் போவரென்றும், பசுவைக் கொன்ற பாவத்தில் போவரென்றும், பிராமணரைக் கொன்ற பாவத்தில் போவரென்றும், குருவைக் கொன்ற பாவத்தில் போவரென்றும், மாதாவைக் கொன்ற பாவத்தில் போவரென்றும், ஸ்ரீவதை பண்ணின பாவத்திலே போவரென்றும், அசுவகத்தி பாவத்திற்குட்படுவரென்றும், சிசுகத்தி பாவத்திற்குட்படுவரென்றும், பதிவிரதைகளைக் கொன்ற தோஷத்திற்குட்படுவரென்றும், சனங்களைக் கொன்ற தோஷத்திற்குட்படுவரென்றும், தன்பிள்ளையே தனக்குதவாமல்

போகக் கடவரென்றும், பெத்த தாயைப் பெண் பிடிச்ச தோஷத்திலே போவரென்றும் குருத்துரோகம் பண்ணின தோஷத்திலே போவரென்றும், மாதுரு துரோகம் பண்ணின தோஷத்திலே போவரென்றும், குரு நிந்தனை செய்த தோஷத்திலே போவரென்றும், பறாபறப் பொருட்களை வஞ்சினை செய்த பாவத்திற் படுவரென்றும், தன் மணாட்டியைப் பறையற்குக் குடுத்த தோஷத்திற்குட்படுவரென்றும், கெங்கையிடைக் குமரியிடை எழுநூற்றுக்காதமும் செய்தான் செய்த பாவத்திற் படுவரென்றும், அறமழித்தால் இராமநாதபுரம் இராமயீசுவரன் கேட்பானென்றும், சிதம்பரம், சீயாழி, புள்ளிருக்கு வேளூரிலே நெருப்பிட்ட பாவத்திலே படுவரென்றும், அரசுக்குப் பொன் தண்டமிறுக்கக் கடவரென்றும், சரீர தண்டனைக் குட்படுவரென்றும், எச்சரிக்கிறது.

இவற்றிலிருந்து கொலை செய்தலும், பெற்றதாயைப் பெண் பிடித்தலும், குருத்துரோகம் பண்ணலும், மாதுரு துரோகம் பண்ணலும், பறாபற பொருட்களுக்கு வஞ்சனை செய்தலும் புண்ணிய தலங்களில் நெருப்பிடலும், தன் மனைவியை மாற்றானுக்களித்தலும் சமுதாயத்தில் கொடிய பாவங்களாகக் கருதப்பட்டன என்பது தெளிவாகிறது.

" அறவினை யாது எனின் கொல்லாமை; கோறல்
பிறவினை எல்லாம் தரும் " -குறள்: 331

" தன் உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்உயிர் நீக்கும் வினை " -குறள்: 337

என வள்ளுவர் வலியுறுத்துவது போலக் கொலை மிகுந்தபாவம் விளைவிப்பது என்பது ஓம்படைக்கிளவியாலும் உணர்த்தப் படுகிறது. மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகியோர் வணங்குதற் குரியவர்கள். போர்க் காலங்களில் கூட

" ஆவும், ஆன்இயற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இருக்கும்
பொன்போல் புதல்வர் பெறாஅதிரும்
எம் அம்பு கடிவிடுதும், நும் அரண் சேர்மின் "
-புறம்: 9

எனப் போரறம் பின்பற்றுதல் மரபு. எனவே தான் சாதாரணக் கொலைகளைப் பற்றிக் குறிப்பிடாது, குறிப்பாக, காராம்பசு, பிராம்மணர், மாதா, பிதா, குரு, பெண், சிசு, குதிரை, பதிவிரதை போன்றவர்களைக் கொன்ற தோசத்தோடு அறமழித்தல் ஒப்பு நோக்கிக் கூறப்பட்டுள்ளது. அறமழித்தல் இக்கொலைகளை விடக் கொடிய பாவம் என்பதை வலியுறுத்த, கங்கைக் கரை, சேது, சக்கரதீர்த்தக்கரை போன்ற புண்ணிய இடங்களில் ஆயிரம், ஐயாயிரம், பதினாயிரம், கோடி என்று பன்மடங்கு களில் இக்கொலைப் பாவங்களைச் செய்த தோசத்தோடு அறமழித்தல் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

அறத்தை அழிப்பவன் மேற் குறிப்பிட்ட தோசங்களுக்குட் படுவதுடன் இறைவனுடைய சினத்திற்கும் ஆளாக நேரிடும் என்பதையும் ஓம்படைக்கிளவி எச்சரிக்கிறது. இராமநாதபுரம் இராமயீசுபரன் கேட்பான், அரங்குளநாதர் சன்னிதிக்கு துரோகியாய்ப் போவர், ஏழு கோவில் திருவிளக்கு நிறுத்தின தோசத்திலே போவர் எனவரும் தொடர்கள் இவ்வகைக் கெடுத்துக் காட்டுகள்.

இங்ஙனம் அறத்தைக் காப்பதால் உண்டாகும் பலன் களையும், அறத்தை அழிப்பதால் விளையும் தீங்குகளையும் ஆவணங்களில் ஓம்படைக்கிளவி வாயிலாக உணர்த்த வேண்டுவதன் அவசியம் யாதெனின் சிற்சில சமயங்களில் வழங்கப்படும் தானங்கள் தொடர்ந்து காக்கப் படாமல் அழிவிற்குள்ளாக நேரிடுதலே எனலாம். இடையில் காக்கப் படாமல் போன தானங்கள் சிற்சில சமயங்களில் மீண்டும் காக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியால் வழங்கப்பட்ட தானம், இடையில் களப்பிரரால் எடுபட்டுப் போகப், பராந்தக நெடுஞ்சடையன் மீண்டும் அதை வழங்கி உறுதி செய்ததை வேள்விக்குடிச் செப்பேடு உணர்த்துவதைக் குறிப்பிடலாம்.

அறமழித்தல் என்பது அகிதம் பண்ணுதல் மட்டுமன்றி அகிதம் சொல்லுதலும், அறத்திற்கு அகிதம் நினைத்தலும் உட்பட்டதாகவே ஓம்படைக்கிளவியால் உணர்த்தப்படுகிறது.

'மனத்துக் கண் மாசிலனாதல் அனைத்தறன் என' வள்ளுவர் உணர்த்தியிருப்பது போல அறத்திற்கு மனத்தளவிலும் தீங்கு நினைக்கக் கூடாது என்றே ஓம்படைக்கிளவி உணர்த்து கிறது.

வழங்கும் தானங்களைக் காக்க ஆவணங்களின் இறுதியில் ஓம்படைக்கிளவி அமைப்பது போலச் செய்தளிக்கும் திருமேனி களுக்குக் கீழ் காப்பு வாசகங்களைப் பொறிக்கும் மரபும் இருந்திருக்கிறது. எடுத்துக்காட்டாக ஆனை மலையிலுள்ள சமணத்திருமேனிகளுக்குக் கீழ் பொறிக்கப்பட்டிருக்கும், ஸ்ரீ திணைக் களத்தார் ரட்சை, ஸ்ரீ பொற் கோட்டுக் கணத்தார் ரட்சை, ஸ்ரீ வெண்பைக்குடி நாட்டு வெண்பைக்குடி வெட்டஞ் சேரி புதுமை எலியம்பூதி செய்வித்த திருமேனி இவை புரவுவரிக் கணத்தார் ரட்சை போன்ற கல்வெட்டு வாசகங்களைக் குறிக்கலாம்.

பழைய கோயில்களைத் திருத்திப் புதுப்பித்துக் கட்டிய சமயங்களில், அக்கோயிலில் முன்னர் பொறிக்கப்பட்டிருந்த தானங்களைக் குறிக்கும் ஆவணங்கள் எடுபட்டுப் போய், அதனால் அத்தானங்களுக்கு அழிவு ஏற்பட வாய்ப்பு இருத்தலால் பழைய தானங்கள் அழிந்து விடாதபடி தொடர்ந்து காப்பதற் காக, அக்கோயிலிலிருந்த பழைய கல்வெட்டுக்களை, புதிய கட்டடப் பகுதியில் மீண்டும் பொறித்து வைக்கும் பழக்கம் இருந்திருக்கிறது. எடுத்துக்காட்டாகத் திருக்கோடிகாவில் காணப்படும் பல கல்வெட்டுக்களைக் குறிக்கலாம்.

சில சமயங்களில் ஒரு கோயிலுக்கு வழங்கப்படும் தானம் மற்றொரு கோயிலுக்கு மாற்றப்பட்டும் தொடர்ந்து காக்கப் பட்டுள்ளது. இவ்வகையில் தஞ்சைப் பெருங்கோயிலுக்கு இராசராசன் வழங்கிய பல ஊர்கள் அவனது மகன், பேரர் காலங்களில், கங்கைகொண்ட சோழபுரம் கோயிலுக்கு மாற்றப் பட்டதையும், இதே போல காஞ்சி கைலாச நாதர் கோயில் நிலங்கள் குலோத்துங்க சோழன் காலத்தில் அக்கோயில் [illegible] கோயிலுக்கு மாறியுள்ளதையும் குறிப் பிட்டுச் சொல்லலாம்.

மேற்கூறப்பட்டவைகளிலிருந்து அறம் செய்வதை அற இலக்கியங்கள் வலியுறுத்துவதைப்போல அறம்காத்தலை ஓம்படைக்கிளவி மிகுதியும் வலியுறுத்துவதையும், ஓம்படைக் கிளவியின் வலியுறுத்தலுக்கியையப் பல்வேறு வழிகளில் அறம் தொடர்ந்து காக்கப்பட்டதையும் தெரிந்துகொள்ள இயல்கிறது.

★

பல்லக்குத் தூக்கிகள்

செ. போசு, எம்.ஏ.,
கல்வெட்டாய்வாளர்
திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை

தமிழகத்தை ஆண்ட மன்னர்களின் அரண்மனைகளிலே இருந்த எண்ணற்ற பணியாட்களில் பல்லக்கு தூக்கிகளும் இடம் பெற்றிருக்கின்றனர். இவர்கள் அரசனையோ அல்லது அவனது ஆணையைப் பெற்றுப், பிற உயர் பதவியில் இருந்தோரையோ ஓரிடத்தில் இருந்து பிறிதோரிடத்திற்குச் சுமந்து சென்று வந்துள்ளனர்.

அரண்மனையில் இருந்ததைப் போலக் கோயில்களிலும் இப்படிப்பட்ட பல்லக்குத் தூக்கிகள் இருந்ததை நமக்குக் கிடைக்கும் கல்வெட்டுக்களின் சான்று கொண்டு நாம் அறிந்துகொள்ள முடிகிறது. இவ்வாறு கோயிலில் வீதியுலாவரும் விக்ரகங்களைத் தூக்கிச்சுமந்தவர்கள் ஸ்ரீபாதம், சீபாதம், சீபாதந்தாங்கிகள் எனக் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றனர்.

பல்லக்குத் தூக்கியவர்கள் போண்டமார், போகிகள் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். 1891-ஆம் ஆண்டு அச்சிடப்பட்ட சென்னைக் கணக்கெடுப்பு அறிக்கையில் (Madras Census Report) ஸ்டுவர்ட் என்பார் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்.

'இந்த இனத்தைச் சேர்ந்தவர்களில் 28 பேர் மட்டுமே இப்போது கோழிக்கோடு மாவட்டத்தைச் சேர்ந்த மலபார் பகுதிகளில் வசித்து வருகின்றனர். இவர்கள் ஜமீன்களில் பல்லக்குத் தூக்கிகளாக இருந்தவர்களாவர். நடை, உடை, பாவனை, பழக்க வழக்கம், பேசுகின்ற மொழி ஆகியவற்றால் இவர்கள் தமிழர்களாகவே உள்ளனர். இந்த போண்டமார் ஒவ்வொரு நாளும் கோயிலில் இருந்து பல்லக்கைச் சுமந்து மீண்டும் கொண்டுவரும் உரிமை பெற்றவர்களாவர்'.[1]

பெருமன்னர் திருமலை நாயக்கர் அரண்மனையிலும் மன்னனைச் சுமந்து செல்வதற்காகப் பல்லக்குத் தூக்கிகள் அமர்த்தப்பட்டிருந்தனர்.

இந்தச் செய்தியைத் தெரிவிக்கும் செப்பேடு ஒன்று மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டம் அம்மைய நாயக்கனூரைச் சேர்ந்த திரு எ. கந்தசாமி என்பவரிடமிருந்து அண்மையில் கண்டறியப்பட்டது. இச்செப்பேடு 22 செ.மீ. நீளமும், 18 செ.மீ. அகலமும் உடையது.

போக்குவரத்து வசதிகள் இல்லாத அக்காலத்தில், திருமலை நாயக்கர் மதுரையில் இருந்து திருச்சிக்கு மூன்று நாட்களில் சென்று திரும்ப வேண்டும் என விரும்பினார். அப்போது தன்னுடைய அரண்மனையில் இருந்த ஆனைகட்டி அக்கலப்ப போயனையும், குலவபோயனையும் அழைத்துக் கேட்கின்றார்.

அதற்கு அவர்கள், "சாமி நம்ம சனங்கள் சேகரமாயி இருக்கவில்லை. அம்மையனாயக்கர் பாளையப்பட்டு தானா பதியும், போண்டமாரும் வந்துயிருக்கிறார்கள். அவர்களானால் சீக்கரங் கொண்டு போயி விடுவார்கள்" என்று கூறுகின்றனர்.

உடனே திருமலை நாயக்கர் தன்னுடைய அரண்மனைக்கு வந்திருந்த அம்மையநாயக்கனூர் பாளையத்தைச் சேர்ந்த அழகபோயன், கம்பயபோயன் ஆகிய இரு பல்லக்குத் தூக்கிகளையும் அழைத்து 3 நாட்களில் திருச்சி சென்று திரும்ப வேண்டும் எனக் கேட்கின்றார்.

அதற்கு அவர்கள், "சாமி னாங்கள் கொண்டு போய் விடுகிறோம்" என்று கூறி அவ்வாறே திருமலை மன்னனைச் சுமந்து சென்று மீண்டும் மதுரைக்கே கொண்டு வந்து சேர்க்கின்றனர். இந்த நிகழ்ச்சியால் திருமலை நாயக்கர் மெத்தவும் மகிழ்ச்சியடைந்து தன் அரசவையில் இருந்த ரெங்கா ரெட்டியாரை வரவழைத்து, இந்த போகிகளுக்கு என்ன வெகுமதி கொடுப்போம் என வினவ, அதற்கு அவர் 'சுவாமி சித்தத்துக்குச் சரிப் போனது' என்று கூறுகிறார்.

உடனே திருமலை நாயக்கர் கருப்பட்டி முதல் விளாம்பட்டி வரையிலான ஏழு கிராமங்களை வெகுமதியாகப் பல்லக்குத் தூக்கிகளுக்கு அளிக்கின்றார்.

ஆனால் அழக போயனும், கம்பய போயனும் இக்கிராமங்களை ஏற்காமல், "சுவாமி யெங்களுக்கு அதுவெல்லாம் நிலையாது. எங்களுக்குத் தங்காரும் அதுக்குக் கேணியளும் விட்டுக் குடுக்க வேணும். தங்காத்து தண்ணீற் பாச்சல் பண்ணி முட்டி முதல்க் கொண்டு விளாம்பட்டிக் கறுப்பணசாமி கோவில் நெல்லித்தோப்பு வளுக்கப்பாறை முதல் வரைக்கும் எங்களுக்கு விட்டுக் குடுக்க வேணும்" என்று கேட்கின்றனர்.

திருமலை மன்னரும், "மச்சமசல புறப்பங்களை வலை வீசிப் பிடிச்சு ஆண்டு அனுபவித்துக் கொள்ளவும்" என்று அவர்கள் வேண்டிக் கொண்டமைக்கிணங்க அப்பகுதிகளுக்கு உரிமை வழங்குகின்றார்.

இச்செப்பேட்டில் குறிக்கப்படும் இதே செய்தி மெக்கன்சி கையெழுத்துச் சுவடியிலும் காணப்படுகிறது.[2]

இப்பல்லக்குத் தூக்கிகள் பல்லக்குத் தூக்குவதோடு நின்று விடாமல், வலைவீசி மீன் பிடிக்கும் தொழிலையும் செய்து வந்துள்ளனர் என்பது இச்செப்பேட்டின் மூலம் தெரிய வருகிறது.

இங்கு, திருமலை மன்னனைச் சுமந்து சென்றவர்களுக்கு அவனால் ஏழு கிராமங்கள் தானமாக விடப்பட்ட போதும் கூட, அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளாமல் குளம், கண்மாய், கேணிகளில் எக்காலத்தும் நிலைக்கும் வண்ணம் மீன்பிடி உரிமையை வழங்கும்படி வேண்டிக் கொண்டதும் குறிப்பிடத் தக்கது.

தஞ்சை மாவட்டம் கோடியக் கரைப் பகுதியில் இன்றும் வாழ்ந்து வரும் சீந்தி வலையர் இனத்தாரைப் பற்றிய கள ஆய்வின் போது, இந்த இனத்தவர் தொடக்கத்தில் பல்லக்குத் தூக்கிகளாக இருந்து வந்தனர் என்று தெரிவித்துள்ளனர். ஆதலால் பல்லக்குத் தூக்கிகள் பிற்காலத்தில் வலையர் என்றும் அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்று உணரலாம்.

இந்த சீந்திவலையர் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருந் தாலும் ஏனைய பரதவர்களைப் போல அலை கடல் நடுவில் பல கலம் செலுத்தி மீன் பிடிக்கும் பான்மை மிக்கவரல்லர். குளம், கேணி, கண்மாய்களிலேயே மீன் பிடிக்கும் வழக்கம் மிக்கவர்களாக இருந்துள்ளனர்.

பொதுவாக பல்லக்குத் தூக்கிகள் உடல்வலிமை மிக்கவர் களாக விளங்கியிருக்கின்றனர். திருச்சிக்கு திருமலை நாயக்கரை மூன்று நாட்களுக்குள் சுமந்து சென்று மீண்டும் மதுரைக்கே கொணர்ந்த நிகழ்ச்சியை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

செப்பேட்டால் அறியப்படும் செய்தி

இச்செப்பேட்டின் மூலம் திருமலை நாயக்கர் காலத்தே அவனுக்கு அணுக்கமாக இருந்த மூன்று பாளையக்காரர்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளமுடிகிறது. அவர்கள் செப்பேட்டில் அய்யப்பநாயக்கர், கூழப்ப நாயக்கர், கொப்பய நாயக்கர் என்று குறிப்பிடப்படுகின்றனர்.

திருமலை மன்னன் வைணவனாக இருந்தபோதும் சைவத் தின் மீதும் பற்றுமிகக் கொண்டமை அனைவராலும் அறியப் படும். மதுரைத் திருக்கோயிலுக்கு மாண்புகள் பல செய்தவன் இத்திருமலை மன்னன் என்பது வரலாறு. அதற்கேற்ப இச் செப்பேடும், 'மீனாட்சி சுந்தரேசுர கிறுபா கடாக்ஷ' என்று தொடங்குகிறது. ஆனால் முடியும்போது, 'சோலமலை அழகற் துணை' என்று முடிவடைகிறது. இதன் மூலம் அவனுடைய வைணவ சமயத்தையும் அவன் மறக்கவில்லை என்பது புலனாகும்.

இச்செப்பேட்டில் மதுரைக்கு அண்மையில் உள்ள கருப் பட்டி, விளாம்பட்டி ஆகிய ஊர்கள் குறிப்பிடப்படுகின்றன.

செப்பேடு ஓம்படைக் கிளவியோடு முடிவடைகிறது. 'இதுக்கு ஆறாமொருதர் ஆச்சிகம் பண்ணினால் கெங்கை கரை யிலே எளுகாளும் பசுவை கொண்ண தோசத்துலே போவாறாகவும். பெத்ததாயை களுத்தை கட்டினாப் போலவு, மேளு கோவிலு திருவிளக்கு னிருத்தின தோசத்தில் போவா றாகவும்' என்று செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது.

அம்மையநாயக்கனூர் செப்பேடு

1 மீனாட்சி சுந்தரெசுர கிறுபா கடாஷ்
2 சத்தினாலே சாலிவாகன சகாற்த்தம் 1453
3 503 கலியுக சகாற்த்தம் 4635[3]
4 இதின்மேல் செல்லா நின்ற சுக்குல வரு தை மாதம்
5 27-ஆம் தியதி பூறுவபட்டத்து விசாழ
6 கிழமையும் பஞ்சமியும் மிருகசீற்ஷ ந
7 ட்செத்திரமும் சவுபாகிய னாம யோகமும் பா
8 லவற கறணமும் சாக்கிரக வேளையும் சந்திர
9 வோரையுங் கூடிய சுபதினத்தில் ராசமானிய
10 ஸ்ரீ திருமலை னாயகரவர்கள் மதுரையிலிருந்து
11 திருச்சினாப் பள்ளிக்குப் போக வேனுமென்
12 று ஆனைகட்டி அக்கலப்ப போயனையும், குரு
13 வ போயனையும் அளைப்பிவிச்சு கேழ்க்க ச
14 ாமி நம்ம சனங்கள் சேகரமாயி இருக்க
15 வில்லை அம்மையனாயக்கர் பாளைப்பட்டு ஷ்
16 தானாபதியும் போண்டமாரும் வந்த யி
17 ருக்கறார்கள் அவகளானால் சீக்கிறங் கொண்
18 டுபோயி விடுவாற்கள் ளென்று சொல்ல
19 அந்த படிக்கி அளைப்பிச்சு கேள்க்கிறபோது
20 சாமி னாங்கள் கொண்டுபோயி விடுகிறோ
21 ம் மென்று சொல்ல அந்தப்படிக்கி சிமந்து
22 கொண்டு திருச்சினாப்பள்ளிக்கு போயி
23 திரும்ப மதுரைக்கி வந்ததின் பிறகு மெ
24 த்த சந்தோசப்பட்டு ரங்கா ரெட்டியானா
25 ர அளைப்பிவிச்சு இவர்களுக்கு யென்ன வெ
26 குமதி பண்ணுவோம் யெந்தக் கிறாம
27 விட்டுக்குடுப்போம் மென்று கேழ்க்க சு
28 வாமி சித்தத்துக்குச் சரிப்போனது
29 யென்று சொல்ல அம்மைய னாயக்கரவர்
30 கள் கிறாமத்துக்கு சமுக்கிறாமம் கறுப்பிட்டி
31 முதல் விளாம்பட்டி வரைக்கும் ஏளுகிராமம்
32 விம்பளம் விட்டுக் குடுக்குறோம் மென்று (சொ)
33 சொன்னாற்கள் அப்போது அழகபோயனும்
34 கம்பயபோயனும் (ஞ்) சொன்னது சுவா

35 மியெங்களுக்கு அதுவெல்லாம் நிலைய
36 ாது யெங்களுக்குத் தங்காரும் அதுக்கு

பின்பக்கம்

37 கேணியளும் விட்டுக் குடுக்க வேணு
38 ளும் தங்காத்து தண்ணீற் பாச்சல்
39 பண்ணி முட்டி முதல்க் கொண்டு விள
40 ாம்பட்டிக் கறுப்பணசுவாமி கோவில்
41 நெல்லித்தோப்பு வளுக்கபாறை முத
42 ல்வரைக்கும் எங்களுக்கு விட்டுக் குடுக்க வே
43 ளுமென்று கேட்டாற்கள் அப்படியே தரு
44 கிறோமென்று மாடக்குளம் முதல் வி(ா)
45 ளாம்பட்டி வரைக்கும் கிறாமணி அய்
46 யமாறும்க் காவல்காறனும் அய்யப்ப
47 னாயக்கபட்டி அய்யப்ப னாயக்கரையு
48 ம் வச்சுக் கொண்டு கூழப்பனாயக்கற்
49 கொப்பய னாயக்கற்ரையும் வச்சுக்கொ
50 ண்டு பண்ணி முட்டி முதல் தங்க
51 ாறு ஆத்துக்போக்கு கலிங்கு ப
52 ாறை வளுக்கப்பாரை வரைக்கும்
53 அம்மையனாயக்கரவர்களுற் பே
54 ாயண்டமாருக்கு அதகளிலுள்ள
55 மச்ச மசல புறப்பங்களை வலை வீ
56 சி பிடிச்சு ஆண்டு அனுபவித்துக் கொ
57 ள்ள சொல்லி வெகுமதியம் பண்ணி
58 க் கல்லும் வெட்டி கல்லுங் காடு
59 வரிபுல்லும் பூமி சந்திறாத்திர உ
60 ள்ளவரைக்கும் ஆண்டு அனுபவித்துக் கொ
61 ள்ள சொல்லி பிறசாதனம் மெளுதிக்கு
62 டுத்தோம் இதுக்கு ஆறாமொருதர் ஆச்சிக
63 ம் பண்ணினால் கெங்கை கரையி
64 லே எளுகாளும் பசுவை கொண்ண
65 தோசத்துலே போவாறாகவும் பெத்ததா
66 யை களுத்தை கட்டினாப் போலவும் யேளுகே

67 ாவிலு திருவிளக்கு னிருத்தின தோசத்தில்
68 போவாறாகவும் யிந்தபடிக்கி சோலமலை
69 அழகற் துணை.

அடிக்குறிப்புகள்

1. Mr H.A. Stuart, Madras Census Report, 1891. E. Thurston "Castes and Tribes of Southern India", vol. VI p. 207.

2. '...மதுரையில் கற்னாடகத் துரையளாகிய திருமலை னாய்க்கரவர்கள் திருசுரபுரத்துக்குப் போக வேண்டியதாய் அவர்கள் பல்லக்குப் போகிகளாகிய ஆணைக்கட்டி அக்கல போயளையும் னாலவப் போய்அளையும் வரவளைத்து மூன்று னாளைக்குள்ளே போய்த் திரும்புவை யாயென்று கேள்குறபோது யெங்களாலே நிறுபாகமில்லை. அம்மையனாய்க்கர் ஸ்தானாதிபதியும் போகியளும் வந்திருக்கிறார்கள். அவர்களாலே ஆகுமென்று சொல்ல அப்படியே திருமலை னாய்க்கரவர்கள் யிவடத்துப் போகியளை னாகேழ்க்க நல்லதென்று பல்லக்குக் கொண்டு திருசுரத்துக்குப்போய் மூன்று நாளையில் மதுரை வந்து சேர்ந்தார்கள். அப்போது போகியள் பேரில் ரொம்பவும் சந்தோஷப்பட்டு ரெங்கா ரெட்டியாரிடத்தில் சொல்லி வெகுமதியுஞ் செய்து சிறிது கிராமம் பூமி விட்டுக்குடுக்கச் சொல்லி சொன்னார்கள். யிவ..ம் அளகபோயனும் கம்ப போயனும் கேட்டுக்கொண்டது, யெங்களுக்கு கிறாமம் பூமி தேவையில்லை. யெண்ணெண்னைக்குஞ் சீவனம் நடந்து வரும்படியாய்த் தந்தையாறும் அதில் சேர்ந்த கேணியளும் பண்ணிமுட்டி முதல் வைகையாத்தில் விளாம்பட்டிக் கருப்பணசுாமி கோவிலுக்கு மோ ... நெல்லித்தோப்பு வளுக்கப்பாரை வரைக்கும் மச்சங்கள் பிடிக்கச் சீவனம் பண்ணும்படியாய் உத்திரவு குடுக்கவேணுமென்று கேட்டார்கள், அந்தப்படியே கற்த்தாக்களாகிய திருமலை னாய்க்கரவர்கள் தா..சனப் பட்டையத்தில் எழுதிக்கொடுத்து சீவனம் நடக்கும்படி செய்தார்' பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி 1 பக். 52.

3. ஆண்டு சரியாக ஒப்பிட்டு வரவில்லை.

நடுகற்களில் தொறு

இரா. செல்வராசு, எம்.ஏ.,
தொல்பொருள் அலுவலர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, கோவை

'தொறு' என்ற சொல் நடுகற்களிலும், தமிழ் இலக்கியங்களிலும் பரவலாகப் பேசப்படுகின்றன. பொதுவாகத் தொறு என்பதற்கு சொற்களஞ்சியத்தில் பசுக்கூட்டம் என்று கூறப்படுகின்றது. பழைய கன்னடத்திலும் 'துறு' என்பதற்குப் பசு, எருது, என்றே பொருள். இம்மொழியில் இடையன் என்பதற்கு 'துறுகார' என்றே அழைக்கின்றனர். பிங்கல நிகண்டிலும் தொறு என்பதற்கு ஆநிரைக் கூட்டத்தைக் குறிக்கிறது. வீரமாமுனிவர் சதுரகராதியிலும் தொறுவைப் பசுக்கூட்டம் என்றே கூறுகிறார். மயிலை சீனி. வேங்கட சாமி அவர்கள் 'தொறு என்னும் சொல் சங்க இலக்கியத்திலும், பிற்கால இலக்கியங்களிலும் வழங்கியதாகக் கூறி, இத்தொறு பிற்காலத்தில் வழக்கிழந்து விட்டது என்கிறார்.'[1] தொறுவின் தொன்மை வடிவம் துருவாகும். இத்துரு என்னும் சொல்லே துருவையாக மாறியதெனக் கூறிய இவர், தொறுவும், துருவும் ஒன்றெனக் கூறி இச்சொற்களின் பொருள், பசு, எருது என்று கூறுகிறார். மேலும் இவர் இத்துருவே பிற்காலத்தில் செம்மறி யாட்டை குறிப்பதாகக் கூறுகிறார். பெருஞ்சித்திரனார் அவர்களும் தொறுவைப்பற்றித் தென்மொழியில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.[2] மயிலை சீனி. வேங்கடசாமியும், பெருஞ்சித்திரனாரும், மொழியியலை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தொறுவைப்பற்றிய தத்தம் ஆய்வை மேற்கொண்டுள்ளனர்.

1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையினர், செங்கத்திலும், தர்மபுரியிலும் தொடர் ஆய்வுகளை மேற்கொண்டதில், நூற்றுக்கணக்கான நடுகற்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இந்நடுகற்களில் தொறு என்ற சொல் மிகுதியாக வருவதை நோக்கின் 'கல்வெட்டுக்கள் அரசியல் சமூக

பொருளாதார வாழ்க்கையைப் பிரதிபலிப்பது மட்டுமின்றி, மொழியைப் பற்றி ஆய்வு மேற்கொள்வதற்கும் நடுகற்கள் உறுதுணை புரிகின்றன எனலாம்.

மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள், தொறு என்ற முதன்மைச் சொல்லிலிருந்தே தொழு, தொழுவம் தோன்றியது என்கிறார்.[3] மொழியியல் படி றகரம் ழகரமாக மாறியது எனவும், தொறு என்றச் சொல்லே தொழுவாக மாறிற்று என்றும் கூறுகிறார். சங்க இலக்கியங்களில் தொறு என்ற சொல் ஓரிடத்திலும் பயின்று வராமையே இவருடைய கொள்கையை பொய்யாக்குகிறது, என்பதை கீழ்கண்ட சங்க இலக்கிய பாடல்களின் மூலமாக அறியலாம்.

"தொழுவினுள் கொண்டே ஏறு எல்லாம் புலம்புக"
கலி 104-60

"கொடுந் தொழுவினுள் பட்ட கன்றிற்குச் சூழும்"
கலி 110-12

"தொழுவிடை யேறுகுறித்து வளர்த்தார்."
சிலம்பு. ஆய்ச்-13

"ஏறுடை இன நிரை பெயர, பெயராது,"
அகம்: 269-

மொழியியல் படி றகரம், ழகரமாகவும் அல்லது ழகரம் றகரமாகவோ மாறாது என்று, இத்துறை வல்லுநர்கள் உறுதியாக மறுக்கிறார்கள்.[4] சொற்களஞ்சியத்தில் தொழு என்பதற்கு மாட்டுக் கொட்டியல், மாட்டுத் தொழுவம் என்கிறது. தொழுவும், தொறுவும் கிட்டத்தட்ட ஒரே பொருளைக் குறிப்பதாயினும் தொழு என்ற சொல் இலக்கிய வழக்குச் சொல்லாகவும், தொறு என்ற சொல் வட்டார வழக்குச் சொல்லாகவும் கொள்ள இடமுண்டு.

இலக்கியங்களில் தொறு

தொறு என்ற சொல் முதன்முதலில் இலக்கியங்களிலேயே, காணப்படுகிறது. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தேவாரத்தில்,[5] பயின்றுவருகிறதேயன்றி மயிலை சீனி. வேங்கடசாமி

அவர்கள் கூற்றுப் படி சங்க இலக்கியத்தில் ஒரு இடத்திலும் வரவில்லை. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சீவக சிந்தாமணியிலும்,[6] பெருங்கதையிலும் வருகிறது.[7]

நடுகற்களில் தொறு

தமிழ் இலக்கியங்களில் காணப்படும் தொறு, என்னும் சொல் நடுகல்லில் காணப்படுவதை நோக்கினால் வியப்படையாதோர் உளரோ? தொறு என்னும் சொல் பல்லவ மன்னன் சிம்மவர்மன்[8] காலம் முதல், முதலாம் பராந்தகன்[9] காலம்வரை தொடர்ந்து காணப்படுகிறது. சிம்மவர்மன், சிம்ம விஷ்ணுவின் தந்தையாவான். இவன் கி.பி. 550-இல் ஆட்சிக்கு வந்தான். ஆதலால், தொறு என்னும் சொல் கல்வெட்டுகளில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து பயன்படுத்தப்பட்டது என்று உறுதியாகக் கூறலாம். அதாவது தமிழ் இலக்கிய பயன்பாட்டிற்கு நூறு ஆண்டுகட்கு முன் நடுகல்லில் பயின்று வருகிறது.

தொறு துரு வெவ்வேறு

மயிலை அவர்கள் தொறுவும் துருவும் ஒன்றே என்று கூறியது முன்பே கூறப்பட்டது. இவர் இக்கொள்கைக்கு எடுத்துக்காட்டாக கீழ்க்கண்ட சங்கப்பாடல்களைக் கூறுகின்றார்.

"தோப்பிக் கள்ளொடு துரு உப்பலி கொடுக்கும்"
-அகம்: 35-9

"துருவின் அன்ன புன் தலை மகாரோடு"
-மலை கடாம்: 217

"தகர் விரவு துருவை வெள்ளையொடு விரை இ"
-மலை கடாம்: 414-16

"துரா அய் துற்றிய துருவை அம் புழுக்கின்"
-பொரு. படை: 103

"உருவத் துருவின் நாள் மேயல் ஆரும்"
-நற்றிணை: 192-4

இவற்றில் வரும் துருவையை மயிலை அவர்கள் தொறுவெனக்கொள்வதை நோக்கின், யாரையும் வியப்பில் ஆழ்த்தும். காரணம் துரு என்பதற்கு இலக்கிய உரையாசிரியர்கள் செம்மறியாடு என்று பொருள் கூறுகிறார்களேத் தவிர, எவ்

விடத்திலும் மாட்டைக் குறிப்பிடவில்லை இவர் எந்த அடிப்படையில் துருவை தொறுவோடு இணைக்கின்றார் என்பது விளங்கவில்லை.

பெருஞ்சித்திரனார் அவர்களும் தொறு என்பதை ஆட்டை மட்டுமே, அதுவும் சிறப்பாக செம்மறியாட்டை மட்டுமே குறிக்கிறது என்கிறார்[10]. இவர் இதற்கு எடுத்துக்காட்டாக மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் கூறிய அதே சங்கப்பாடல்களையே குறிப்பிடுகின்றார். ஆனால் இப்பாடல்களை முழுமையாக ஆராயும்பொழுது செம்மறியாட்டினைக் குறிக்க துரு பயின்றிருக்கிறதே தவிர எங்கும் தொறு என்றசொல் விரவி வரவில்லை.

சங்க காலப் புலவர்கள் ஆட்டைப் பொதுவாகக் கூறாமல் தனித்தனியாகக் குறிப்பிடுவதிலிருந்து, அதாவது செம்மறியாட்டை துரு என்றும், வெள்ளையாட்டை வெள்ளை என்றும், பொதுவாக ஆட்டுக்கிடாயைத் தகர் என்றும் கூறுவதிலிருந்து ஒரு பொருளை எவ்வாறு நுண்ணிய முறையில் பிரித்துள்ளனர் என்பது விளங்கும்.

தொறு என்பது முன்பு குறிப்பிட்டதுபோல மாட்டு மந்தை, அல்லது பசுக் கூட்டம் என்றும், துரு என்பது செம்மறியாடு என்று பொருள் கொண்டு, இரண்டும் வெவ்வேறு பொருளைக் கூறுகிறது என்று கொள்ளுதலே சரியான முடிவாகும்.

தொறு எங்கிருந்து வந்தது

மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் இச்சொல் ஆசியா மைனரிலிருந்து வந்தது என்கிறார்.[11] இங்குள்ள மலைகளுக்கு தவ்ரூஸ் என்ற பெயர் உள்ளதாகவும், செமிட்டிக் மொழியில் இதற்கு எருமை என்றும் பொருள் கூறுகிறார். இப்பகுதியில் எருமைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இதையே இம் மக்கள் தங்களுடைய கடவுளுக்கு வாகனமாக்கி வழிபட்டனர். இப்பகுதியில் உள்ள மலைகளில் எருமைகளுக்கு சிறு சிறு கோவில்கள் உள்ளன என்கிறார். இந்நாட்டுடன் பாபிலோனியா, எகிப்து, கிரேக்கம் ஆகிய நாடுகள் வாணிபத்தின்

மூலம் தொடர்பு கொண்டமையால் தவ்ருஸ் என்ற சொல் கிரேக்கத்திலும், எகிப்திலும் பரவியது என்கிறார். இந் நாட்டுடன் தொடர்புகொண்ட தமிழகத்திலும் தவ்ருஸ் என்ற சொல் தொறுவாக மருவிப் பரவிய காலம் தொல்காப்பியர் காலத்திற்கு பின்பே என்கிறார்.

பெருஞ்சித்திரனார் அவர்கள் தொறு என்ற சொல் துறத்தல் என்ற சொல்லில் இருந்து வந்ததாக தேவநேய பாவாணர் அவர்களை மேற்கோள் காட்டிக் கூறுகிறார்.[12] துற என்ற சொல்லுக்கு வேர்ச்சொல் மூலங்களையும் கூறியுள் ளார். துள்-துளு-துரு நீக்குதல், ஆட்டினத்தில் செம்மறி யாட்டினின்று மட்டுமே மயிர் நீக்கப்பெறுதலால், அது துரு எனப்பட்டது. இவ்வாறாகப் பெருஞ்சித்திரனார் துருவைப் பற்றி மட்டும் ஆய்வு செய்துவிட்டுத் தொறுவை விளக்காமல் விட்டுவிடுகிறார்.

மயிலை அவர்கள் தொறு என்ற சொல் தவ்ருஸ் என்ற செமீடிக் மொழியின் மருவே என்கின்ற கொள்கை முற்றிலும் தவறானதாகும். அதற்காக இவர் கூறும் காரணங்கள் ஏற் புடையதாக இல்லை. தவ்ருஸ் என்ற சொல் தமிழகத்தில் யவன வணிகர்கள் மூலம் பரவியது எனில், யவனர்கள் அதிக மாகத்தொடர்பு கொண்ட இடங்களில் (மலபார், புகார், உறை யூர்,கொற்கை மற்றும் அரிக்கமேடு) கிடைக்கும் நடுகல்லிலோ அல்லது இலக்கியங்களிலோ தொறு என்ற சொல் ஓரிடத்திலும் பயின்றுவராமையால், யவனர் தொடர்பால் இச்சொல் தமிழகத் தில் பரவியிருக்க முடியாது என்று உறுதியாக நம்பலாம்.

பெருஞ்சித்திரனாரும், துரு என்பது துறத்தல்-மயிரினைத் துறத்தல், என்று கூறி செம்மறியாட்டினையே கூறுகிறார். இது ஏற்றுக்கொள்ளக் கூடிய செய்தியாகும். ஆனால் அவர் தொறுவையும், துருவையும் ஒன்று என்று எண்ணி குழப்பிக் கொள்கிறார். தொறுவும், துருவும் வெவ்வேறாகும். ஆத லால் இவருடைய கொள்கையும் ஒப்புக்கொள்ள இயலாதது.

தொறு என்ற சொல் முற்கால இலக்கியங்களில் இல்லாத தற்கும், பிற்கால இலக்கியங்களில் காணப்படுவதற்கும் வேறு ஒரு காரணம் உண்டு.

தொறு வட்டாரச் சொல்லே

தொறு என்ற சொல் தமிழ்இலக்கியப் பரப்பில் சைவ நாயன்மார்களில் ஒருவரான சம்பந்தரின் தேவாரத்தில் "தூமா மழையின் நின்றதிர வெருவித் தொறுவின் நிறையோடும்" என்று திருவண்ணாமலைப் பதிகத்தில் காணப்படுகிறது. சைவ நாயன்மார்களின் காலமே தமிழகத்தில் பக்தியெழுச்சி கொழுந்து விட்டெரிந்த காலமாகும். தொடக்கத்தில் நாயன்மார்கள் ஆங்காங்கு உள்ள மக்களின் சடங்குகளையும், வட்டாரச்சொற்களையும் சேர்த்துப் பாடியதால் அவ்வட்டாரத்திலுள்ள மக்கள் எளிதில் சைவத்தோடு இணைப்புற்றனர். இந்நாயன்மார்களில், மிகுதியான வட்டாரச் சொற்களைப் பயன்படுத்தியதில் முதன்மையானவர் சம்பந்தரே. இவர் தொறு என்ற சொல் பயன்படுத்துமிடம் திருவண்ணாமலைப் பதிகத்திலாகும் என்பது சிந்தித்தற்குரியது. சைவ நாயன்மார்கள் வட்டாரச் சொற்களை மிகுதியாகப் பயன்படுத்துவதைப் பற்றிப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் கூறியதை இங்கு நினைவுகூர்தல் பொருத்தமாகும்.

> "தமிழ்ச் சமுதாயத்தில் பல்வேறு திறத்தினரும் எளிதில் உணர்ந்து ஈடுபடும்படி இந்நூல்கள் இருந்தன. இன்னிசையோடு பாடுவதற்கு உரியன. எனவே சாதாரண மக்களது சொல் வழக்காற்றைப் பெரிதும் பின்பற்றியன. ஆதலால் கல்வியாளர்கள் வழங்காத வழக்குகள் இவற்றில் பெரும்பான்மையாகக் காணப்படும். இவற்றுள் ஒன்று உன், உன்னை என்ற வரிசை. எனவே இலக்கண நூலோர் புறக்கணித்து வந்தனர். உயர்ந்த இலக்கிய ஆசிரியர்களும் இவற்றைக் கையாளாது விட்டனர். இவ்வழக்குகளுக்குக் கால அடைவில் தகுதியேற்பட்டதன் பின்னரே உயர்ந்த இலக்கிய ஆசிரியர்கள் இவற்றை ஆளத் தொடங்கினர்".[13]

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்களின் கூற்று முற்றிலும் உண்மை. பிள்ளை அவர்களின் ஆய்வு முடிவுகளின் படி நோக்கும் போது, தொறு என்ற சொல் வட்டார வழக்கே என்று கொள்வதில் தவறில்லை. வட்டார வழக்காகிய தொறு என்ற

சொல்லை இலக்கியத்தில் ஏற்றிய பெருமை சம்பந்தரையே சாரும்.

தகடூர், வேணாடு ஆகிய நாடுகளில் மாட்டு மந்தையைக் குறிக்கத் தொறு என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது(கல் வெட்டுகளில்). வட்டார வழக்குகளை இலக்கியப் படைப்பில் விரும்பிப் பயன்படுத்திய நாயன்மார் பாடல்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதில் ஆச்சரியமேதுமில்லை. மேலும் ஒரு சான்று மூலம் தொறு வட்டார வழக்கே என்று நிரூபிக்க லாம். அதாவது, தமிழ் நாட்டில் பிற பகுதியில் மாடுபிடிச் சண்டையில் மாண்ட வீரர்களுக்கு எடுக்கப்பட்ட நடுகல்லில், மாட்டுமந்தையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட சொல் நிரை என்பதாகும்.[14] இதுவும் தொறுவின் வட்டாரத்தன்மையை வலியுறுத்தும். தொறு என்ற சொல் காலப்போக்கில் இலக்கிய ஆசிரியர்களின் அதிக பயன்பாட்டிற்குள்ளாகியது என்பது மத் திய கால இலக்கியங்களைக்கொண்டு உணரலாம்.

இதுகாறும் கூறியவற்றால் தொறு என்ற சொல் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் கருதுவது போல வெளியிலிருந்து வந்ததல்ல. முற்கால இலக்கியங்களில் பயிலாமை என்ற ஒரு காரணத்தால் மட்டும் தொறு வெளியிலிருந்து வந்தது என்ற முடிவுக்குவரமுடியாது. சங்க இலக்கியங்களில் இச்சொல் பயன் படுத்தப்படாமைக்குக் காரணம் மேலோர் பற்றி பாடினமையே யாகும்.

அடிக்குறிப்புகள்

1. இரண்டாவது உலகத்தமிழ்க் கருத்தரங்கு நிகழ்ச்சிகள், சென்னை, ஜனவரி 1968.
2. தென் மொழி-சுவடி 6, மாசி. 1968. பக்கம் 11-12.
4. டாக்டர். கமலேசுவரன், பூ.ச.கோ. கலை அறிவியல் கல்லூரி-நேரில் உரையாடல்.
5. திருஞானசம்பந்த சுவாமிகள், தேவாரம் திருவண்ணாமலைப் பதிகம் (தலமுறை) 1971. பக்கம், 647
3. மயிலை. சீனிவேங்கடசாமி'தொறு என்னும் சொல்லின் வரலாறு' இரண் டாம் உலகத்தமிழ்க் கருத்தரங்கு நிகழ்ச்சிகள், சென்னை ஜனவரி. 1968.

6. சீவக சிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியருரையும், உ.வே.சா. 1969, பக்கம் 247, பாடல் 477.

7. பெருங்கதை.

8. டாக்டர். இரா. நாகசாமி 'தர்மபுரி கல்வெட்டுகள்' 1972 பக்கம்-89 சீயவருமர் என்பது சிம்மவர்மன் என்பதன் திரிபாக இருக்கலாம்.

9. டாக்டர். இரா. நாகசாமி, 'செங்கம் நடுகற்கள்' கல்வெட்டுத் தொடர் எண்கள் 45,75,81,122.

10. தென் மொழி-சுவடி 6 மாசி, 1968, பக்கம்-11,12.

11. மயிலை சீனி. வேங்கடசாமி, 'தொறு என்னும் சொல்லின் வரலாறு,' இரண்டாவது உலகத்தமிழ் கருத்தரங்கு நிகழ்ச்சிகள், சென்னை, ஜனவரி 1968,

12. தென்மொழி சுவடி 6 மாசி 1968 பக்கம் 11-12.

13. கலாநிதி க. கைலாசபதி, 'பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்' பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் மேற்கோள் பக்கம். 127-128

14. டாக்டர். இரா. நாகசாமி 'கருவூர்வஞ்சி' பக்கம் 19, முதற்பதிப்பு 1979.

முதல் பராந்தகன் கல்வெட்டு

சி. முனுசாமி, எம்.ஏ.,
காப்பாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, கங்கைகொண்டசோழபுரம்

இதுகாறும் வெளியிடப்படாத முதற் பராந்தகசோழனது 22-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றைப்பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

கல்வெட்டு கிடைத்த இடமும் தற்போது உள்ள இடமும்

இக் கல்வெட்டு, திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டத்தில் உட்கோட்டை என்னும் கிராமத்தில் சிறிய மாளிகை என்று வழங்கப்படும் இடத்தில் உள்ள S. இராமசாமி என்பவருடைய நிலத்தினடியில் இருந்து கண்டெடுக்கப் பெற்று, கடந்த ஆண்டு தமிழ்நாடு அரசுத் தொல் பொருள் ஆய்வுத் துறையால் மாளிகை மேட்டில் உள்ள அருங்காட்சியகத் திற்குக் கொண்டு வரப்பட்டுப் பார்வைக்கு வைக்கப்பட் டுள்ளது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட கோ
2. ப் பரகேசரி வர்மர்க்கு யாண்டு
3. இருபத்தி யிரண்டாவது மதிணாயகஞ் செ
4. ய்கின்ற நாரண மங்கலமுடை
5. யான் விண்ணப்பத்தினால் மூவே
6. ந்தப் பெருந்தச்சன் வாய் கேழ்வி
7. யில் தஞ்சாவூர் இருமடி சோ
8. ழப் பெருந் தெருவில் ஏறின வளஞ்
9. சியர் ஐநூற்றுவர்க்கு அருளிச்
10. செய்த அருளினால் பெற்ற பரிச
11. மாவது வெட்டியும் வேதனை
12. யும் இறையும் எச்சோறும் இ

13. றாததாக நிலைத்தளமும் பேட்டை
14. த் தாவளமும் இவகளேய் பெறு
15. வதாகவும் என்றமர எப்பேர்
16. பட்ட கோவும் புக்குந
17. லியித தாகவும் இப்பரிசு
18. எப்பேர்பட்ட ஸர்வபாகம்
19. சந்திராதித்தவர்க்கு அருளிச்
20. செய்ய . . . . . .
21. . . . . .
22. . . . . .

கீழ் உள்ள இரு வரிகள் சிதைந்துள்ளன. அத்துடன் கல்வெட்டும் முடிவடைந்து விடுகிறது.

கல்வெட்டால் அறியப்படும் செய்திகள்

முதற் பராந்தக சோழனது இருபத்தி இரண்டாவது ஆட்சியாண்டில் தஞ்சாவூர் இருமடி சோழப் பெருந் தெருவிற்கு வந்து குடியேறின வளஞ்சியர் ஐநூற்றுவர்க்கு இடம் (அதாவது நிலைத் தளமும் பேட்டைத் தாவளமும்) வேண்டு மென்று மூவேந்தப் பெருந்தச்சன் என்பவன் நாரண மங்கல முடையான் என்னும் அரசனது மதிள்நாயகத்திடம் நேரிடை யாகக் கூற, அதனைக் கேட்ட மதிள்நாயகம் அரசனிடம் மனு செய்துகொள்ள அரசனும் அதற்கிசைந்து அவர்களுக்கு வசிப்பதற்குரிய இடத்தையும் வாணிகத் தொழில் செய்வதற்குரிய தொழிற்பேட்டையையும் வெட்டி, வேதனை, இறை, எச்சோறு முதலாய வரி நீக்கி பரிசிலாக அளித்துள்ளான் என்ற செய்தி குறிக்கப்படுகிறது. கல்வெட்டின் இறுதி இரு வரிகள் சிதைந்திருப்பினும் நமக்கு ஒரு முழுமையான செய்தி கிடைக்கின்றது.

இதில் வளஞ்சியர் ஐநூற்றுவர் என்ற ஒரு இனம் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் யார்? அவர்கள் எங்கிருந்து தஞ்சாவூருக்கு வந்து குடியேறினார்கள்? என்பதும் வெட்டி, வேதனை, இறை, எச்சோறு நிலைத்தளம், பேட்டைத்தாவளம் என்பதும் வினாவுக்குரிய பகுதிகளாகும்.

வளஞ்சியர்

1939-40-ஆம் ஆண்டு இந்தியக் கல்வெட்டு அறிக்கை எண் 193, 402 ஆகியவற்றில் வணிகர்களுக்குள் நாநாதேசி, திசை யாயிரத்து ஐநூற்றுவர், மணிக்கிராமத்தார், நகரத்தார், வளஞ்சியர், அஞ்சுவண்ணத்தார் என்ற பல குழுவினர் இருந்தனர் என்ற குறிப்பு காணப்படுகிறது. இக்குறிப்பிலிருந்து வளஞ்சியர் என்ற பிரிவினர் வணிகக் குழுக்களுள் ஒரு பிரிவினர் என்பது புலனாகிறது. மேலும் சில கல்வெட்டுக்களில் தென்னிலங்கை வளஞ்சியர் என்ற குறிப்புகள் காணப் படுகிறன்றன.[1]

இதனால் வளஞ்சியர் என்ற வணிகக் குழுவினர் பராந்தகனது ஆட்சிக் காலத்தில் ஈழநாட்டிலிருந்து வாணிபத்தின் பொருட்டு தஞ்சையில் குடியேறினார்கள் என்பதும் பின்னாளில் தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களுக்குச் சென்று தங்கி வாணிகம் செய்து வந்தார்கள் என்பதும் தெள்ளிதிற் புலப்படுகின்றது.

மேலும் இக்கருத்துக்கு வலுவூட்டும் வகையில் இலங்கையில் உள்ள கல்வெட்டு ஒன்று வளஞ்சியர் என்பார் ஈழநாட்டவர்கள் என்பதையும் பௌத்த சமயத்தைச் சார்ந்தவர்கள் என்பதையும் உணர்த்துகின்றது.

இவ்வாறு வாணிபத்தின் பொருட்டுத் தமிழகம் வந்தடைந்த அவ்வினத்தவர் சமய சார்பற்றவராய்ப் பொதுநோக்கோடு அறச்செயல்கள் பல செய்துள்ளனர். அதன் காரணமாகத் தமிழ் மக்களால் பெரிதும் மதிக்கப் பெற்று வாழ்ந்து வந்தனர் என்றும் தெரிகிறது.

எடுத்துக்காட்டாகச் சிலவற்றை ஈண்டு குறித்தலும் ஏற்புடைத்தேயாம். இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக் கோட்டையிலுள்ள சுந்தரேசுவரர் கோயிலில் அருந்தவஞ் செய்த நாச்சியாரையும் இலிங்கபுராணத் தேவரையும் தென்னி லங்கை வளஞ்சியருள் ஒருவனாகிய சேகல் சேவகத்தேவன் என்பான் எழுந்தருளுவித்த செய்தி அக்கோயிலிலுள்ள இரண்டு கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது.[2]

தஞ்சை மாவட்டம் மாயவரம் வட்டம் திருவேள்விக்குடிக் கோயிலின் ஒரு பகுதியைத் திசையாயிரத்து ஐநூற்றுவரும், வளஞ்சியரும் கட்டுவித்தனர் என்று அக்கோயில் கல்வெட் டொன்று கூறுகின்றது.[3] அடுத்து, இதே மாவட்டம் நன்னிலம் வட்டம் திருக்கண்ணபுரத்திலிருந்த கருணாகரவீரர் மடத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களைத் திருவிழாக் காலங்களில் உண்பிக்கும் பொருட்டு ஒவ்வொருவரும் இரண்டு காசு வரிகொடுக்க வேண்டுமெனத் தென்னிலங்கை வளஞ்சியர்கள் தமக்குள் ஓர் உடன்படிக்கை செய்து கொண்ட செய்தி அவ்வூர் சௌரிராசப் பெருமாள் கோயிலிலுள்ள கல்வெட்டொன்றில் காணப்படு கிறது. தமிழ்நாட்டுச் சிற்றூர்களில் வசித்து, வாணிகம் நடத்தி, சமயத்தை வளர்த்துவந்த அக்குழுவினர் பல்லாற்றானும் பேரூர்களில் சிறந்து விளங்கியவராதல் வேண்டும் என்பதை அறிய முடிகிறது.

வெட்டி வேதனை

வெட்டி, வேதனை என்ற இவ்விரண்டு சொற்களும் கல்வெட்டுக்களில் இணைந்தே வந்துள்ளன. அதுவும் குறிப்பிட்ட ஓரிரு இடங்களில்தான் அதனை நாம் பார்க்க முடிகிறது. இதே போன்று அடுத்த இரண்டு சொற்களாகிய இறை, எச்சோறு என்பனவும் இணைந்தே ஓரிரு இடங் களில் வந்துள்ளன. குறிப்பாகச் சொல்லப் போனால் வெட்டி, வேதனை, இறை, எச்சோறு ஆகிய நான்கு சொற்களில் 'இறை' என்ற சொல்லைத் தவிர மற்றைய மூன்று சொற்களும் மிகுதியாகக் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்படாது ஏதோ ஓரிரு இடங்களில் மட்டுமே வந்துள்ளன. இதற்குக் காரணம் என்ன என்பதும் புலப்படவில்லை. கல்வெட்டுத் தொகுதி களில் ஆராய்ந்து பார்த்ததில் முதற் பராந்தகனது 37-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றில் மட்டும் அச்சொற் றொடர் வந்துள்ளது. அவை: 'இறை நீக்கி இதுவல்லது எப்பேர்பட்ட இறையும் எச்சோறும் வெட்டியும் வேதனையும் நீக்கி'[4] என்ற ஒரே குறிப்பு மட்டும் நமக்குக் கிடைக்கின்றது.

மேலும் இந்நான்கு சொற்களும் பொதுவாகச் சில வரி களை (Kind of Taxes) உணர்த்துவனவாய் உள்ளன. சான்றாக, 'ஆயமும் காசு கடமையும் பொன் வரியும் வெட்டியும்

செக்குக் கடமையும் தறிக் கடமையும் திருமடைவிளாகத்தில் பட்டி குற்றமும் ஸ்ரீ காரியப்பேறும் எப்பேர்பட்ட அனைத் தாயங்களும்' என்ற தொடரும், அடுத்து 'பொன் வரியும் வெட்டி யும் ஆயமும் பட்டி குற்றமும் ஸ்ரீ காரியப் பேறும் உள்ளிட்ட அனைத்தாயங்களும்' என்ற தொடரும் காணப்படுகின்றன.[3]

இவற்றில் எல்லாம் வெட்டி என்ற ஒரு சொல் மட்டும் தனித்து வந்துள்ளது. அதுவும் வரி என்ற பொருளில் வந்துள்ளது.

இன்னொரு கல்வெட்டில் அதாவது பராந்தகனது 15-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் 'வெட்டியும் அமஞ்சியும் இறையும் எப்பேர்ப் பட்டதும் கொள்ளப் பெறாதோமாகவும்' என்ற ஒரு குறிப்பு வந்துள்ளது. இதில் வெட்டியென்ற சொல் லோடு இறையென்ற சொல்லும் வரியென்ற பொருளில் வந்துள்ளது கூர்ந்து நோக்கத்தக்கதாகும். பொதுவாக இறை யென்றாலே அரசனுக்குச் செலுத்தப்படும் வரி என்று ஒரு பொருளுண்டு என்பது யாவரும் அறிந்ததே.

வேதனை, எச்சோறு இவ்விரு சொற்களும் நேரடியாக வரியென்று பொருள் தருவதாகத் தெரியவில்லை. இருப்பினும் வரியை யுணர்த்தும் வெட்டி, இறை என்ற சொற்களுக்கு இடை யில் வருவதாலும், அதோடு அச்சொற்களுக்குப் பின்னால் ஒன்றன் பின் ஒன்றாக வருவதாலும், இவையும் வரியை உணர்த் தும் சொற்களே என்று நாம் துணிந்து கூறுவதற்கு வாய்ப்பு உள்ளது. அதோடு மறைமுகமாக ஏதோ ஒரு வரியை இச் சொற்கள் உணர்த்துகின்றன என்று கொள்ளவும் இடமேற் படுகிறது. பொதுவாக இச்சொற்களைப் பற்றிய பொருள் என்ன என்று நோக்குமிடத்து வெட்டி என்ற சொல்லுக்கு ஊரிலே பொதுக் காரியங்களுக்காக மராமத்து வேலைகளுக்குக் கூலியில்லாமல் செய்யும் ஊழியம் என்று பொருள். மேலும் ஊர்ச் சபைக்கு இறுக்கும் கடமையும் ஆகும் என்று பிறிதொரு பொருளும் உண்டு.

வேதனை

கல்வெட்டுக்களில் சில சொற்களில் உள்ள எழுத்துக்கள் ஒலி மாற்றம் பெற்றுவருவதுண்டு. அந்த வகையில் இச்சொல்,

வேதனம் > வேதனை > வேதினை > என்று ஒலிமாற்றம் பெற்று மாறுதலடைந்து வந்துள்ளது. இச்சொல்லின், பொருள் கூலி அல்லது சம்பளம் என்று பொருள்படும். பெரும்பாலும் வெட்டி என்ற சொல்லோடு சேர்ந்து இணைந்து தான் காணப்படுகிறது.

இறை

பொதுவாக அரசனுக்கோ அல்லது அரசுக்கோ செலுத்தப் படும் வரியையுணர்த்தும் சொல்லாகும். பெருவாரியாக நில வரியைக் குறிப்பதாகவே காணப்படுகிறது.

எச்சோறு

மேலே கூறியதைப் போலவே இச்சொல்லும் சிறிது மாறு தலடைந்து காணப்படுகிறது. எற்சோறு என்பதே சரியான வடிவம். அதாவது இச்சொல்லுக்குத் தென்னிந்தியக் கோயிற் சாசனம் பகுதி-II பக்கம் 1042-இல், 'இரவு நேரத்தில் கிராமத் தொழிலாளிகளுக்கு இடும் சோறு' என்று பொருள் கூறப்பட் டுள்ளது. இருப்பினும் இது பொருத்தமுடையதாகத் தெரிய வில்லை. காரணம் இச்சொல்லைப் பிரித்துப் பொருள் பார்க்கும் போது (எல்+சோறு=எற்சோறு > எச்சோறு) பகல் சாப்பாடு என்பது புலனாகிறது.

மேலும் 'எல்' என்பதற்குச் சூரியன், ஆதவன், வெளிச்சம் என்ற பொருள்களும் உண்டு. எனவே 'எல்' என்பதனைப் பகலாகக் கொள்ளுதல் பொருத்தம். எனவே இதனைப் பகல் உணவு என்று கொள்வதுதான் மிகவும் சரியானதாகத் தோன்றுகிறது.

அத்தோடு கலாநிதி ஆ. வேலுப்பிள்ளையவர்கள் தாம் எழுதிய 'சாசனமும் தமிழும்' என்னும் நூலில் (பக்கம்: 299) கல்வெட்டுக்களில் எழுத்துக்கள் ஒலி மாற்றம் பெற்று வருதலைச் சுட்டிக் காட்டியவிடத்து ற்-ச் = எற்சோறு > எச்சோறு (பகல் சாப்பாடு) என்றே கூறியுள்ளார் என்பதனையும் ஈண்டு நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நிலைத்தளம்

இதற்கு நிரந்தரமாக வசிப்பதற்கு உரிய ஓர் இடம் என்பது பொருள்.

பேட்டைத்தாவளம்

பேட்டை என்று சொன்னாலே ஏதோ ஒரு தொழில் செய்கின்ற இடம் என்று ஒரு பொருளுண்டு. எனவே பேட்டைத் தாவளம் என்பது தொழில் செய்வதற்கு உரிய ஓர் இடம் என்று பொருள் படுகிறது.

கல்வெட்டின் இறுதி வரிகள் சிதைந்து விட்டன. இருப்பினும் இக்கல்வெட்டினுடைய முழுப் பொருளையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

எனவே மேற்கூறிய இச்செய்திகளிலிருந்து இக்கல்வெட்டு மதிரை கொண்ட கோப்பரகேசரியாகிய முதற்பராந்தகனது ஆட்சியின் இருபத்தியிரண்டாவது ஆட்சி ஆண்டில் பொறிக்கப் பட்டது என்பதும், அவன் வளஞ்சியர் ஐநூற்றுவர்க்கு வசிப்பதற் குரிய இடமும் வாணிகம் செய்வதற்குரிய தொழிற்பேட்டை யையும் பரிசாகக் கொடுத்தான் என்பதும் வெளிப்படுகிறது. அவ்வாறு பரிசாகக் கொடுக்கும்போது வெட்டி, வேதனை, இறை, எச்சோறு முதலாய வரிகள் நீக்கிக் கொடுத்தான் என்பதும் புலனாகின்றது.

இதுவே இக்கல்வெட்டில் குறிப்பிடத்தக்க முக்கிய செய்தி களாகும்.

அடிக்குறிப்புகள்

1. A.R.E. *406/1914; 505/1922; 598/1926.*
2. A.R.E. *406, 407/1914.*
3. A.R.E. *131/1926.*
4. S.I.I. vol. V, No. 711.
5. S.I.I. vol. VI, No. 255. 256.

A RARE DOCUMENT OF MARATHA

C. CHANDRAVANAN, M.A.,
Curator
Department of Archaeology, Tanjavur

The major sources for writing history are inscriptions, copper plates and palm leaf manuscripts. With the help of these important evidences, we are able to reconstruct the history. An attempt is made here to study how a letter belonging to the Maratha period is of great significance.

Thanjavur Marathas

By way of introduction, we may state here that the period between 1675 and 1815 was important so far Thanjavur is concerned. Thanjavur was ruled by Maratha kings for a period of 180 years roughly. Shaji (1682-1712) and Serfoji II (1798-1833) were famous kings of this dynasty.

Serfoji II

He was the adopted son of Tulajaji. "This is not my son but yours. You must be his guardian and protector. I lay his hand in yours"[1]. These were the words of Tulajaji when Serfoji II was committed to the care of Rev. Schwartz, his guardian. King Serfoji received good education. He became man of letters and also patron of Arts. The British administration gave him pension and allowed him to have the royal titles only.[2]

The king built so many choultries and made provisions to feed the pilgrims on their way to Ramesvaram from Thanjavur. This noble aim of the king earned him good appreciation from all quarters. Bishop Heber said once 'I have witnessed many crowned kings but I have seen a *real* king now only.'[3] This remark is enough to prove the head and heart of this royal personality.

Choultries

There are a number of choultries built by Marathas in Tamil-Nadu. They served the humanity. Reforms were made from time to time to tone up the efficiency.[4]

In knowing the detailed account of the administration of these choultries, one has to study the letters of correspondence. The Department of Archaeology has succeeded in collecting these datas from paper Manuscripts available from TMSSM Library. The present paper or document is discovered from the heap of papers kept in a neglected corner of the palace.

The Document under study is a hand-made paper measuring 28 cm in length and 19 cm in breadth. This single sheet written on both sides containing 19 lines on the first page and 6 lines in the second page mentions the place, date and the contents of the correspondence between the two choultries. The date of the paper Document is 24th December 1826 as attested to at the end of the Document.

The contents

The Contents of the Document are very interesting as it throws some light on the then society. The Government wanted to prepare copies of the important works. Therefore it gave instructions to supply necessary stationeries or writing materials. The Government wanted to have 16,000 seasoned palmleaves with a span of 4 fingers (*Nalu virarkkidai*) and with standard length. It contains an order that the above materials should be supplied at an early date.

The transaction was between Muttambalpuram choultry at Orattanadu and Draupadambal choultry at Manalmelkudi. The introductory portion is very interesting and it runs like this.

"Draupadāmbālpuram Chattiram Kamāvisu Sivāji Vināyaka paṇḍitanukku-anuppiṇa tākkīdu eṇṇaveṇrāl."[5]

The addressee was Sivaji Vinayaka panditan who seems to be the secretary or manager (*Kamāv isu*) of Draupadambalpuram.

He received the order from the authorities of the Muttambalpuram choultry.

The point of interest in this document is the government order and how it was relayed from one choultry to the other. In the present case, the order was sent to Muttambal choultry, which in turn, sent to the Draupadambal Choultry, which was perhaps under the administrative control of the former. It is always the practice of the government to quote the order of the higher authority in the act of issuing circulars to the subordinate officers to get the work done. This process and the urgency or the necessity to issue the order are well brought out in the following lines.

'Sarkārukku postagam tayār seyya vēṇḍiyadarkkāge nālu virarkidaikku kuṛaiyāmal irukkira ōlaigaḷil nalladāyun meleḷudiyappaḍi agalamāyirukkiradu pārttu padināyiram olai vegu jarurāi vandu sērumbaḍiyāna sīkkirattil aṇuppach-cholli uttaṙavu vandiruppadāl[6].....'

It is also stated that any violation or negligence of the order would be viewed seriously and sternly. They are liable for the consequences. The word *Jarūr* is twice repeated to indicate the extra-care and attention to be paid on this subject.

The Document contains the admixture of alien worlds such as *Kamāvisu, tākkidu, Sarkār, postagam, Jarūr, Alakseayam, piramādam, Pāddiyatai, Sarvvajākkiratai etc.*

These non-Tamil words were the technical expressions adopted and recognised by the Government. It shows the infiltration of non-Tamil words in Tamil country, probably due to the Muslim inflnence or expansion. Even the Britishers adopted certain Urdu and Persian words in the Judicial Department. It is to be noted in this connection that the use of *Sabāsh Salām'* etc were seen as early as Kumarakuruparar in the literary works of that period.[7]

In course of my study, I have come across similar letters. They are very useful for comparative study. They are given at the end with their gists.[8] These letters give an account of the activities such as vedic sacrifices[9],-stock-taking at the choultries[10] remaking of ornaments[11] - grant in cash for the upkeep[12] - the

visit of a dignitary and his daily routine at the choultry[13]. petitions entertained[14] and monthly schedules sent to the authorities.[15]

Conclusion

In conclusion we may observe certain salient features and inferential deductions.

1. The urgency to put an indent for the writing materials has got special implication. This is the period in which Serfoji tried very hard to collect all the available manuscripts for the famous Saraswati Mahal Library which was his brain child and as such naturally the demand for this stationary would have been felt acutely and the request was made to several agencies under their administrative control.

2. The particular Choultries namely - Muttambalpuram Chattiram should be analysed retrospectively, the kings fervent love towards his fiancee and the construction of the choultries after her which wielded more influence on the minds of the people as well as in the realm of religious activity.

3. The seven letters that are quoted give indirect references about the social and religious aspect of the period and in no way contribute supporting evidence.

FOOT NOTES

1. Mr. Venkatasamy Rao, Tanjore Distict Manual
2. Memories of Rev. Schwartz
3. Bishop Heber's note
4. Note on the past and present Administration of Rajah Chattrams- [1908
5. Text - Line 1 to 3
6. Text - Line 4 to 12
7. History of Tamil Literature
8. T.M.S.S.M. Library - Tanjore
9. T.M.S.S.M, Library - Tanjore - paper manuscript book no. 10I/11/ 19/ 1806 A.D.
10. T.M.S.S.M. Library - Tanjore Book No. 43/p.No./27/40/1814 A.D.
11. T.M.S S.M. Library - Tanjore Book No. 18/100/103/6/1819 A.D.
12. T.M S.S.M. Library - Tanjore Book No. 18/100/46/4/ 1825 A.D.
13. T.M.S.S.M. Library - Tanjore Book No. 10/p.97/29/45/ 1831 A.D.
14. T.M.S.S.M. Library - Tanjore Book No. 42/p.127/2/14/ 1842 A.D.
15. T.M.S.S.M. Library - Tanjore Book No. 20/p 102/45/2/ 1855 A.D.

APPENDIX I

Letter No. 1

It states the gift of 17 *Chakrams*, 1 *Panam* for buying gold ornaments and 4 *Panams* for buying silver ornaments in connection with the performance of Vedic sacrifice (*Yagnam*) and the distribution of those ornaments as a part of the sacrifice at Muthambalpuram chattiram.

Letter No. 2

This informs the income of *Kalal* of four village in '*Uppanakarai Vattam* which comes under *nishpatti*' and also the notes to the government regarding stock-taking (*Sutanthira Iveji*).

Letter No. 3

The 3rd letter the date 12th Saka 1741 refers to the rendering of the accounts and the statement of accounts relating to the car-festival of Sri Vijayanathaswamy temple etc; and remaking of icon's ornaments etc., and the consequent compliance of the request of the temple and the immediate grant of 325 *Chakrams*, 2½ *Panams* on 20th in the month of Rabi lovel.

Letter No. 4

Records the royal grant of Serfoji of 600 *chakrams* from the treasury accounts towards the interest due to the government on the date cited 4th Moharam to Muttambalpuram chattiram.

Letter No. 5

It is an interesting one as it throws some light on the officials visited to Saythabai Chattiram where he performed his *sandhyavandanam*. His travel from there to Muthambalpuram Chattiram during the night roughly about 7 pm. (2-*Nālikai*).

His supper there and also his daily routine before the day-break such as taking bath, having food at the appointed timings

and the travellers message to 'Her Highness' through His Highness. This letter in brief discribes the visit of the official spending of the day in the choultries and conveying the message to the royal-couple are stated in great detail.

Letter 6 and 7 seem to belong to the period of Sivaji II

Letter No. 6

Records the request made on 10th Karthigai by the son of *Kuttiyan* the resident of Muthambalpuram and his employment in *Tatti Mahal* and his medical treatment of cattle belonging to 'His Highness'

Letter No. 7

This is dated in Saka 1777 Rakshasa in the month of Rajab. It contains monthly schedule in the various Choultries with descriptive monthly statement of accounts.

★

APPENDIX II

கடித நகல்

உ

1. துரௌபதாம்பாள்புறம் சத்திரம் கமாவி
2. சு ஜீவாஜீ விணாயகபண்டிதருக்கணு
3. ப்பிண தாக்கீதென்ன வென்றால்
4. சற்க்காருக்கு பொஷ்த்தகம் தயா
5. ற் செய்ய வேண்டியதர்க்காக னாலு
6. விறற்க்கிடைக்கி குறையாமலிருக்கிற
7. ஓலைகளில் நல்லதாயும் மேலெழுதிய
8. படி அகலமாயுமிருக்கிறது பார்த்து
9. பதினாயிரம் ஓலை வெகு ஜறூறாயி
10. வந்து சேரும்படியான சீக்கிறத்தில் அ
11. னுப்பச் சொல்லி உத்தரவு வந்திருப்ப
12. தால் நீறிந்த உத்திரவு கண்டந்த
13. ட்செணம்
14. மேலெழுதிய னாலு விறைக்கிடைக்கிக்
15. கொறையாத அகலமான ஓலை பதி
16. னாயிரமும் கூடுமான சீக்கிறத்தில் இ
17. விடம் வந்து சேர அனுப்பவும் . . . .
18. இதுகாரியத்தில் யெவ்வளவாவ
19. து அல்லச்சியம் செய்யுவீறேயாகி
20. லதர்க்காக வருகிற பிறமாதத்துக்கு
21. நீறே பாத்தியப்பட்டிருக்க வே
22. ண்டியதாயிருக்து மன்னியிலி
23. தற்கு தக்கபடியும் நடப்பி
24. விக்கப்படுமாகச்சே சருவஜா
25. க்கிறதை செய்யவும் ஜறூர் ஜறூர்

சூஆஉயசம் ஷூ
டிசம்பற் மீ உயச உ
முக்த்தம்மாள்புறம்

VADI

NATANA. KASINATHAN, M.A.,
Director (in charge)
Department of Archaeology, Madras-28

This paper aims at drawing the attention of the scholars to a rather insignificant word *Vadi* that occurs in literature as well as in inscriptions. Scholars had already attempted to interpret this word, but could not satisfactorily xeplain the true nature of it. This paper analyses this word at full length and presents the true purpose of it.

Sudamani Nikandu, a Tamil dictionary enumerates a number of names for 'way'. *Vadi* is one of them.[1] The Tamil Lexicon[2] defines the word *Vadi* as the rest place of animals, mire, way and channel. In a list denoting village names Saw Ganesan has given *Vadi* one among them.[3] T. N. Subrahmanyan in his monumental work has dealt with this word as channel, road, street the same as Vali or Vadi.[4] K. V. Subrahmanya Iyer interpreted this word as road[5].

The Sangam poem Kalithogai[6], assignable to 3rd century A.D. refers to Vadi as a rest place for animals. In theTevaram,[7] datable to 7th century A.D. Vadi is found in relation to mire in which fish jump and joyfully swim. The Bharatam[8] quotes Vadi as a way.

Let us now turn to epigraphical sourcas. In inscriptions Vadi is found mentioned in almost all the places as a border of the gifted land. The first reference to Vadi comes from the Pallankoil copper plate of Simhavarman, wherein it occurs as māvēttattu Vadi[9]. The Uttaramerur inscriptions of the Kampavarman period refer to a number of Vadis such as Pallavanāraṇa Vadi, Tirunāraṇa Vadi, Viḍēlviḍugu Vadi, Paramēsvara Vadi, Mārpiḍugu Vadi etc. in Uttaramerur Chaturvedimangalam.[10]

The epigraphs of the Chola period mention Vadis in large numbers and provide a clue to understanding the meaning of this word *Vadi* and its purpose. An inscription[11] of Parantaka Chola, from Uttaramerur, reads as follows:

". . . . எம்மூர்த் தெற்கில் பரமேஸ்வரவதி நீராயிட்டு காலியும் களறும் உள்ளிட்டு மற்றும் எப்பேர்ப்பட்ட சாதியும் மிசங்குவ தரிதாயிட்டு பரமேஸ்வரவதியான முக்கோலோடும் குறைமேற் கடைய குடிகள் பக்கல் சுப்ரமண்ய வாய்க்காலுக்கு வட(க்) கிழக்கு மேக்கிரு கோலகலங் குழி கொண்டு பழைய வதியிலும் மொரு கோல . . . . . ற்காடெய் முக்கோலகலத்தால் வதி யட்டிக் கீழ்க் கடை நீர் போவதாகவும் . . . . ."

From the above passage it is understood that a channel was to be dug in 3 'kol' width to let out the used water. Therefore it is quite possible that Vadi means a channel and it was used to let out the used water i.e, the unwanted water. It seems that this channel was not used for irrigating the land but in times of emergency such as flood it was utilised for baling out the water of the cultivated fields. Further it can be argued that for this reason only almost all the Vadis seem to have been dug in North-South orientation[12] since the irrigating channels are generally in West-East orientation. There is a reference in the Kasakkudi copper plate[13] to two kinds of channels, one for irrigating the field and the other for letting out the unwanted water, namely Āṟṟukkāl and Veḷḷakkāl. It is described in that plate that the individuals gifted with Brahmadēya lands were permitted to irrigate their lands by bringing water from the the Seyyār, Vehha and the Tiraiyaneri and were also allowed to dug an Āṟṟukkāl and a Veḷḷakkāl. Āṟṟukkāl may have been used for bringing water from the water sources mentioned above. The Veḷḷakkāl may have been used for baling out the unwanted water in time of flood, since Veḷḷam literally means flood. Therefore it may not be wrong to equate this Veḷḷakkāl with Vadi.

In a stone inscription[14] of Kulōttunga Chola's period *Vadi* is found mentioned in association with Vāykkāl and *kaṇṇāṟu* as the borders of the gifted land. From this reference it is crystal

clear that Vadi was also a kind of channel but, its use was different from that of Vāykkāl and Kaṇṇāṛu. It seems that every Kaṇṇāru had a Vadi to drain out the water. That channel is mentioned in one epigraph as Vilakkuvāykkāl i.e, the channel which was used to drain out the water[15] The present day Vaḍikāl channel which is found near the cultivable lands makes one equate it with the ancient Vadi.

It appears that every Dēvedānam land had a Vadi for its use according to a number of inscriptions[16] assignable to Chōla Kings Kulōttuṇga II and Kulōttunga III and Hoysala King Virasōmīsvaradēvar and Vira Rāmanāthadēvar. In a few instances it is curiously found that some lands themselves were callde Vadi. One epigraph[17] engraved in the 16th regnal year of Saḍaiyavarman Sundarapāndyadēvar refers to the western border of the gifted land as follows:

> " . . . இந்நாயனார் பழந்திருநாமத்துக்காணி
> யான பஞ்சவன் மாதேவி வதிக்குக் கிழக்கு . . "

Another epigraph[18] belonging to the period of Rājarāja III also mentions the western border of the land as found below:

> " . . . வண்ணக்குடியான குலோத்துங்கச் சோழச்
> சருப்பேதி மங்கலத்து திருநாமத்துக்காணியில்
> விற்ற ஸ்ரீ வீர நாராயணவதிக்கு கிழக்கு . . . "

In the above two examples the lands were called as Panchavanmādēvi Vadi and Viranārāyaṇa Vadi. In course of time some of the channels (Vadi) may have been changed into land by depositing and accumulating the silt brought from the cultivated lands. But the lands formed by the above process will be containing more mire. It is because of this it seems that Vadi was also known as mire. Even today in Thanjavur, South Arcot and Periyar districts the land that contains more mire is called Vadi.

FOOT NOTES

1. Sudamani Nikandu, edited by Arumuka Navalar, Rakshasa year, Avani month, p. 113
2. Tamil Lexicon, Vol. VI, Part I, p. 3489 (1934).

3. Handbook, published in view of IInd World Tamil Conference, page 204 (1968).
4. South Indian Temple Inscriptions Vol. III, Part II, page LXXXVI
5. Historical sketches of Ancient Deccan, Vol. II, p. 210.
6. Kali:119.
7. Devaram:413. 7.
8. Arjunan Tavam 27.
9. Pallavar Seppedukal Muppadu, page 29, Pallankoil copper-plate 11. pp. 42-43.
10. A detailed study of this Chaturvedimangalam has been done by F. Gros and Dr. R. Nagaswamy, Uttaramerur, published (1970).
11. S.I.I. Vol. VI. No. 292.
12. There were few exceptions running in west-east orientation.
13. Kasakkudi copperplates, 11. pp. 114-117, Pallavar Seppedukal Muppadu.
14. S.I.I. Vol. III, No. 316.
15. S.I.I. Vol. VI, No. 316.
16. S.I.I. Vol. V, No. 705, 632, 631, 629, 658.
17. S.I.I. Vol. XVII, No. 143.
18. S.I.I. Vol. V, No. 707.

★

வரலாறு

அத்திகோசத்தார்

ஆர். பூங்குன்றன், எம்.ஏ.,
பதிவு அலுவலர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, கோவை

பண்டைய இந்தியாவில் பல்வேறு தொழிற்குழுக்கள் (Guilds) செயலாற்றிச் சிறப்படைந்தன என்பது வரலாறு கண்ட உண்மை. இந்தியாவின் பண்டைய அரசியல் கோட்பாடுகள் பற்றி அறிய உதவும் தனிச்சிறப்பு வாய்ந்த அர்த்த சாத்திரம் தொழிற்குழுக்களைப் பற்றி விதந்து பேசுகிறது. இத்தகைய குழுக்கள் பொதுவாழ்வில் மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கின. தென் இந்தியாவில் பண்டொழிந்த காலம் தொட்டுத் தோன்றி நிலைபெற்ற குழுக்கள் பலப்பல. மதுரை மாவட்டம் மீனாட்சிபுரம் தமிழ்ப்பிராமி கல்வெட்டு, வெள்ளறை நிகமம் என்ற வணிகக்குழுவைச் சுட்டுகின்றது.[1] இதுவே தமிழகத்தின் தொழிற்குழுக்களில் காலத்தால் முற்பட்டது எனலாம். மேலும் சங்க இலக்கியம் வணிகச்சாத்து பற்றிப் பேசுவதை எடுத்துக் காட்டலாம்[2]. சாத்து என்ற சொல் பெருவழியில் செல்கின்ற வணிகக் கூட்டத்தினரைக் குறிப்பதாகும். அதனுடைய தன்மை பற்றியும் நிர்வாக அமைப்புப் பற்றியும் சான்றுகள் கிடைப்பது மிகக்குறைவு. முன் மத்தியகாலத் தமிழகத்திலும், இத்தகைய தொழிற்குழுக்கள் பல்கிப் பெருகின. சித்திரமேழி பெரியநாடு, நகரம், திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர், வலஞ்சியர், நானாதேசி, மணிக்கிராமம், அஞ்சுவண்ணம் போன்ற குழுக்கள் குறிப்பிடத்தக்கவை. வணிகர்கள் வைத்திருந்த படைக் குழுவினர் கூடத் தங்களுக்கென ஒரு குழு வைத்திருந்தனர். வணிகர்களும், படையினரும் மத்தியகாலத்து இறுதியில் அரசியல் வாழ்வில் பெற்றிருந்த செல்வாக்கு குறிப்பிடத்தக்கது.[3] அது தனியாக ஆய்வு செய்யப்படவேண்டிய ஒன்று. இவ்வாறு நிலைபெற்ற பல்வேறு குழுக்களில் அத்திகோசமும் ஒன்று. இதுபற்றித் தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களும், இலக்கியங்களும் விதந்து பேசுவதைக் காணலாம்.

தமிழ் இலக்கியம் காட்டும் அத்திகோசத்தார்

அத்திகோசம் பற்றிக் கொங்குவேளிரின் பெருங்கதையில் முதன் முதல் குறிக்கப்படுகின்றது.

உதயணன் உருமண்ணுவாவுக்கு விருத்தியாக நாடும், சேனாபதி பட்டமும் அளித்தது பற்றிக் கூறுகின்றபோது மேலே கூறப்பட்டவர்கள் உடன் இருந்தார்கள். நேரம் அறிவிக்கும் முகூர்த்த விதானிகள் ஐம்பெருங்குழு, அத்திக்கோசம், மனை பெரும்சனம், தேவிமார்கள், தானை ஆகியோர் சேனாபதி பட்டம் அளிக்கும் விழாவில் பங்கேற்றனர். அவ்வாறு பங்கேற்பவர்களில் அத்திகோசத்தாரும்[5] இருந்துள்ளது அவர்தம் சிறப்பைக் காட்டுகின்றது. பெருங்கதை தவிர பின்னாளில் வந்த உரையாசிரியர்களும் அத்திகோசத்தாரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்கு உரைகண்ட சேனாவரையர் குழுப்பெயர்க்குச் சான்று காட்டும்போது "அத்திக்கோசத்தாரும் பட்டிபுத்திரரும் போல் வருவன" என்று கூறுவார். நன்னூல் 275-ஆம் சூத்திர உரையிலும் அத்திகோசத்தார் பற்றிக்கூறுவதைக் காணலாம்.

பூலாங்குறிச்சிக் கல்வெட்டு

அண்மையில் நம் துறையால் கண்டுபிடிக்கப்பட்ட பூலாங்குறிச்சிக் கல்வெட்டு தமிழக வரலாற்றின் இருண்ட பகுதிக்கு ஒளி பாய்ச்சும் சிறப்பு வாய்ந்தது என்பதில் இரண்டுவித கருத்துக்கள் இருக்க முடியாது. இதன் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு என்றும்[6], கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்றும்[7] இருவேறு கருத்துக்கள் உள்ளன. எது எப்படி இருப்பினும் பூலாங்குறிச்சிக் கல்வெட்டு பண்டைய நாளைய தமிழகத்தின் நிருவாகம், அரசியல், பண்பாடு போன்றவற்றை அறிந்து கொள்வதற்குக் கிடைத்த சிறந்த வரலாற்றுப் பெட்டகமாகும். அந்தக் கல்வெட்டில் அத்திகோசத்தார் பற்றிக் குறிப்பிடப்படுவது விதந்து கூறத்தக்கது.

> "... தவளக் குருப்பச் செறிச்சின் மலைமேற் செடாவித்த
> தேவகுலமும் முத்தூற்றுக் கூற்றத்து வீரைபரு
> ஏ நாடா [வி]ரத்த வேக ... யும் மதிரை உலாவியத்

தான் குளத்தின் வட பக்கத்துச் செடாவித்த தாபத
பள்ளியுள் வசிதேவனாரு கோட்டமும்
[அ][8]த்திகோயத்தாரு முரைமனையாருந்
நோற்பாற்றிணைகளுந் தமக்கு காவலாக[9]''

என்று கல்வெட்டின் தொடக்கத்தில் கூறப்படுவதைக் காண லாம். கல்வெட்டில் பயின்றுவரும் வாசகத்தை ஊன்றிப் பார்க்கும்போது அதில் கூறப்படுகின்றவர்கள் எண்பேராயம் போன்ற அரசன் உடன்கூட்டத்தவர்களோ என்று கருத வேண்டியுள்ளது. பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் கூறப்படும் அத்தி கோயத்தார் பின்னாளில் அத்திகோசத்தார் என்று திரிந்து விட்டது. தமிழில் யகரம் சகரமாக திரிவது மொழியியல் கண்ட உண்மை.[10] கல்வெட்டில் 'தமக்குக் காவலாக' என்று குறிக்கப்படுதல் விதந்து கூறத்தக்கது. அத்திகோயத்தார், உரைமனையார், நோற்பாற்றிணைகள் ஆகியோர் பெரும் பாலும் படைப்பிரிவினைச் சார்ந்தவர்கள் என்று கொள்ளலாம்.

அத்திகோசத்தார் என்பார் யார்? அவர்கள் தமிழகத்திற்கு வெளியிலிருந்து வந்தவர்களா அல்லது தமிழகத்திலிருந்து பிற பகுதிகளுக்குச் சென்றவர்களா? தமிழக அரசியல் வாழ்வில் அவர்கள் பங்குதான் என்ன? போன்ற கேள்விகள் எழுகின்றன. அத்தி என்பது வடமொழியில் வரும் அஸ்தி என்ற சொல்லின் திரிபு. அஸ்தி என்பது வடமொழியில் யானை என்று பொருள் படும். கோசம் என்பதற்குப் பிங்கல நிகண்டில் கருவூலம், பொக்கிஷம் என்று பொருள்படுத்தப்பட்டுள்ளது.[11] டாக்டர் உ.வே.சா. அவர்கள் கோசம் என்பதற்குத் தொகுதி என்று குறிப்பிடுவார்.[12] சொல்லகராதி, பழங்குடி (Tribe) என்று கூறும்.[13] கோசம் என்பது கருவூலம் எனப் பொருள்படுமெனினும் அத்திக்கோசம் என வரும்போது அவ்வாறு பொருள் கொள் வதற்கில்லை. சொல்லகராதி கூறும் பழங்குடி என்ற பொருள் எந்த வகையிலும் பொருத்தமுடையதன்று.

பொதுவாகப் பண்டைய நிகண்டுகள் முதல் இன்றைய அகராதி வரை பழங்குடிக்கும், சாதிகளுக்குமிடையிலான வேறு பாட்டினைப் பெரிதுபடுத்துவதில்லை. சாதியைப் பழங்குடி என்றும் பழங்குடியைச் சாதி என்றும் மாற்றிக் கூறும் மரபு

பழங்காலந்தொட்டு நம் நாட்டில் நிலவி வருகிறது[14]. கோசம் என்பதற்குப் பழங்குடி என்று கொள்வதில் எந்த விதமான அடிப்படையும் இல்லை. ஆனால் உ.வே.சா. அவர்கள் கூறியுள்ள பொருளே ஏற்றுக்கொள்ளக் கூடியது. அவர் பெருங் கதை அடிக்குறிப்பில் அத்திகோசத்தாரைக் குழுவாக வாழ்ந்த வர்கள் என்று கூறுவார்.[15]

ஆந்திர அரசர்களும் அத்திகோசத்தாரும்

அத்திகோசம் என்ற சொல் தக்காணத்தில் வெளியிடப் பட்ட செப்பேட்டுச் சாசனங்களில் மிகுதியும் பயின்றுவரக் காணலாம். சிறப்பாக விஷ்ணுகுண்டின், கீழைச் சாளுக்கிய மன்னர்கள் வெளியிட்ட செப்பேடுகளில் அத்திகோசத்தார் ஆணத்திகளாகக் குறிக்கப்படுகின்றனர். தக்காணத்தில் அத்திகோசம் பற்றி கி.பி. 6-7 ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சி செய்த நான்காம் மாதவர்மனின் பொலம்பூர் செப்பேட் டில் முதன் முதலில் குறிக்கப்படுகிறது.[16] அதே நூற்றாண் டில் ஆட்சி செய்த கீழைச் சாளுக்கிய மன்னன் முதலாம் ஜெய சிம்மனின் பொலம்பூர்ச் செப்பேட்டிலும் அத்திகோசம் பற்றி வருவதைக் காணலாம். மேலும் அத்திகோசம் பற்றி ராஜா பிருதிவிமூலனின் கோதாவரிச் செப்பேட்டில் சுட்டப்படு கின்றது.[17] மேலே கூறப்பட்ட செப்பேடுகள் அனைத்திலும் தானத்தின் பாதுகாவலர்களாக, ஆணத்திகளாக அத்திகோசம், வீரகோசம் ஆகிய குழுவினர் கூறப்படுகின்றனர்.

தக்காணத்தின் சாசனங்களில் கூறப்படும் அத்திகோசம், வீரகோசம் ஆகிய குழுக்கள் பற்றிச் சில அறிஞர்கள் ஆய்வு செய்து முடிவும் கூறியுள்ளனர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர் டாக்டர் பிலிட் ஆவர். ராஜா பிருதிவிமூலனின் கோதாவரிச் செப்பேட்டினைப் பதிப்பித்தபோது பதிப்புரையில் அவர் இவ்வாறு கூறுகிறார்.

> " . . . இந்த அதிகாரிகள் (அத்திகோசம், வீரகோசம்) பணப்பையைத் (பசும்பொற்கை) தங்களிடம் வைத் திருந்தார்கள். இவர்களே, போரில் வீரம் காட்டிய யானைப்படை வீரர்களுக்கும், குதிரைப்படை வீரர் களுக்கும் வெகுமதி அளித்தார்கள் . . . "[18]

டாக்டர் பிலிட் அவர்கள் கருத்துப்படி அத்திகோசம் பொக்கிஷத்தை நிர்வகிக்கும் குழு என்றாகிறது. ஆனால் அவர்களுக்கும் படை வீரர்களுக்கும் இடையிலான தொடர்பு பற்றி அவர் அதிகம் கூறவில்லை. அவர் அத்திகோசத்தைப் படை வீரகர்ளுடன் தொடர்பு படுத்தியுள்ளார் என்பதையும் மறுப்பதற்கில்லை.

அஸ்திகோசம், அஸ்திபாகாதிபம் ஆகியவை ஒரு பொருள் நுதலிய பலசொற்கள் என்பாரும் உளர். அஸ்திபாகாதிபம் என்பது யானைப் பாகர்களின் தலைவன் என்று பொருள்படும். ஆனால், அஸ்திகோசம் படையோடு தொடர்பு உடையது. பொலம்பூர்ச் செப்பேட்டில் அத்திகோசத்தையும் வீரகோசத்தையும் குறிப்பிடும்போது மகாமாத்திரயோதம் என்ற அடைமொழியுடன்கூறப்படுகிறது. 'யோதம்' என்பது போர்வீரர்களையே குறிக்கும். அதுகொண்டு கல்வெட்டாய்வாளர்கள் அஸ்திகோசம் வீரகோசம் ஆகியவை முறையே யானை, காலாட்படைத் தலைவர்களைக் குறிப்பதாகலாம் என்று கூறுகின்றனர்.

தானத்தின் பாதுகாவலர்

அத்திகோசம் என்பது யானைப்படைத் தலைவர்களின் குழு என்பது உறுதிப்படுகிறது. படையில் முக்கிய பங்கு வகித்தமையால்தான் மன்னர்கள் அளித்த தானங்களை நிறைவேற்றும் ஆணத்தியாகக் குறிக்கப்படுகின்றனர்.

பிராமணர்களுக்கு அளிக்கப்படுகின்ற தானத்தைப் பாதுகாக்கும்படி படைத்தலைவர்களை வேண்டுவது குறிப்பிடத்தக்கது. முன் மத்தியகால இந்தியாவில் பிரம்மதேயங்களும், சதுர்வேதிமங்கலங்களும் புதிதுபுதிதாக உருவாக்கப்பட்டன. இத்தகைய பிரம்மதேயங்களில் பல பழங்குடி மக்கள் வாழ்ந்த பகுதிகளிலேயே ஏற்பட்டன என்பது புதுமையன்று. அரசுக்கும் அந்நாளைய சமூகத்திற்கும் 'தொல்லைகளைத் தந்துவந்த சிறு குறும்புகளை மன்னராட்சி என்ற கட்டுக்கோப்பிற்குள்ளும், சமூக நியதிகளுக்குள்ளும் கொண்டுவரவே பிரமதேயங்கள் ஏற்படுத்தப்பட்டன' அத்தகைய பிரமதேயங்கள் காட்டுப் பழங்குடிகளை நாகரிக சமூகத்திற்குக் கொண்டுவர அரும்பாடு பட்டு வெற்றியும் பெற்றன. மத்திய கால இந்தியாவில் ஏற்பட்ட

சமூக மாறுதல்கள் பற்றி இராமம்சரன் சர்மா அவர்கள் கூறுவது மனங்கொளத்தக்கது:

> " . . . ஆனால் வெற்றி பெறப்பட்ட பகுதிகளில் புரோகிதர்கள் நிலம் பெற்றனர். அவர்கள் அங்கு வாழ்ந்த இனமரபுக் குழுவினரையும், பூர்வ குடியினரையும் தம் பண்பாட்டுச் சூழலில் இணைத்தனர். இந்தச் செயல் அமைதியாகவோ அல்லது வேறு வகையாகவோ வெற்றிபெற்றது. இதற்குக் காரணம் உயர்வான பிராமணர்களின் தனிப் பொருட்கூறு வாய்ந்த பண்பாடேயாகும். அது புதிய எழுத்து முறைகளையும், மொழியையும், சடங்குகளையும், கல்வியறிவில்லா மக்களுக்கு அளித்ததோடு ஏர்உழவு புதியபயிர்கள், பருவங்கள், நாட்குறிப்பு, கால்நடைச் செல்வப் பாதுகாப்பு போன்றவற்றையும் பழக்கப்படுத்தியது. . . ."[20]

சர்மா அவர்கள் கூற்று சில மாற்றங்களுடன் தக்கணத்திற்கும், தென்இந்தியாவிற்கும் பொருந்தும்.[21] பிரமதேயங்கள் தோன்றுவதற்குக் காரணம் அதுவாயின் பிராமணர்களின் ஆரம்பகால முயற்சிக்கு சிறு குறும்புகளால் தொல்லைகள் ஏற்பட்டிருக்கலாம். விஷ்ணுகுண்டின் மன்னன் நான்காம் மாதவர்மனிடம் பொலம்பூரைத் தானமாகப் பெற்றவருடைய மகனே கீழைச் சாளுக்கிய மன்னன் முதலாம் ஜெயசிம்மனிடம் பொலம்பூரைத் திரும்பவும் தானமாகப் பெற்றான். மாதவவர்மன் தானம் அளித்த ஆண்டு கி.பி. 612. ஜெயசிம்மன் தானம் அளித்த ஆண்டு கி.பி. 633. இடைப்பட்ட ஆண்டுகளில் கொல்குறும்புகளாலோ (tribes) சிற்றரசர் தொல்லையாலோ பிரமதேய உரிமையை இழந்திருக்கக் கூடும். அந்த ஆண்டுகளில் விஷ்ணுகுண்டிகள் நிலைகுலைந்து விட்டனர். அதுவே குறும்புகளின் தொல்லைகளுக்குக் காரணமாய் இருந்திருக்கும். இது வேள்விக்குடிச் செப்பேட்டுச் சாசனத்துடன் ஒப்பிடத்தக்கதாய் உள்ளது. அதைக் கருதி பிராமணர்களுக்கு அளிக்கப்பட்ட தானங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை அத்திகோசம், வீரகோசம் ஆகிய படைக்குழுவினிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது என்று கொள்வதில் தவறில்லை.

பெருவழியில் அத்திகோசத்தார்

அத்திகோசத்தார் பற்றிய கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் பெருவழி ஓரத்திலேயே கிடைக்கின்றன. இது குறிப்பிடத்தக்கது. பூலாங்குறிச்சிக் கல்வெட்டு பண்டை நாளைய பெருவழியில் இருந்திருக்க வேண்டும். அக்கல்வெட்டிலும் கூட 'ஒல்லைவற்றை வழி' என்ற பெருவழி குறிக்கப்படுகின்றது. மேலும் பூலாங்குறிச்சிக் கல்வெட்டருகில் திசையாயிரத்தைந்நூற்றுவர் செய்து வைத்த ஐயனார் பற்றிய கல்வெட்டு ஒன்றும் கிடைத்துள்ளது. ஐயனாரும், கல்வெட்டு அருகிலேயே உள்ளது. கல்வெட்டு முதலாம் பராந்தக சோழன் காலத்தைச் சேர்ந்தது. சோழர் காலத்தில் பூலாங்குறிச்சிக் கல்வெட்டு இருக்குமிடத்தில் ஒரு வணிக நகரம் இருந்திருக்கவேண்டும். அந்த நகரத்தில் தங்கிய திசைஆயிரத்தைந்நூற்றுவரே ஐயனாரைச் செய்து வைத்தனர் என்று கருத இடமுண்டு. அல்லது பெருவழியில் செல்லும் வணிகர்கள் வழிபடுவதற்கெனச் செய்து வைத்த ஐயனாராகவுமிருக்கலாம். விஷ்ணுகுண்டின் நான்காம் மாதவர்மன் தானமாக அளித்த பொலம்பூர் கூட படைஇயங்கும் பெருவழியில் இருந்தது. ஏனெனில் மாதவர்மன் படையெடுப்பின்போதுதான் பொலம்பூர் என்ற ஊரைத் தானமாக அளிக்கின்றான். சமீபத்தில் பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் வட்டம் நல்லூரில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட அத்திகோசம் பற்றிய கல்வெட்டு மைசூர்-கோவை பெருவழியில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.[22]

மேலே கூறியவற்றால் அத்திகோசத்தார்க்கும் பெருவழிக்கும் இடையில் உள்ள தொடர்பு தெளிவாகும். பெருவழிகளில் நிறுத்தி வைக்கப்பட்ட யானை, காலாட்படைகளின் தலைவர்களின் குழுக்களே (Guilds) அத்திகோசம், வீரகோசம். பெருவழிகளில் படைவீரர்கள் தங்கியிருந்தது, வாணிகர்களிடம் சுங்கம் வாங்கவும் வணிகர்களைக் கள்வர்களிடம் இருந்து காக்கவும் ஆகும். அதனால் அத்திகோசத்திற்கும் வணிகர்க்கும் இடையிலான தொடர்பு புலப்படும். அதனால்தான் பெருவழி ஓரத்தில் உள்ள ஊர்களில் செய்யப்படுகின்ற தானத்தினைச் செயல்படுத்தவும் பாதுகாக்கவும் வேண்டப்படுகிறார்கள்.

தென்னிந்திய வணிகர்கள் தங்களுக்கெனப் படை வைத்திருக்கும் உரிமை பெற்றிருந்தனர். அகநானூறு 89-ஆம் பாடலில் வணிகர்களுடன் சென்ற வீரர்களைப் பற்றிக் கூறப்படுகின்றது. தொல்காப்பியர், வணிகர்கள் படைவைத்துக்கொள்ள உரிமை பெற்றவர்கள் என்று கூறுவார். ஆறலைக்கள்வர்களின் தாக்குதலிலிருந்து பாதுகாத்துக்கொள்ள வணிகர்கள் படைவைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். இதைத் தமிழகத்திற்கே உரிய தனிப் போக்காகக் கொள்ளலாம். மத்தியகாலத் தமிழகத்திலும், வணிகர்கள் வைத்திருந்த படை பற்றி கல்வெட்டுக்கள் கூறும். முனைவீரர், பெருநீரவியார், கொடிவீரர், செட்டிவீரர், எறிவீரர் போன்றவர்கள் வணிகர்கள் வைத்திருந்த படைப்பிரிவினர் ஆகும்

மத்தியகாலக் கல்வெட்டுக்கள் நானாதேசி, தண்டநாயகர் பற்றி கூறுகிறது.[23] ஐந்நூற்றுவர் படை என்ற ஒரு படை பற்றிச் சாசனங்கள் செப்பும். 12-13ஆம் நூற்றாண்டுகளில் அடிக்கீழ்தளம் பற்றி மிகுதியும் பயின்று வரக்காணலாம்[24] அடிக்கீழ்தளம் என்பது வணிக வீரர்கள் தங்கியிருந்த ஊர் அல்லது படைவீடு. வணிகவீரர்கள் மத்திய கால அரசியலிலும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தனர். இவர்கள் அரசனை மாற்றவும், புதிய அரசனை அரியணையில் அமர்த்தவும் வலிமை பெற்றிருந்தனர். கி.பி. 17-ஆம் நூற்றாண்டில்கூட வணிகர்கள் படை வைத்திருந்தார்கள் என்பது வெளிநாட்டார் குறிப்புக்களால் தெரியவருகிறது. சென்னைக்கருகிலுள்ள புலிகாடு பகுதியில் வணிகத்தலத்திலிருந்த ஒரு வியாபாரியிடம் வரிகட்டாமைக்காக டச்சுக்காரர்கள் வியாபாரப் பொருட்களை எடுத்துச் சென்றனர். அவ்வியாபாரி வீரர்களைத் திரட்டிச் சென்று டச்சுக்காரர்களைத் தாக்கி அப்பொருட்களை மீட்டான். இதனால் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு வரையிலும் வணிகர்கள் படைவைத்திருந்தார்கள் என்பது உறுதிப்படுகிறது.[25] இதன் பின்னணியில் வைத்துப் பார்க்கும்பொழுது அத்திகோசத்தார் என்பார் வணிகர்களோடு தொடர்புடைய யானைப்படைப் பிரிவினர் குழு என்று கருத வாய்ப்புண்டு. வணிகர்களோடு தொடர்பு உடையவர்கள் ஆகையால் அத்திகோசத்தார் பற்றிய குறிப்புக்களும் பெருவழி அருகிலேயே கிடைக்கின்றன.

பூலாங்குறிச்சிக் கல்வெட்டும் பெருங்கதையும்

பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் அரசனுக்குக் காவலாக அத்தி கோசத்தார், உரைமனையார், நோற்பாற்றிணைகள் ஆகி யோர் குறிப்பிடப்படுகின்றனர். இதேபோன்று பெருங் கதையில் அரசனுடன் இருப்பவர்கள் கடிகைக்கணன் ஐம்பெருங்குழு, அத்திகோசம், மனைப்பெருஞ்சனம், தேவி மார்கள் தானை போன்றவைகள். குறிக்கப்படுகின்றன. கல்வெட்டில் வரும் அத்திகோசத்தாரும் பெருங்கதையில் வரும் அத்திகோசமும் ஒன்றே. தமிழில் யகரம் சகரமாகத் திரியும் என்பது முன்பே கூறப்பட்டது. அத்திகோசத்தார் என்று சேனாவரையர் கூறுவது கருதத்தக்கது. கோயத்தார் என்பதே கோசத்தார் என்று திரிந்தது. அரசர்களுடன் முக்கிய விழாக்களில் யானைப்படைத்தலைவர் குழு கலந்துகொண்டது என்பது பெருங்கதையினால் அறிய முடிகிறது. அந்த வகை யில், பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகூட அரசன் முக்கிய விழா அல் லது நிகழ்ச்சியில் வெளியிட்ட ஆணையாக இருக்கலாம். 'உரைமனையார் என்பது பெருங்கதையில் வரும் மனைப் பெருஞ்சனம் என்பதுடன் ஒப்பிடத்தக்கது. உ. வே. சா. அவர்கள் மனைப்பெருஞ்சனம் என்பது பற்றி அடிக் குறிப்பில் எதுவும் குறிப்பிடவில்லை. 'மன்பெருஞ்சிறப்பின்' என்ற அடைமொழி அவர்கள் உயர்ந்த நிலையைக் குறிக்கிறது. நோற்பாற்றிணைகள் என்பது பெரும்பாலும் வீரர்களையே குறிக்கும் என்றும் நோற்றல், நோன்மை ஆகியவை வீரர்களுக்கு உரியதாகவும் புறப்பொருள் வெண்பாமாலை குறிப் பிடும். திணை என்பது பழங்குடி, சாதி, குலம், குடும்பம் ஆகிய வற்றைக் குறிக்கின்றது. நோற்பாற்றிணைகள் அரசனுடைய குலத்திற்கு வழி வழியாகத் தொண்டராகப் பணிபுரியும் வீர குடும்பத்தினர் என்று கொள்ளலாம்.

பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் குறிக்கப்படும் மூன்று பிரிவி னரும் படைகளுக்குத் தொடர்புடையராகவே தெரிகின்றனர். உரைமனையார் ஒழிந்து மற்ற இரு திறத்தார்களுடைய படைத் தொடர்பு தெளிவாகவே புலப்படுகின்றது. மேலும் பூலாங் குறிச்சிக் கல்வெட்டில் கடலகப்பெரும்படைத் தலைவர் குறிக்

கப்படுவதும் இங்கு எடுத்துக்காட்டத்தக்தது. பூலாங்குறிச்சிக் கல்வெட்டின் காலந்தொட்டு அத்திகோசத்தார் அரசியலில் முக்கிய பங்காற்றியுள்ளனர். அரசகாரியங்கள் அனைத்திலும் அவர்கள் பங்கு இன்றியமையாததாய் இருந்தது.

அத்திகோசம் என்ற குழு அமைப்பு முதலில் தோன்றிய இடம் பற்றித் தெரியவில்லை. இந்தியா முழுவதிலும் கிடைக்கின்ற கல்வெட்டுக்கள் சிலவற்றில் மட்டும் அவர்களைப் பற்றிக் குறிக்கப்படுகிறது. அதுவும் தக்காணத்திலும் தென்னிந் தியாவிலும்தான். வடஇந்தியப் பகுதிக் கல்வெட்டுக்களில் அவர்களைப் பற்றிய செய்திகள் அருகியே காணப்படுகின்றன. அதனால் யானைப்படைத் தலைவர்கள் குழு தென்னிந்தியா விலும், தக்காணத்திலும் மட்டுமே இருந்திருத்தல் வேண்டும். அதுவும் தமிழகத்திலிருந்துதான் அவர்கள் தக்காணம் சென்றி ருக்கவேண்டுமென்று கருதவேண்டியுள்ளது. விஷ்ணுகுண்டின் செப்பேடுகளில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்துதான் அத்தி கோசம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. ஆனால் தமிழகத்தில் அத்திகோசம் கி. பி. 5-ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்து குறிக்கப்படுகின்றது. அதுவும், தமிழகத்தின் தென்பகுதியில் கிடைப்பது விதந்து கூறத்தக்கது. அரசியல் நிர்வாகத்தில் அவர்களுக்கு முக்கியத்துவம் அளித்ததும், தென்னிந்தியாவில்தான். அத்திகோசத்தார் என்ற குழு அமைப்பும்கூட தென்னிந்தியாவில்தான் முதலில் தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில் இதுகாறும் கிடைக்கும் கல்வெட்டுச் சான்றுகளில் காலத்தால் முற்பட்டது பூலாங்குறிச்சிக் கல்வெட்டு தான்.

அத்திகோசம், வீரகோசம் பற்றி ஆய்வு செய்து முதன் முதலில் தெளிவாக முடிவு கூறிய திரு. கே. எஸ். வைத்தியநாதன் அவர்கள் கொண்டுள்ள முடிவுகள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை. விஷ்ணுகுண்டினர்கள் வரலாறு என்ற கட்டுரையில் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறுவதாவது:

> "... அவர்கள் (அஸ்திகோசம், வீரகோசம்,) யானை, காலாட்படைகளின் தலைவர்கள் என்று கொள்ளலாம். அவர்களிடம் அரசனால், தானங்களைச் செயற்படுத்

தும் அல்லது பாதுகாக்கும் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டிருந்தன. சாசனங்களில் பயின்று வரும் அஸ்தியத் யக்ஷன் என்ற சொல் யானைப்படையைக் கண்காணிப்ப வர்களைக் குறித்து வந்தது என்பது மனங்கொள்ளத் தக்கது. அஸ்திகோசம், அஸ்தியத்யக்ஷம் என்ற சொற்கள் ஒரு பொருள் நுதலிய சொற்கள் என்று கொள்வதில் தவறில்லை . . . மேலே காட்டப்பட்ட கல்வெட்டு ஆதாரங்களைக் கொண்டு அவர்கள் படை அதிகாரிகள் என்றோ அல்லது யானைப்படை அதிகாரிகள் என்றோ கொள்ளலாம். நாம் காட்டும் சாசனங்களில் அவர்கள் மிகவும் பொறுப்பு வாய்ந்த பணியைச் செய்ததாகவே கூறப்படுகிறது. அரசர்கள் அளித்த தானத்தைப் பாதுகாக்கும் பொறுப்பே அது . . .''[26]

இதுகாறும் கூறியவற்றால் அத்திகோசத்தார் என்பார் யானைப் படைத் தலைவர் என்பது விளங்கும். அவர்கள் பெரும்பாலும் வியாபாரிகள் வைத்திருந்த படைப்பிரிவினர். அதனால் அவர்கள் வாழ்ந்த பெருவழி ஊர்களில் தானம் அளிக்கும் போது அவர்களைப் பாதுகாவலர்களாக இருக்க வேண்டுகிறார்கள். திருவாளர்கள் கே. எஸ். வைத்தியநாதன், கிருஷ்ண சாஸ்திரி, பிலிட் போன்றவர்கள் அத்திகோசத்தாரைப் பற்றிக் கொண்ட முடிவுகள் சரியானவையே என்பது பின்னால் கிடைக்கின்ற கல்வெட்டுச்சான்றுகளால் விளங்குகிறது. மேலும் அத்திகோசத்தார் தென்னிந்தியாவிலும் தக்காணத்திலும் செல்வாக்குப் பெற்றிருந்த காலம் ஒன்று இருந்தது. அது வணிகர்கள் சிறப்படைந்த காவிய காலமாகும்.

அடிக்குறிப்புகள்

1 கல்வெட்டியல் பக். 43.

2 அகநானூறு: 39, 119, 167.

3 Kenneth R. Hall - Trade and Craft in age of Cholas pp. 163-198.

4 பெருங்கதை; உஞ்சைக் காண்டம், விருத்தி உரை, பக். 4-10.

5 டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் பெருங்கதை அடிக் குறிப்பில் ''அத்திகோசத்தாரை அத்திகோசமென்றது ஆகுபெயர்'' என்று கூறியுள்ளார் (பெருங்கதை பக். 743).

6 Dr. R. Nagaswamy, "An outstanding Epigraphical Discovery in Tamil Nadu" Paper presented at the Vth World Tamil Conference held at Madurai from 4th to 10th January 1981.

7 திரு. நடன. காசிநாதன், 'களப்பிரர்' பக். 20. அண்மையில் திரு. என். சேதுராமன் அவர்கள் எழுதிய கட்டுரை ஒன்றில் பூலாங்குறிச்சிக் கல்வெட்டின் காலத்தை ஆய்வு செய்துள்ளார். அவர் வான சாத்திரத்தைத் தன்னுடைய ஆய்விற்குக் கருவியாகப் பயன்படுத்தி யுள்ளார். அவர் பூலாங்குறிச்சிக் கல்வெட்டின் காலம் பற்றிக் கூறுகின்ற முடிவு, காசிநாதன் அவர்கள் முடிவுடன் ஒப்பிடத் தக்கதாய் உள்ளது.

8 அடைப்பில் உள்ள அகரம் என்னால் யூகிக்கப்பட்டது. திருப்திகரமாக வாசித்த கல்வெட்டு வாசகத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

9 தொல்பொருள் ஆய்வுத்துறைக் கல்வெட்டுப் பிரிவில் உள்ள கையெழுத்துப் பிரதி.

10 யகரம் சகரமாய்த் திரியும் போக்கு 6-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக் களில் பயின்றுவரக் காணலாம். செங்கம் நடுகற்களில் அரைசர் என்று வருவது பெரும்பாலும் அரையர் என்ற சொல்லின் திரிபாகக் கொள்ளலாம்.

11 பிங்கல நிகண்டு; சூத்திரம் 3442.

12 பெருங்கதை பக். 743 டாக்டர். உ. வே. சா. அவர்கள், அத்திகோசம் என்பதற்கு யானையெடுத்தற்குரிய செல்வமுடையவரென்றும் கூறுவார். அது எந்த வகையிலும் பொருத்தமுடையதன்று.

13 Lexicon, vol. I p. 66.

14 Lokayatha, p. 199-216.

15 பெருங்கதை, பக். 743.

16 Dr. S. Sankaranarayana, The Vishnu Kundins and their times p. 87. பொலும்பூர்ச் செப்பேட்டின் காலம் பற்றியும் அதனை வெளியிட்ட மன்னன் யார் என்பது பற்றியும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. மேலே கூறப்பட்ட நூலில் திரு. சங்கரநாராயணன் பொலும்பூர் செப்பேட்டின் காலம் நான்காம் மாதவர்மன் ஆண்ட கி.பி. 612 என்று கூறியுள்ளார். அவர் வானசாத்திர கோட்பாட்டடிப் படையில் குறிப்பிட்ட காலமாகும். ஆனால் கே. எஸ். வைத்திய நாதன் அவர்கள் பொலும்பூர்ச் செப்பேடு முதலாம் மாதவர்மனின் காலம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு என்று கூறுவார். Quarterly Journal of Mythic Society, vol. xxx p. 51. திரு. சங்கரநாராயணன் அவர்கள் கருத்தே ஏற்றுக் கொள்ளக்கூடியது.

17 Quarterly Journal of Mythic Society, vol. xxx. p. 51.

18 Ibid.

19 A.R.E. 1914. p. 85.

ஏற்பட்ட சமூக மாறுதல்கள்'. பக். 25-26.

20 இராமம்சரன் சர்மா. 'இடைக்காலத்தில் முற்பகுதியில் இந்தியாவில்

21 Burton Stien, 'Peasant state and Society in Medival South India'. Formation of the medieval Agrarian Order. pp. 63-90 என்ற கட்டுரையிலும், Coromondal Brahmadheya Village என்ற கட்டுரையிலும், (pp. 141-172) பிரமதேயங்களின் அருகில் இருந்த பழங்குடிகள் சமூகக் கட்டுக்கோப்பிற்குள் கொண்டு வரப்பட்டது பற்றி ஆய்ந்துள்ளார். அவர் கூறுவதை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியவில்லையானாலும் இப்பகுதிகளுக்குப் பொருந்தும். மேலும் இதே நூலில் Right and Left hand (Valangai & Idangai) கட்டுரையும் இந்த விஷயத்தில் குறிப்பிடத் தக்கது.

22 நல்லூரில் ஆசிரியப் பயிற்சி பெற்று வேலையின்றி இருக்கும் ஒருவர் மண்ணில் புதைந்து கிடந்த கல்லைத் தோண்டி எடுத்து இரண்டு புறமும் சுத்தம் செய்து புகைப்படம் எடுத்துத் தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டுத்துறைத் துணைப் பேராசிரியர் திரு. செ. இராசு அவர்கட்கு அனுப்பியிருந்தார். இராசு அவர்களிடமிருந்து அப்புகைப்படம் எனக்குக் கிடைத்தது. கல்வெட்டு மிகவும் சிதைந்து விட்டது. சில வார்த்தைகள் வாசிக்க முடிகின்றன. வட்டெழுத்துக் கல்வெட்டு இறுதி வரியில் அத்திகோசம் என்ற சொல் உள்ளது. இக்கல்வெட்டு இருந்த ஊர் அந்நாளில் பள்ளி என்று அழைக்கப்பட்டது. கல்வின் மறுபுறத்தில் சமபாதியில் ஒரு கோடு உள்ளது. மேல் பாதியில் கத்தி அரிவாள், குறுவாள், உணர்ந்து கொள்ள இயலாத வடிவம் ஆகியவை உள்ளன. கீழ்ப்பகுதியில் யானை, குதிரை (இரண்டிற்குமிடையில்) ஒரு குடை உள்ளது.

23 Trade and State Craft in the age of Cholas, p. 154.

24 தி. சுப்பிரமணியன், காப்பாளர், கோவை அருங்காட்சியகம். அவருடைய அடிக்கீழ்த்தளம் என்ற கட்டுரையைப் பார்க்க.

25 R. S. Sarma, Indian Society Historical Provings, p. 245.

26 Quarterly Journal of Mythic Society, vol. 30, pp. 51-52.

☆

கோயில் காத்தான்

சீ. வசந்தி, எம்.ஏ.,
தொல்பொருள் அலுவலர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28

செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தில் உள்ள 'ஏரி காத்த இராமனைப் பற்றி அறிவோம்' ஆனால் கோயிலை வெள்ளத்திலிருந்து காத்த நலந்திகழ் நாராயணனைப்பற்றி நாம் அறிந்ததில்லை. அவரைப்பற்றி இங்கு காண்போம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீரங்கம் கோயிலில் வெள்ளம் புகுந்தபொழுது அதனைக் காப்பாற்றிய இந்நலந்திகழ் நாராயணன் விசயநகரப் பேரரசர், சதாசிவராயர் காலத்தவர்.

திருவரங்கம், திருவேங்கட ஐயங்கார் என்பவருக்கு, விசயநகர அரசர், சிந்தாமணி என்ற கிராமத்தைத் தானமாக அளித்தார். திருவேங்கட ஐயங்கார் அக்கிராமத்தைத் திருவரங்கனுக்கே இறையிலியாகக் கொடுத்தார். தாம் ஏன் அவ்வாறு தானமாக அளித்தார் என்பதற்குக் காரணம் கூறுவதைப்போல் அமைந்துள்ளது திருச்சி மாவட்டத்திலுள்ள திருவரங்கநாதர் ஆலயத்தில் பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டு.

உலகிற்கெல்லாம் படியளக்கும் திருவரங்கனுக்கே கேடு நேருவது போல் வெள்ளம் காவிரியில் கரை புரண்டு ஓடிற்று. இதைக் கண்டு அஞ்சிய திருவரங்கனின் அடியார் நலந்திகழ் நாராயண ஜீயர், திருவரங்கத்திற்கு மேற்கில் அணைக்காத்தான் கரைக்கு அருகில் யந்திரம் ஒன்றை அமைத்தார். மேலும் சாஸ்தாவையும் எழுந்தருளுவித்தார்.[1] காவிரியாற்றிலிருந்து வெள்ளத்தடுப்பு நடவடிக்கையாகக் கால்வாய் வெட்டி, 'ஆறு கெட நாணலை நடு' என்பதற்கிணங்க, நாணல் புற்களை நட்டு வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்,

இத்தகைய தடுப்பு நடவடிக்கையால் தெற்குக் கரையில் உள்ள சிந்தாமணி என்ற கிராமத்திற்குக் கேடு விளைந்தது. இதனால் ஊரார் ஐயங்காரிடம் சென்று முறையிட, அவர், அக்கிராம மக்களுக்காக, கொளக் குட்டை என்ற மற்றொரு கிராமத்தை அளிக்க முன்வந்தார். ஆயினும், அம்மக்கள், அதை விரும்பாது, சோழ வேந்தனிடம் முறையிட, அவ்வரசன் ஜீயரை அழைத்துச் சந்நியாசியாகிய நீங்கள், இப்படி பிராமண வதை செய்யலாமா? எனக்கேட்க, அதற்கு ஜீயர், ஒரு நல்ல காரியம் செய்ய சில தவிர்க்க முடியாத பாவம் செய்யலாம் என்ற பகவத் கீதையின் சுலோகத்தைச் சான்றுகாட்ட[2] மனம் மகிழ்ந்த அரசன் நாராயண ஜீயருக்கே இக்கிராமத்தைத் தாரை வார்த்துக் கொடுத்தான். இது கல்வெட்டுச் செய்தி.

இதே செய்தி சிறிது மாறுபட்டுக் கோயில் ஒழுகு என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.[3] நாராயண ஜீயர் என்று கல்வெட்டில் கூறப்பட்ட பெயர் இதில் கூர நாராயண ஜீயர் என வருகிறது. இவர், வெள்ளத் தடுப்பு நடவடிக்கையாகக் காவிரியாற்றில் கால் வாய் வெட்டினார். இக்கால்வாய் சிந்தாமணி கிராமத்தினருக்கு கேடு செய்தது. இதனால் அவ்வூர் அந்தணர்கள், தங்கள் கிராமத்தின் வழியாகக் கால்வாய் வெட்டத் தடை செய்தனர். எனினும் கடவுளுக்கான பணி என்பதால், அவர்கள் சாபத்துக் குள்ளானார்கள் என்று கோயில்ஒழுகு தெரிவிக்கின்றது. மேலும், வெள்ளத்தடுப்பாக, சூத்திரதேவனுக்கும், கிராம தேவதைக்கும்[4] திருவரங்கச் செல்விக்கும் திருமேனிகள் எடுப்பித் தார் என்றும் மற்றும் ஒரு யந்திரம் அமைக்கப்பட்ட செய்தியும் கூறப்படுகிறது.

கோயில் ஒழுகில், வெள்ளத்தடுப்பாக நாணல் நடுதல் பற்றிக் குறிப்பில்லை. சோழ அரசனிடம் சென்று முறை யிட்டதோ, அதற்கு ஜீயர் கூறிய பகவத்கீதை வரிகளோ, அதைக் கேட்டு மன்னன் மனம் மகிழ்ந்து, சிந்தாமணி என்ற கிராமத்தை அளித்ததோ எங்கும் கூறப்படவில்லை. ஆயினும் ஸ்ரீரங்க நாராயண ஜீயர் என்ற பட்டப் பெயர் சோழ அரசனால்தான், 'கூர நாராயண ஜீயருக்கு' அளிக்கப்பட்டதாகக் கூறுகின்றது. இவற்றைக்கொண்டு நோக்கும் பொழுது, கல்வெட்டில் கூறப் படும் சோழனும், கோயில் ஒழுகில் கூறப்படும் சோழனும்

ஒருவராக இருக்கலாம் என யூகிக்கலாம். கல்வெட்டில் கூறப் படும் நலந்திகழ் நாராயண ஜீயரும், ஒழுகு கூறும், கூர நாராயண ஜீயரும் ஒருவராகக் கொள்ளலாம். ஆனால், இவ்விரண்டிலுமே சோழ அரசனின் பெயர் தெரிவிக்கப்படவில்லை.

கோயில் ஒழுகைக் கொண்டு நோக்குமிடத்து, நஞ்ஜீயர் என்பவர், கூர நாராயணஜீயரின் சமகாலத்தவராகக் குறிக்கப் படுகிறார். இந்நஞ்ஜீயர், என்பவர் இராமானுஜரின் மாணாக்க ரான, நம்பிள்ளை காலத்தைச் சேர்ந்தவராகக் கொள்ளப் படுவதால்,[5] கூர நாராயண ஜீயரின் காலத்தை கி.பி. 12-13ஆம் நூற்றாண்டாகக் கொள்ளலாம்.

அடிக்குறிப்புகள்

1. யந்திரம்-விரும்பிய பயனை விளைக்கும் மந்திரச் சக்கரம்.
2. ''நிமித்தம் கிருதம் பாபம் தர்ம்மாய கல்பதோ'' -கல்வெட்டு ஓர் அறிமுகம் பக். 84.
3. ஹரிராவ், ''கோயில் ஒழுகு'' பக். 114-122.
4. இன்றும் இக்கிராம தேவதை வழிபாடு நடைபெறுகிறது.
5. ''வைணவ ஆச்சாரியர் வரலாற்றுக்கு ஓரளவு ஆதாரபூர்வமான மூலம், பின்பழகிய பெருமாள் ஜீயர் எழுதின குரு பரம்பரைப் பிரபாவமாகும். இவர் நம்பிள்ளையின் சீடர். இவர் மடியில் திருவடி வைத்து நஞ்ஜீயர் உயிர் துறந்தார். ஆகவே உடன் கால நிகழ்ச்சிகளை அவர் நேரில் கண்டு அனுபவித்துக் கூறுகிறார். நஞ்சீயர் காலம் 1182-1287, நம் பிள்ளை 1207-1312. பட்டர் வைபவத்தில் திரிபுவனவீரதேவராயன் என்ற அரசன் இவரை அழைத்தான், என்று கூறப்பட்டுள்ளது. இப் பட்டம் மூன்றாம் குலோத்துங்க சோழனுக்குரியது. அவன் ஆட்சிக் காலம் 1178-1218. இக்காலத்தில் பட்டர் வாழ்ந்தார் என்பது பொருத்துவதே, நஞ்ஜீயர் காலம் இங்குக் குறிப்பிட்ட படி கி.பி. 1182 1287, ஆகும்.'' —திரு. மு. அருணாசலம் 'தமிழ் இலக்கிய வரலாறு' பதின்மூன்றாம் நூற்றாண்டு பக். 316-318

★

சோழர் காலத்தில் சேத்திரபாலர் வழிபாடு

கே. ஸ்ரீதரன், எம்.ஏ.,
பதிவு அலுவலர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28

சேத்திரபாலர், சிவபெருமான் எடுத்த திருக்கோலங்களில் ஒன்றாகும். இவரை பைரவர் என்றும் அழைக்கலாம். பிங்கல நிகண்டில் இவர் கஞ்சுகன், கரிமுக்தன், நிர்வாணி, சித்தன், கபாலி, வாதுகன், பைரவர் என்ற பெயர்களில் அழைக்கப் படுகிறார். இவர் ஊரையும் மக்களையும் கெட்ட தேவதை களிடமிருந்து காப்பாற்றுகிறார் என்று ஆகமங்கள் கூறுகின்றன. பொதுவாக இவருடைய கோயில் ஊரின் வடகிழக்கு மூலையில் இருக்கும்.

சோழர் காலத்தில் சேத்திரபாலர் முதலில் பரிவார தேவதை களில் ஒன்றாகக் கருதப்பட்டது. இராசராசசோழன் காலத்தில்தான் இவருக்குத் தனிக்கோயில் எடுக்கப்பட்டது. இம்மன்னன் காலத்தில் பொதுவாகச் சேத்திரபாலர் வழிபாடு சிறத்திருந்ததைக் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது. பிற் காலச் சோழர் ஆட்சியில் இவ்வழிபாடு சற்று குறைந்து விட்ட தெனலாம். ஏனெனில் கல்வெட்டுச் சான்றுகள் அவ்வளவாக நமக்குக் கிடைக்கவில்லை. சேத்திரபாலர் வழிபாடு ஏன் சிறந்திருந்தது என்பதைப் பற்றியும், வழிபாடு எவ்வாறு செய்யப்பட்டன என்பதைப் பற்றியும் கல்வெட்டுக்கள் கூறும் செய்தியினைக் காண்போம்.

உருவ அமைப்பு

ஆடையில்லாமல் நின்ற கோலம். கழுத்திலிருந்து கணுக்கால் வரை முண்டமாலை. இரண்டு, நான்கு, ஆறு அல்லது எட்டுக் கைகளை உடையவராய் இருப்பார். கைகளில் சூலம் கபாலம், மணி, அம்பு, வில் முதலிய ஆயுதங்களை ஏந்தி யிருப்பார்.

பரிவார தேவதைகள்

சூரியன், சப்த மாதர்கள், கணபதி, முருகன், ஜேஷ்டா தேவி, சந்திரன், சண்டேசுவரர், பைரவர், ஆகிய பரிவார தேவதைகள் எட்டுள் பைரவரும் அடங்கும்.

முற்காலச் சோழர் ஆலயங்களில் எட்டு பரிவார தேவதைகளின் சிற்றாலயங்கள் இருந்தன என்பதை எறும்பூர்க் கல்வெட்டால் அறிகிறோம்:

> "ஸ்வஸ்திஸ்ரீ மதுரைகொண்ட கோப்பரகெசரி வர்மருக்கு யாண்டு இருபத்தெட்டாவது
> வடகரை நல்வயலூர் கூற்றத்துத் தேவதானம் உறுமூர்த் திருக்கோயில் பெருமானடிகளுக்கு ஸ்ரீவிமானக்கற்றளி எடுப்பித்து அஷ்ட பரிவார கோயில்
> செய்வித்து உடையார் சோழபெருமானடிகள் ஸ்ரீ பராந்தக தேவர்க்கு . . . "

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த திருக்கட்டளை சுந்தரேசுவரர் கோயிலில் ஏழு பரிவார தேவதைகளின் சிற்றாலயங்கள் உள்ளன. பைரவர் ஆலயம் அழிந்து விட்டது. பரிவார தேவதைகளுக்கு வழிபாட்டிற்கு நிவந்தம் அளிக்கப்பட்டதாகப் பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இராசராச சோழனின் 10-ஆம் ஆட்சியாண்டில் வானவன் மூவேந்த வேளான் திருபுறம்பியத்தில் அட்ட பரிவார தேவதைகளை நிறுவி, விளக்கிற்கு தானமளித்துள்ளான். இதே மன்னனின் 23-ஆம் ஆட்சி ஆண்டில் செய்யாறு வட்டத்தைச் சேர்ந்த திருப்பனமூர்க் கோயிலில் அட்ட பரிவார தேவதைகளுக்கு விளக்கைத் தானமளித்ததாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.[1] இராசராசனின் 23-ஆம் ஆட்சி ஆண்டில், திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த ஆத்தூரில் துர்க்கை சப்தமாதர், சேத்திரபாலர், கணபதி ஆகிய சிலைகளைத் திருப்பூவண உடையார் சோமநாததேவர் அமைத்தார் என்ற செய்தியினை மற்றொரு கல்வெட்டு கூறும்.[2]

திருவலஞ்சுழி சேத்ரபாலர் கோயில்

இராசராசனுடைய 25-ஆம் ஆட்சி ஆண்டில் இவனுடைய தேவி தந்திசக்திவிடங்கியால் திருவலஞ்சுழியில் சேத்ர பாலருக்குத் தனிக்கோயில் எடுக்கப்பட்டது என்பதை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது:

> "...இராசராசதேவர் மகாதேவியார் தந்தி சக்தி விடங்கியாரான ஸ்ரீஒலோக மாதேவியார் உய்யக் கொண்டார் வளநாட்டு பாம்பூர் நாட்டுத் திருகுட மூக்கின்பால் திருவலஞ்சுழியில் நாம் எடுப்பித்த இத் திருக்கற்றளி பிள்ளையார் சேத்திர பால தேவர்க்கு ...."[3] என வருகிறது.

இவருக்கு 8 திருக்கைகள் உண்டு. வில், அம்பு, மணி, உடுக்கை, சூலம், கத்தி ஆகியவற்றை ஏந்தியும், முன் இரு கைகள் உடைந்தும் காணப்படுகின்றன. இதே போன்ற திருஉருவம் தஞ்சைப் பெரிய கோயிலிலும் உள்ளது.[4] திருவலஞ்சுழி சேத்திரபாலருக்கும், கணபதிக்கும் இராசராசன் 540 கலன் நெல் தானமாக அளித்திருக்கிறான்.[5] இக்கோயிலுக்கு உலோக மாதேவியாரும், குந்தவையாரும் நடுவிற்பிள்ளையாகிய மாதேவ அடிகளும் பல அணிகலன்களைக் கொடுத்துள்ளனர்[6]. அவை களில் உர்த்துமகேசமும் உட்படத்திருமுடி ஒன்றினால் பொன் 182 கழஞ்சும் பொன்னால் இடைக்கட்டு, மாங்காய், அரசிலை, கள்ளிப்பூ, தகட்டுக்குழை முதலாகிய பல அணிகலன்களும் அடங்கும். விமாலாதித்ததேவர் தேவியார் குந்தவை நங்கை திருவரைப்பட்டிகை ஒன்றினால் தவளைவாய் இரண்டும், படுகண் எட்டும், கள்ளிப்பூ ஏழும், அரசிலை ஒன்றும், கொக்கு வாய் ஒன்றும், கொடுத்துள்ளார். நடுவில் பிள்ளையார் மாதேவடி கள் மினுக்கம் வளை இரண்டும், பொற்பூ ஒன்றும் சனிக்கிழமை களிலும், புதன்கிழமைகளிலும் இறைவன் எண்ணை ஆடவும், தினந்தோறும் தயிர் அமுது, அடையமுது, அப்பமுது, சர்க்கரை அமுது படைக்கவும் தானமளித்துள்ளார்.

இராசராசன் திருவிசலூர்க் கோயிலில் துலாபாரமும் தந்தி சக்தி விடங்கியார் இரணிய கர்ப்பமும் செய்ததாக ஒரு கல்வெட்டு கூறுகிறது.[7] இத்திருக்கோயிலில் உலோகமா

தேவியார் இரண்ய கர்ப்பம் செய்ததற்குரிய பொன்னின் ஒரு பகுதியைக் கொண்டு திருவலஞ்சுழியில் சேத்ரபால தேவர்க்கு இரண்டு பொன்மலர்கள் செய்து அளிக்கப் பெற்ற செய்தியைக் திருவலஞ்சுழியிலுள்ள இராசராசனின் 29-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு கூறுகிறது.[8]

முதல் இராசேந்திரசோழன் பட்டத்திற்கு வந்ததும் சேத்திரபால தேவர்க்குத் திலபர்வதம் புக்கருளி, சேத்திர பால தேவரை ஸ்ரீபாதபுட்பமட்டித் தொழுது இருபத்திநாலேகால் கழஞ்சினால் பொற்பூக்கள் 12 அளித்தான். இவனுடைய தேவியார் வளவன் மாதேவியார் இட்ட பொற்பூ ஒன்று ஆகும்.[9]

மேற்கண்ட கல்வெட்டுச் செய்தியிலிருந்து, திருவலஞ்சுழி கோயில் சிறியதாக இருந்தாலும், அக்கோயிலுக்கு அளித்திருக்கும் தானங்களை நோக்கும்பொழுது சேத்திரபாலர் வழிபாட்டின் சிறப்பைத் தெளிவாக உணரலாம்.

இராசராசனின் இதரபணிகள்

இதுமட்டுமல்லாமல் இராசராசன் தஞ்சை பெரிய கோயிலுக்கு $72\frac{1}{2}$ கழஞ்சு எடையுள்ள தங்கத்தினால் சேத்திரபாலர் திருமேனியைச் செய்தளித்தான்.[10] மேலும் இவனுடைய அதிகாரி ஆதித்தன் சூரியன் என்ற தென்னவன் மூவேந்த வேளான் சேத்திரபாலதேவருக்குத் திருமேனி ஒன்று செய்தளித்தான்.

இவன் கொத்தமங்கலம் என்ற ஊரில் சேத்திரபாலர் திருமேனி அமைக்கத் தானமளித்ததாக ஒரு கல்வெட்டு கூறுகிறது.[11] இராசராசனுடைய 26-ஆம் ஆட்சி ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கங்கைகொண்டானில் ஸ்ரீகைலாயத்து சேத்ரபாலர் வழிபாட்டிற்காக நிலம் தானமாக அளிக்கப்பட்டது.[12]

இராசராசனுக்கு பின்னர் அவன் மைந்தன் கர்னாடக மாநிலத்தில் கோலார் மாவட்டத்தில் சிதபெட்டா என்ற இடத்தில் பைரவருக்கு கோயில் கட்டினான். இறைவன் சீபதிநாயனார் என அழைக்கப்படுகிறார். குலோத்துங்கன்

காலத்தில் வீரசோழ பிரம்மாராயன் என்பவன். சேத்திரபாலர் பீடத்தைத் திருப்பணி செய்தான்.[13] கோனேரிராஜபுரத்தில் அவன் தேவி அரிந்தவன் மாதேவி சேத்திரபாலர் திருமேனியை நிறுவினாள்.[14]

விக்கிரம சோழன் தன் 10-ஆம் ஆட்சியண்டில் சிதம்பரத்தில் மேற்கு கோபுரத்தைக் கட்டினான். கீழ்தளத்தில் கோட்டங்களில் சிற்பத்திற்கு மேல் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்று சேத்திரபால பிள்ளையார் என்பதாகும்.

தாராசுரத்தில் இரண்டாம் இராசராசனால் கட்டப்பட்ட முன் கோபுரத்தின் கோட்டத்தில் சேத்திரபால பிள்ளையார் என்ற கல்வெட்டுக் காணப்படுகிறது. தற்பொழுது அச்சிற்பம் அங்கு இல்லை.

திரிபுவன சக்கரவர்த்திகள் இராசராசசோழன் 28-ஆம் ஆட்சி ஆண்டில் செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த திருவலி தாயம் கோயிலில் சேத்திரபால பிள்ளையாருக்குக் கோயில் கட்டி நிலமும் தானமாக அளித்தான்.[15]

திரிபுவன சக்கரவர்த்திகள் ராசாதிராசதேவன் 12-ஆம் ஆட்சி ஆண்டில் வந்தவாசி வட்டம், கொடுங்களூர் அகஸ்தீஸ் வரம் உடையார் கோயில் சேத்திரபால பிள்ளையார்க்கு வழி பாட்டிற்காக நிலம் தானமளிக்கப்பட்டுள்ளது.[16]

மூன்றாம் குலோத்துங்கனின் 23-ஆம் ஆட்சி ஆண்டில் புதுக்கோட்டை வட்டம் நீர்பழனி வளர்மதீஸ்வரர் கோயிலில் சேத்திரபாலர் திருமேனி அமைக்கப்பட்டது.[17] மேலும் இதே மன்னன் காலத்தில் திருமனஞ்சேரி (ஆலங்குடி) கோயிலில் தில்லைவனமுடையார் என்ற நடனபெண் அக்கோயிலில் தன்னால் செய்தளிக்கப்பட்ட சேத்திரபாலப் பிள்ளையாரின் வழிபாட்டிற்கும், விளக்குக்கும் தானமளித்தாள்.[18]

கொங்கு சோழரான வீரராசேந்திரனின் 13-ஆம் ஆட்சி ஆண்டில் கீரனூர் கண்டியம்மன் கோயிலில் சேத்திரபால பிள்ளையார்க்கு வழிபாட்டிற்குத் தானமளிக்கப்பட்டதை அக்கோயில் கல்வெட்டு கூறுகிறது.[19]

மேற்கண்ட கல்வெட்டு செய்திகளிலிருந்து சோழர் காலத்தில் சேத்திரபாலர் வழிபாடு சிறப்பான இடத்தை பெற்றிருந்ததை அறியமுடிகிறது.

சேத்திரபால தேவர், ஊரையும், மக்களையும் காக்கும் தெய்வமாகக் கருதியதால் ஊர் மக்களின் நலத்தைப் பெரிதாக எண்ணிய சோழமன்னர்கள் இத்தெய்வ வழிபாட்டிற்கு முக்கியத்துவம் அளித்தார்கள் எனலாம்.

அடிக்குறிப்புகள்

1 A.R.E. No. 154, 1939-40.
2 A.R.E. No. 415, 1929-30.
3 S.I.I. vol. VIII, No. 234.
4 Dr. R. Nagaswamy, 'Art and Culture of Tamilnadu' p. 88
5 S.I.I. vol. VIII, No. 223.
6 மு. வேங்கடராமையா, ஆய்வுப்பேழை.
7 A.R.E. No. 42, 1907.
8 S.I.I. vol. VIII No. 237.
9 S.I.I. vol. VIII No. 236.
10 S.I.I. vol. II. No. 29.
11 A.R.E. No. 471, 1962-63.
12 A.R.E. No 160, 1895.
13 S.R. Balasubrarmaniam, 'Middle chola temples', p. 318.
14 A.R.E. No. 639, 1909.
15 A.R.E. No. 216, 1910.
16 K. A. N. Sastri, 'cholas,' p. 133
17 Ins. of Pudukottai state, 133/1929.
18 Do. No. 152/1926.
19 A.R.E. No. 255/1963-64.

★

உடன்கட்டை ஏறிய தேவதாசி செப்பேடு

அ. அப்துல் மஜீத், எம்.ஏ.,
பதிவு அலுவலர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, திருச்சி-1.

இச்செப்பேடு புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டத்தில் மேலப்பனையூர் என்னும் ஊரிலிருக்கும் இசை வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த பொட்டுத்தாலி கட்டின அழகப்பப்பிள்ளையின் புதல்வி பொன்னழகு என்பவரிடம் உள்ளது. இவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த முன்னோர்கள் கோயிலில் பொட்டு கட்டும் பழக்கமுடையவர்கள். இவர்கள், குளிப்பிறையிலிருந்த நாகமாணிக்கத்தாள் அழகிய நல்லாள் என்ற நாட்டுமாணிக்கத்தின் வழித் தோன்றல்கள். 'நாட்டு மாணிக்கம், என்ற சொல் இன்றளவும் தேவதாசிகள், தேவர டியார் என்ற பொருளில் வழங்கி வருகிறது. நாட்டுமாணிக்கம் என்றழைக்கப்படும் தேவதாசிகளின் வழிவந்தோருடைய குடும் பங்கள் இன்றும் மேலப்பனையூரில் இருந்து வருகின்றன. இவர்களுடைய உறவினர்கள் குளிப்பிறை, பிரான்மலை என்ற ஊர்களில் வசித்து வருகின்றனர். மேலப் பனையூரிலுள்ள சிவன் கோயிலில் குளிப்பிறையைச் சேர்ந்த தேவதாசிகளின் வழித்தோன்றல்கள் இறைவழிபாட்டின்போது மேளம் வாசிக் கும் தொழில் புரிகின்றனர். இவ்வூர் மக்கள் இவர்களை மேளக் காரர் என்றும், இசை வேளாளர் என்றும் அழைக்கின்றனர்.

செப்பேட்டின் காலம்

இச்செப்பேட்டின் காலம் சகாப்தம் 1400 என்று குறிப் பிடப்பெற்றுள்ளது. அதாவது கி. பி. 1478-ஆம் ஆண்டைச் சேர்ந்தது.

செப்பேடு கூறும் செய்தி

வென்று மாலையிட்டான் என்பவன் குளிப்பிறையைச் சேர்ந்த நாகமாணிக்கத்தாள் அழகிய நல்லாள் என்பவருடன்

கூடியிருந்தபொழுது, அவ்வூரிலுள்ள பிடாரி அம்மனுக்கு திருவிழா நடைபெறுகிறது. அப்பொழுது, நாகமாணிக்கத்தம் மாளும் வென்று மாலையிட்டானும் அவளுடைய வீட்டிலிருந்து சுவாமிதரிசனம் செய்ய வருகின்றனர். அப்பொழுது வென்று மாலையிட்டானின் உயிர் பிரிகின்றது. வென்று மாலையிட் டானின் உயிர் பிரிந்ததினால் நாகமாணிக்கத்தம்மாள் வென்று மாலையிட்டானின் சிதையில் உடன்கட்டை ஏறுகிறாள். நாகமாணிக்கத்தம்மாள் உடன்கட்டை ஏறியதினால் நத்தம் குழிகாட்டிலிருக்கும் கார்காத்த வேளாளரும், சேது காவல்ப் புரையர், மறமன்னர் நான்குவகைப் பிரிவினரும் கூடி, வென்று மாலையிட்டான் நிலத்தில் நான்கில் ஒரு பங்கு நிலமும், மனை யும், கோவில், குளம், இடுகாடு, படுதுறையும் கொடையாக அளிக்கின்றனர்.

செப்பேடு குறிப்பிடும் கோனாடு

இச்செப்பேட்டில் குறிக்கப்படும் கோனாடு பற்றிய ஓலைச் சுவடி யொன்றும் கிடைத்துள்ளது. இச்சுவடி புதுக்கோட்டை தலைமை நீதிமன்றத்தில் உள்ளது. இச்சுவடி, கோனாடு திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள உறையூரிலிருந்து மதுரை மாவட்டத்திலுள்ள சோழவந்தான் வரை பரவியிருந்த தென்றும், இதனுடன் பிரான்மலை, பொன்னமராவதி, காரை யூர், ஒளியமங்கலம், அன்னவாசல், வயலோகம், முதலிய இடங் கள் சேர்ந்திருந்தனவென்றும் குறிப்பிடுகிறது.

கோனாடு மூன்று கூற்றங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை, உறையூர்க் கூற்றம், ஒளியூர்க் கூற்றம், உறத்தூர்க் கூற்றமாகும். இம்மூன்று கூற்றங்களும் 64 நாடுகளைக் கொண் டிருந்தது. அந்நாடுகள் 756 ஊர்களைக் கொண்டிருந்தது. இந்நாட்டில் 212 கோயில்களுக்கு நிலங்கள் வரையறுத்து அளிக் கப்பட்டிருந்தன. 21 ஊர்கள் பிராமணர்களுக்கு அளிக்கப் பட்டன.[1]

மேற்கூறிய கோனாடு பற்றிய செப்பேடு, "சியசோள கெம்பிர வளநாடாகிய கோனாடதில் பிறமனை சூள்ந்த பொன்னமறாபதி னாட்டில் வடபத்தில் வாகைமங்கலமாகிய குளிப்பிரை கானியச்சிக்கி நிலத்தறசு கற்த்தராகிய காற்காத்த

வேளாற் பட்டம் 700க்கு 756 குடிகாடு 511க்கு பிறமதாயம் 21க்கு தேவதாயம் 212 னாடு 64க்கு தலையூறாகிய ஒலியுற் கூற்றம் உள்ளிட்ட 6 குடிகாட்டிலிருக்கும்" என்று குறிப் பிடுகிறது.

செப்பேடு குறிக்கும் கார்காத்த வெள்ளாளர்

இவர்கள் தங்களைக் காராள வெள்ளாளர் எனவும் கூறிக் கொள்கின்றனர். மதுரைத் தலபுராணம் காராளவெள்ளாளர் தோற்றத்தைப்பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறது :

> "மிகப் பழங்காலத்தில் பாண்டிய தேச அரச னுக்கும் தேவேந்திர கடவுளுக்கும் ஒரு சண்டை மூண்டது. இதனால் கோபமுற்ற தேவேந்திரன் மேகங்களைப் பாண்டிய தேசத்தில் மழை பொழியக் கூடாதெனக் கட்டளையிட்டான். மழை பொழியாத தினால் பாண்டிய தேசம் பஞ்சமுற்றது. பாண்டிய தேசத்து மக்கள் மன்னனிடம் முறையிட்டனர். கோப முற்ற பாண்டிய மன்னன் தேவேந்திரனிடம் படை யுடன் போருக்குச் சென்று, வெற்றியும் பெற்றான். வெற்றி பெற்ற மன்னன் மேகங்களைச் சிறைப்படுத் தினான். இதனால் புவியில் மழை பொழியாதிருந்தது. மக்கள் பெரும் துன்பமுற்றனர். மக்கள் அனைவரும் கூடித் தங்கள் துன்பங்களைப் போக்க தேவேந்திரனை வணங்கினர். தேவேந்திரன் பாண்டிய மன்னனுக்கு ஒரு தூதுவனையனுப்பி சிறைப்படுத்திய மேகங்களை தன்னுடைய நாட்டில் மழை பொழிவதற்கு சம்மதித் தாலொழிய மேகங்களை விடுவிக்க மாட்டேன் என கூறினான். இந்தச் சூழ்நிலையில் பாண்டிய தேசத்து வெள்ளாளர்கள் மேகங்களுக்குக் காப்பாக (security) நின்றனர். இதனால் கார்காத்த வெள்ளாளர் என்ற பெயரினைப் பெற்றனர்".

இந்திரனுக்கு வெள்ளாளர்கள் செய்த சேவைகளுக்காக இந்திரனிடமிருந்து வெள்ளை யானையும், வெண்குடையும், மேழிக்கொடியும், செவ்வல்லி மாலையும், 'பூமிபாலர்' என்ற பட்டத்தையும் பெற்றனர்.

கார்காத்த என்ற சொல் மழைக்காகக் காத்திருப்பவர் என்று பொருள்படும். வெள்ளாளர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது திரு. தர்ஷ்ட்டன், காரைக்காடு என்ற எல்லைப் பகுதியைச் சேர்ந்த வெள்ளாளர்கள் கார்காத்த வெள்ளாளர்கள் என மாறியிருக்கலாம் எனக் கருதுகிறார். இதனை உறுதிபடுத்துவதற்கு எவ்விதமான சான்றுகளும் இல்லை. மழையை நம்பியிருக்காமல் பயிர்களை வளர்க்கும் திறமை பெற்றிருந்தமையால் இவர்கள் 'காராளர்', மேகத்தை ஆள்பவர் எனப் பெயர் பெற்றனர்போலும். இதனை உணராத மக்கள் இவர்களை மேகத்தைக் கட்டுப்படுத்தும் திறன் மிக்கவர் என எண்ணுகின்றனர்.

இக்காராள வெள்ளாளர்கள் திருமயம் வட்டத்தில் தெக்காத்தூர், காரைவூர், விராச்சாலை, பொன்னமராவதி, ஒளியமங்கல பகுதிகளிலும், கொளத்தூர் வட்டத்திலும், ஆலங்குடி வட்டத்திலும் வாழ்கின்றனர்.

சேதுகாவலப்புரையர் மறமன்னர்

கோனாட்டு வெள்ளாளர்க்கும், கானாட்டு வெள்ளாளர்க்கும் நடந்த போரில் கானாட்டு வெள்ளாளர்களுக்குத் துணை புரியும் பொருட்டு ஐந்நூறு மறவர் குடும்பங்களை இராமநாதபுரத்திலிருந்தும் ராசேந்திரமங்கல நாட்டிலிருந்தும் கொண்டு வந்து விராச்சாலை என்னும் ஊரிலும் இன்னும் நான்கு ஊர்களிலும் அமர்த்தியதாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. இம்மறவர்கள் சேதுபதி நாட்டிலிருந்து வரப்பெற்றமையால் சேதுகாவலப் புறையர், மறமன்னர் என அழைக்கப்பட்டனர். மேலும் இச் செப்பேட்டில் குறிப்பிடப்படும் குளிப்பிறை, விராச்சாலையிலிருந்து மேற்கே 6 கி.மீ. தொலைவில் இருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இச்செப்பேட்டில் குறிப்பிட்டுள்ள கொடையைக் கூறும் கல்வெட்டு குளிப்பிறையிலுள்ள சொக்கநாதர் ஆலயத்தின் கருவறை நிலைக்கல்லில் வெட்டப்பட்டுள்ளதென இச் செப்பேடு கூறுகிறது.

உடன்கட்டை ஏறியவளுக்குக் கொடை

பொதுவாகக் கணவன் உயிரிழந்த பின்னர் மனைவி உடன்கட்டை ஏறுவது பண்டைய வழக்கம். போகியாய் விளங்கிய

நாகமாணிக்கத்தாள் உடன்கட்டை ஏற விரும்பியது விசித்
திரமே! தேவரடியாள் உடன்கட்டை ஏறிவிட்டால் அவளை
நம்பி உயிர் வாழும் அவளுடைய குடும்பத்தினர் துன்புறுவர்
என்பதற்காகவே அவள் பேரிலும், அவள் குடும்பத்தினர் பே
லும் இரக்கங்காட்டி அவளுடைய வழித்தோன்றல்களுக்கு
கொடையளித்தனர்போலும்! கொடை அவளுக்கே அளிக்கப
பட்டதாகக் கூறினும், அக்கொடையினை அனுபவிப்பவர்கள்
அவளுடைய வழித் தோன்றல்களே!

செப்பேட்டில் காணப்படும் சில சொற்கள்

நாகமாணிக்கத்தாளுடன் கூடியிருந்த வென்றுமாலையிட
டானைச் செப்பேடு குறிப்பிடும்பொழுது "வென்னு மாளையிட
டான்" என கொச்சையாகக் குறிப்பிடுகிறது. வென்னுமாளை
யிட்டானுடைய உயிர் பிறருடைய தாக்குதலின்றி நன்றாக
இருந்து தற்செயலாக உயிர் போனதைச் செப்பேடு உயிர் இத
மாய்ப் போனது என்பதைக் குறிப்பிடுவதற்கு 'உயிறதெமா
போனதென்று அழகாகக் குறிப்பிடுகிறது.

மூவேந்திர வேளாளர்

தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டிய மன்னர்களின்
ஆளுகையின் கீழிருந்த வெள்ளாளர்களின் வழிவந்த கார்காத்த
வெள்ளாளர்கள் தங்களை இச்செப்பேட்டில் "மூவேந்திர
வேளார்" என்று குறிப்பிட்டுக் கொள்கின்றனர்.

கோனாட்டிலுள்ள ஒளியூர்க் கூற்றத்தில் எழுந்தருளியுள்ள
இறைவி "அழகிய பெரியவள் ஒளிய நாயகி". அவளுடைய
துணைவேண்டி இச்செப்பேடு முடிக்கப்பெற்றுள்ளது.

செப்பேடு

1 ஸ்ரீமகா மண்டலேஸ்பரன் அரியதல
2 வியன் பாடன் ப[ா]சைக்கி தப்பு மூவறாய க
3 ன்டன் கன்டனாடு கொண்டு கொண்டனா

4 டு கூடாதான் பாண்டிய மண்டல தான ப
5 ாஞ்சாள னாச்சாறியான் அசுபதி கிஷபதி
6 நரபதி தெச்சனாதி பிறிதிவு றாச்சிய பரிப
7 ன்ன அறுளா நின்ட சாலியவாகன சகா
8 த்தம் 1400 மேல் செல்லா நின்ட வி
9 சைய ஷு ஆவனி மீ 7 உ சிய சோள
10 கெம்பீர வளநாடாகிய கோனாடதில் பி
11 றமனை சூள்ந்த பொன்னமறாபதி னாட்டில்
12 வடபத்தில் வாகை மங்கலமாகிய குளுப்
13 பிரை கானியச்சிக்கி நிலத்தறசு கற்த்தரா
14 கிய காற்காத்த வேளாற் பட்டம் 700க்கும்
15 756 குடிகாடு 511க்கு பிற
16 மதாயம் 21க்கு தேவதாயம் 212
17 னாடு 64க்கு தலையூறாகிய ஒலியுற் கூ
18 ற்றம் உள்ளிட்ட 6 குடிகாட்டி லிருக்கு
19 ம் காற் காத்த வேள[ா]ற் குடுத்த கானியாச்
20 சி வாகை மங்கலம் குலுபிரைக்கி வந்
21 தவன் சேதுகாவலப் புரையற் ம
22 ற மன்னற் நாலுவகை பேரும் கூ
23 டி குடுத்த கானியாச்சி குளுபிரைக்கு
24 வந்தவ தலத்தாரில் நகர மானிக்க
25 த்தாள் அளகிய நல்லாளே வென்னு
26 மாளையிட்டான் கூடியிருந்த விடத்தில்
27 சுவாமி திருவிலா அம்மன் பிடாரிறியர்
28 திருவிலாவில் அரமனை சளுப்பா நாகம
29 ானிகத்தாள் வீட்டில் யிருந்து சுவாமி தெ
30 ரிசனை பன்ன வந்த விடத்தில் உயி
31 றதெமா போனபடியினா மாணிக்[க]
32 த்தாள் கூட உடன்கட்டை ஏறி
33 போனபடியின்னாலே நாங்கள்

34 உரார் ந[ா]லு வகை பேரும் குடுத்த க
35 ானியாச்சி வென்னுமாளையிட்டார்
36 கானியில் ஊறத்து பிறவில் நால
37 த் தொரு[2] பங்கு மன்னும் மனை கோ
38 வில் குளம் யிடுகாடு படுதுரை சக
39 லமும் மானிக்கதாள் ஆண்டு கொள்வ
40 து யிதுர கல்வெட்டு சொக்க நாதற்
41 கோவில் கெற்ப்பகரகம் நில கல்
42 லு வெட்டி தாம்பூற சாதனம் பன்
43 னி குடுத்தோம் மூவேந்திற வேளா
44 ற் திறப்பூ அளகிய பெரியவள் ஒலிய
45 னாயகி துணை உ

அடிக்குறிப்புகள்

1. S. Radhakrishna Iyer, 'A General History of the Pudukkottai State, p. 61.
2. நாலில் ஒன்று.

★

பூராதிராயன் அத்திமல்லன்

நா. மார்க்சீயகாந்தி, எம்.ஏ.,
கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28

சங்ககாலம் தொட்டுப் பெண்ணை ஆற்றங்கரையில், (தென்னார்க்காடு வடார்க்காடு மாவட்டப் பகுதிகளில்) அரசுபுரிந்தவர்களே மலையமான்கள். இம்மரபு, மலையமான் திருமுடிக்காரி தொடங்கி 13-ஆம் நூற்றாண்டுவரை தொடர்ந்தது. இவர்கள் முதற் குலோத்துங்கன் காலம் முதல் தம்மைத் தம்நாடான சேதி நாட்டின் பெயரால் சேதிராயர்கள் என்றும், தம் பெயரோடு அத்திமல்லன் என்ற பட்டப்பெயரையும் பெற்றிருந்திருக்கின்றனர். அத்திமல்லன் என்ற பெயர் ஹஸ்திமல்லன் என்பதன் தமிழ் வடிவமாகும். கங்க மன்னன் இரண்டாம் பிரிதிவிபதி ஹஸ்திமல்லன் என்றழைக்கப்படுகிறான். முதற் பராந்தகனின் சிற்றரசனாக இருந்து அவன் பாணர்களை வெல்லத் துணைபுரிந்து, 'பாணாதிராஜன்' என்ற பட்டத்தை தன் மேல்அரசனால் தரப்பெற்றவன். வட ஆர்க்காடு மாவட்டம் சோழபுரத்திலுள்ள சகம் 871-ஐச் சேர்ந்த கல்வெட்டு அத்திமல்லனான கன்னரதேவ பிரிதிவி கங்கரையன் ஒருவனைச் சுட்டுகிறது. இவன் பெயரிலிருந்து இராஷ்டிரகூடர்களுக்குச் சிற்றரசனாக இருந்திருக்கலாம் என நாம் ஊகிக்கலாம். எனவே 'அத்திமல்லன்' என்ற பட்டப் பெயர், முதற்பராந்தகன் காலம் தொடங்கி 13-ஆம் நூற்றாண்டு வரை, முதலில் கங்கர்களுக்கும் பின்னர் மலையமான்களான சேதிராயர்களுக்கும் வழங்கி வந்திருக்கிறது.

இனி கங்க நாட்டில் 13-ஆம் நூற்றாண்டில், அதாவது கி.பி. 1233 முதல் 1268 வரை முதல்நரசிம்மவர்மன் என்ற மன்னன் ஆட்சி புரிந்திருக்கின்றான். கொனாரக்கில் உள்ள சிறப்புக் குரிய சூரியன் கோயிலை எடுத்தவன் இவனே. இவன் காலத்தில் (சகம்: 1172), விசாகப்பட்டினமான குலோத்துங்க சோழப்

பட்டினத்தில் உள்ள கருமாணிக்காழ்வார் கோயிலில் கண்டன் சந்திரிய செட்டி என்ற வணிகன் சனிவார மண்டபம் எடுத்ததை அங்குள்ள ஒரு தமிழ்க் கல்வெட்டு சுட்டுகின்றது. தமிழகத் தொடர்பை இது காட்டும். இவனிடம் சாமுநாதன், ராம கோவிந்தன் ஆகியோர் சேனாதிபதிகளாக விளங்கியிருக்கின் றனர். முன்னவன் சோமேஸ்வர நாயக்கனின் மகன் என்றும் பின்னவன் பேரன் என்றும் குறிக்கப்படுகின்றனர். இக்கங்க மன்னர்களுக்கும், தமிழ் மன்னர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பல்லவர் ஆட்சியின் இறுதியிலும், சோழ ஆட்சியின் போதும் இவர்கள் எல்லைப் பகுதியான வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில் சமயம் கிடைத்தபோது தனியாட்சி செய்தும் வலிமை பொருந்திய மன்னர்கள் வரும்போது சிற்றர சர்களாகவும் தொடர்ந்து வந்துள்ளனர்.

இவ்விரு வரலாறுகளின் பின்னணியில், தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், சின்னக்குத்தூரில் உள்ள இரு நடுகற்களைக் காண்போம்:

> "ஸ்வஸ்திஸ்ரீ பூராத்தாழ்வார் செலவாண்டை மேலே எடுத்து பொத்தாமரைலே விட்டு பூசல் செயைசிலே சோமய்ய நாயக மகன் விம்மைய நாயக தம்பியும் மகனும் பட்டார்".[1]
>
> "திரிபுவன மல்ல பூராதிராயன் அத்திமல்லன் முதலி களில் தாமத்தேவற்கடியார் மகன் மாராழ்வான் நாரசிங்க தேவநுக்கு படைத்துணை போய்ப் பட்டான்".[2]

இவ்விரு கல்வெட்டுக்களில், மன்னன் பூராத்தாழ்வார் அல்லது பூராதிராயன் என்றழைக்கப்பட்டுள்ளான். அத்திமல்லன், திரி புவனமல்லன் என்பன அவனது சிறப்புப் பெயர்கள். போரில் சோமய்ய நாயகனின் மகன் விம்மைய நாயகன் தம்பியும், மகனும், தாமத்தேவரின் அடியாள் மகன் மாராழ்வானும் இறந்து விட்டனர். மாராழ்வான் நரசிங்க தேவனுக்காகப் போரிட்டான்.

இச்செய்திகளில் இருந்து நாம் சில முடிவுகளை மேற் கொள்ளலாம். இவ்விரு கல்வெட்டுக்களும் ஒரே போரைக்

குறிப்பன. இதில் மாராழ்வான் நரசிங்க தேவனுக்காக இறந்து இருத்தலின், மேலே குறிக்கப்பட்ட இருவரும், இவனுக்காகவே போரிட்டிருத்தல் வேண்டும். எனவே இப்போர் நரசிங்க தேவன் காலத்தில் நடந்தது. திரிபுவனமல்ல பூராதிராயன் அத்திமல்லன் அக்காலத்தில் இருந்த ஒரு சிற்றரசன்.

இக்கல்வெட்டும், இந்தப் பூராதிராயனும் எந்த காலத்தைச் சேர்ந்தவர்கள்? இதனை அறிய அதே மாவட்டம் ஒசூர் சந்திர சூடேஸ்வரர் கோயில் கல்வெட்டு துணைபுரிகிறது:

> "ஸ்வஸ்திஸ்ரீ சகரை ஆண்டு ஆயிரத்து ஒருநூற்று எண்பத்துமூன்று சென்ற மன்மத சம்வத்ஸரத்து ஆநி மாசம் திருபுவனமல்ல பூர்வாதிராஜர் அத்திஆழ்வார் மகனார் தாமத்தாழ்வார் செவுடை நாயனார்க்கு நம்பி ராட்டியாரையும் எழுந்தருளுவித்து பூஜையையும், கொத்த காமிண்டன் பள்ளியையும் குடுத்து . . . . ."[3]

என வருகிறது. இக்கல்வெட்டிலும் மன்னன் பெயர், திருபுவன மல்லபூர்வாதிராஜர் அத்திஆழ்வார் என்று குறிக்கப்படுகிறது. இவனது மகன் தாமத்தாழ்வான் எனப்படுகின்றான். இவனது அடியான் மகனே சின்னக்குத்தூர் நடுகல் குறிக்கும் மாராழ்வான் ஆவான். இக்கல்வெட்டில் சகம் 1183 தெளிவாகவுள்ளது. எனவே இத்தனை கல்வெட்டுக்களும் ஒரே பூராதிராயனைச் சார்ந்தது ஆதல் வேண்டும். நடுகல்லின் குறிக்கப்படும் நரசிங்கதேவன் அதே காலத்தில் இருந்த கங்கமன்னன் முதலாம் நரசிங்க தேவனே ஆவான். அவனது பிற கல்வெட்டுக்களில் குறிக்கப் படும், சோமேச்வர நாயக்கனின் மகன் சாமுநாதன், பேரன் ராமகோவிந்தன் போலவே இக்கல்வெட்டில் அவன் மகன் விம்மைய நாயக்கனின் தம்பி, மகன் ஆகியோரும் குறிக்கப் படுகின்றனர். இவனது குடும்பமும் பரம்பரையும் சேனாதிபதி களாகவும், போர் வீரர்களாகவும் இருந்தது போலும்.

இக்கல்வெட்டுக்கள் 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கங்க மன்னன் நரசிங்க தேவனின் சிற்றரசனாக வாழ்ந்த பூராத்தாழ் வான் அத்திமல்லன் காலத்தனவே. அத்திமல்லன் என்ற பட்டம் கொண்ட பூராத்தாழ்வானுக்கும், அதேகாலத்தில் திருக்கோயிலூர், கீழையூரைத் தலைநகராகக் கொண்ட

சேதிராயனான அத்திமல்லர்களுக்கும் என்ன தொடர்பு? வெறும் பட்டப்பெயர் ஒற்றுமைதானா? இருவரது நாடும் அடுத்தடுத்து இருத்தலின், மணவினை போன்ற தொடர்புகள் மூலம் இப் பெயர் கங்கர்களிடம் இருந்து சேதிராயர்களுக்கு வந்திருக் லாம் எனத் தோன்றுகிறது.[4]

அடிக்குறிப்புகள்

1 தருமபுரி நடுகற்கள் 144/1973
2 தருமபுரி நடுகற்கள் 142/1973
3 தருமபுரி மாவட்டக் கல்வெட்டுகள் 42/1974
4 'சின்னக்குத்தூர் கல்வெட்டுக்கள்' கல்வெட்டு இதழ் 8-ஐப் பார்க்க,

★

மலையடிக்குறிச்சி

வெ. வேதாசலம், எம்.ஏ.,
காப்பாளர்
திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவிலிலிருந்து புளியங்குடி செல்லும் வழியில் முள்ளிக்குளம் என்ற ஊர் உள்ளது. இவ்வூருக்கு வடக்கே ஒருகல் தொலைவில் குன்று ஒன்று உள்ளது. இதனை 'நாதன்மலை' என்று மக்கள் அழைக்கின்றனர். இதன் தென்புறம் மலையடிக்குறிச்சி அமைந்துள்ளது.

நாடும் ஊரும்

இவ்வூரிலுள்ள பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்கள், இவ்வூரை மலையடிக்குறிச்சி என்றே குறிப்பிடுகின்றன. அக்காலத்தில் இவ்வூரும் இதனைச் சூழ்ந்த பகுதிகளும் ஆரிநாட்டில் இருந்தன. இவ்வூரும் இதனைச் சார்ந்த பகுதியும் பாண்டியர் காலத்தில் 'சிபராந்தகச் சதுர்வேதிமங்கலம்' என்ற பெயரில் அழைக்கப்பெற்றது. இப்பராந்தகச் சதுர்வேதிமங்கலத்தின் தென்புறப்பகுதியில் இம்மலையடிக்குறிச்சி இருந்தது. இதனை 'ஆரிநாட்டுப் பிரமதேயம் சிபராந்தகச் சதுர்வேதிமங்கலத்து தென்பிடாகை மலையடிக்குறிச்சி'—என்று இவ்வூர்ச் சிவன் கோயிலிலுள்ள சீவல்லப பாண்டியனின் (கி.பி. 1132-1163) கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது.[1]

இவ்வூரில் முற்காலப் பாண்டியர் காலத்தினைச் சார்ந்த குடைவரைக் கோயில், இடைக்காலப் பாண்டியர் சிவன் கோயில் பெருமாள் கோயில், பிற்காலத்தில் எடுக்கப்பெற்ற முப்பிடாதியம்மன் கோயில் முதலிய கோயில்கள் உள்ளன. இவைதவிர இவ்வூரில் பாசனத்திற்காகப் பாண்டிய மன்னர்கள் காலத்தில் தோற்றுவிக்கப்பெற்ற பழமையான ஏரி ஒன்றும், குடிநீருக்காகத் தோற்றுவிக்கப்பெற்ற தொன்மையான கேணி ஒன்றும்

உள்ளன. இவை பாண்டிய நாட்டுச் சமயம், கலை, சமுதாய அரசியல் வரலாற்றில் சிறப்பான வகையில் வைத்துப் பேசும்படியாக அமைந்துள்ளன.

முற்காலப்பாண்டியர் குடைவரைக் கோயில்

நாதன்மலையின் தென்புறம் அடிவாரத்திலிருந்து சற்று உயரமான இடத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. மலையைக் குடைந்து முகமண்டபம், கருவறையுடன் கூடிய சிறிய குடைவரைக் கோயிலாகக் காட்சியளிக்கின்றது. இக்குடைவரை கிழக்குப் பார்த்து அமைந்துள்ளது. இதனை இன்று இவ்வூரார் மகாதேவர் கோயில் என்று அழைக்கின்றனர். இதுவே இவ்வூரில் ஏற்பட்ட பழமையான சிவன் கோயிலாகும். இது பாண்டிய மன்னன் சேந்தன்செழியனின் கட்டளைக்கு இணங்க கி.பி. 637-இல் அவனது அரசியல் அதிகாரி பாண்டிய மங்கலவதி அரசன் சேவூர்கிழானால் எடுப்பிக்கப்பட்டதாகும். இதனைக் 'கற்றிருக்கோயில்' என்று சேந்தன்செழியனின் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இடைக்காலப் பாண்டியர் காலத்தில் இக்கோயில் 'பிணக்கறுக்கும் மகாதேவர்' கோயில் என்ற பெயரில் விளங்கியதை மாறவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியனின் (கி.பி. 1135) கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது.

கருவறை

இக்குடைவரையின் கருவறை 5'x5' என்ற அளவில் அமைந்துள்ளது. இதன் உயரம் $5\frac{1}{2}$' யாகும். கோயில் லிங்கம் பிற்காலப் பாண்டியர் காலத்தில் பிரதிட்டை செய்யப்பட்டதாகும். கருவறையின் உட்புறம் கதவிட்டு மூடுவதற்காக, வாயிலின் இருபுறமும் அடிப்பாகத்தில் பக்கத்திற்கு நிலைக்கால்களை நிறுத்துவதற்காக அரைவட்டக் குழிகள் குடைவரையின் தரைப் பகுதியில் தோண்டப்பட்டுள்ளன.

வாயில் தோரணம்

கருவறையின் வாயில் $4\frac{1}{2}' \times 2\frac{1}{2}'$ என்ற அளவில் அமைக்கப்பட்டுள்ளது. வாயிலின் மேல்புறத்தில் அழகிய மகரதோரணம் அணிசெய்கின்றது. இதன் நடுபகுதியில் பதக்கவடிவில் செதுக்கப்பட்டிருக்கின்றது. அதில் இருகரங்களில் மலர் ஏந்திய

கந்தர்வன் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கின்றான். இக் கந்தர்வனின் இருபுறமும் மகரதோரணங்கள் பக்கவாட்டில் புறப்பட்டுச் செல்கின்றன. அதன் முடிவினை இருபுறமும் காணப்படும் மற்றும் இரண்டு மகரவாயிலிலிருந்து எதிர்ப்படும் கந்தவர்கள் ஏந்தியிருப்பதுபோன்று காட்டப்பட்டுள்ளது. அதற்கும் மேலே இவ்விரண்டு மகரதோரணங்களைப் பற்றிக் கொண்டு பக்கத்திற்கு ஒருவராக இரண்டு கந்தர்வர்கள் நிற்கின்றனர். இத்தோரணம் அழகுப்பொலிவினை அள்ளித் தருகின்றது.

வாயிற் காவலர்

கருவறைவாயிலின் இருபுறமும் உபானத்திலிருந்து உத்திரம்வரை செதுக்கப்பெற்ற எளிமையான இரண்டு தேவ கோட்டங்கள் பக்கத்திற்கொன்றாகக் காட்சியளிக்கின்றன. நீள் செவ்வகவடிவில் அமைக்கப்பட்ட இத்தேவகோட்டத்தின் மீது கொடுங்கையும் அதன்மேல் கால்களும் உத்திரக்கட்டைகளும் செருகப்பட்டிருப்பது போன்று வடிக்கப்பட்டுள்ளன. இத்தேவ கோட்டங்களில் முற்றுப் பெறாத நிலையில் இரண்டு வாயிற் காவலர்களின் சிலைகளைக் காணலாம். இவர்கள் தங்கள் கால்களில் ஒன்றை எடுத்து ஊன்றிய தடியினைப் பின்னிக் கொண்டு கருவறைக்குக் காவலாக நிற்கின்றனர். இவ்விரு தேவகோட்டங்களின் பக்கவாட்டில் போதிகைகளுடன் கூடிய தூண்கள் செதுக்கப்பெற்றுள்ளன.

முகமண்டபம்

கருவறையின் முன்புறம் சுமார் $6\frac{1}{2}' \times 12'$ அடி நீளமுள்ள முகமண்டபம் காணப்படுகின்றது. பக்கவாட்டில் இரண்டு அரைத்தூண்களும் நடுவில் இரு முழுத்தூண்களும் தாங்கி நிற்கின்றன. தூண்களின் அடிப்பாகம் நீண்ட செவ்வகமாயும், நடுப்பாகம் எண்பட்டையாயும், மேல்பாகம் கனசதுரமாயும் வடிக்கப்பெற்றுள்ளன. தூண்களிலுள்ள போதிகை பக்கவாட்டில் சுருள்சுருளாக அமைந்த மடிப்புக்களாக வெட்டப்பட்டுள்ளன. இதன் நடுப்புறப்பகுதியில் பட்டையான கட்டுவார் ஒன்று அணிசெய்கின்றது. தூணின் நடுப்பகுதியிலுள்ள எண் பட்டைப்பகுதி தாமரையிதழ்களின் நடுவேயிருந்து கிளம்புவது போன்று காட்டப்பெற்றுள்ளது.

தூண்களின் கனசதுரப்பகுதியில் வட்டவடிவில் அழகிய சிற்பவேலைப்பாடுகள் செய்யப்பெற்றுள்ளன. தென்புறமுள்ள அரைத்தூணில் நடுவில் பதக்கத்துடன் கூடிய அணிகலன் ஒன்றும் வடபுறமுள்ள அரைத்தூணில் அலகினைப் பின்புறம் திருப்பிச் சிறகைக் கோதும் அன்னம் ஒன்றும் வடிக்கப்பெற்று உள்ளன. நடுவே அமைந்த முழுத்தூண்களின் முன்புறம் ஒன்றில் வட்டமான தாமரையின் நடுவே திண்டின் மீது அமர்ந்திருக்கும் கந்தவர்வன் ஒருவனின் உருவம் காணப்படுகின்றது. மற்றொரு தூணிலும் நான்கு கரங்களுடன் இரண்டு கால்களையும் குழந்தைபோல் முன்னே மடித்து அமர்ந்திருக்கும் கந்தவர்வன் ஒருவனின் உருவம் காணப்படுகின்றது. இவ்வுருவத்தின் பின் கரங்கள் ஆகூயவரதத்திலும் முன்னிரு கரங்கள் மலர்களையும் ஏந்திக் காணப்படுகின்றன. இவ்வுருவம் அம்மைக்கும் அப்பனுக்கும் இடையில் குழந்தையாக அமர்ந்திருக்கும் கந்தனின் உருவை நினைவூட்டுகின்றது. இதன் தடித்த நெற்றிக் கண்ணியும் மகுடமும் நோக்கும்போது இவ்வுருவம் கந்தனாக இருக்கலாமோ என்று துணிய இடந்தருகின்றது. இவ்வுருவங்கள் தவிர இத்தூண்களில் அழகிய கரங்களும் கொடிகளின் அலங்காரங்களும் புடைப்புச்சிற்பமாக இல்லாமல் ஆழமாக வெட்டியெடுக்கப்பெற்றுள்ளன.

மகாமண்டபம்

இக்குடைவரைக்கோயிலின்முன் பிற்காலப் பாண்டியரின் மகாமண்டபம் ஒன்று காணப்படுகின்றது. இதனை எளிய வேலைபாடுகள் கொண்ட ஆறுதூண்கள் தாங்கிநிற்கின்றது.

இம்மகாமண்டபத்தின் வடபுறம் சிறிய கருவறையும் அர்த்தமண்டபமும் கொண்ட அம்மன்கோயில் ஒன்று உள்ளது. இதன் வாயில் தெற்கு நோக்கிய நிலையில் மகாமண்டபத்தோடு இணைத்துக் கட்டப்பெற்றுள்ளது. கருவறையில் நாயக்கர் காலத்தைச் சார்ந்த ஒரு அம்மனின் சிற்பம் காணப்படுகின்றது.

இக்கோயிலின் முன்புறம் மண்ணில் புதைந்த நிலையில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நந்தியின் உருவம் ஒன்று காணப்படுகின்றது.

கல்வெட்டுக்கள்

இக்கோயிலில் முற்காலப்பாண்டியர் காலத்தியச் சார்ந்த கல்வெட்டு ஒன்றும் இடைக்காலப் பாண்டியர் கல்வெட்டு ஒன்றும் காணப்படுகின்றன. இவற்றைத் தவிர மகாமண்டபத் தூண்களிலும் அம்மன் கோயில் சுவர்களிலும் சில துண்டுக் கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன.

இங்குள்ள முற்காலப் பாண்டியர் கல்வெட்டு பாண்டிய மன்னர்களின் அரசியல் வரலாற்றிலும், கலை, சமய வரலாற்றிலும் இடம்பெறத்தக்க சிறப்புவாய்ந்த கல்வெட்டாகும். இது தமிழ் மொழியில் தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப் பெற்றிருக்கின்றது. வட்டெழுத்தின் வளர்ச்சியினையும், தமிழ் எழுத்தின் வளர்ச்சியினையும் அறிய இக்கல்வெட்டு துணை புரிகின்றது. அதிக அளவில் தமிழ் எழுத்துக்களோடு சில வட்டெழுத்துக்கள் கலந்து எழுதப் பெற்றுள்ளது. இதனை திரு பி.ஆர். சீனிவாசன் அவர்கள்,

> "ஸ்ரீகோமாறஞ் சேந்தன் கொற்றமுற்றித் திருவிராச்
> சியஞ் செல்லா நின்றது பதினேழாக
> அவன் பணியால் பாண்டிமங்கல வழி அரயன் சேவூர்
> கிழான் சாத்தனெறன் செய்வித்த கற்றிருக்கோயில்".

என்று படித்துள்ளார்.[2]

இக்கல்வெட்டின் இரண்டாவது வரியில் அமைந்த 'பாண்டிமங்கல வழி அரயன்' என்பதைப் 'பாண்டிமங்கலவதி அரசன்' என்று படிப்பதே பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது. அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் படியெடுக்கப்பெற்ற கல்வெட்டுப்படியில் இவ்வாறே இது தெளிவாகக் காணப்படுகின்றது. 'பாண்டிமங்கலஅதி அரசன்' என்பதே கல்வெட்டில் புணர்ச்சியுடன் 'பாண்டிமங்கலவதி அரசன்' என்று எழுதப்பெற்றுள்ளது. இது பாண்டிய மன்னர் தங்களது அரசியல் அதிகாரிகளுக்கு அளித்த பட்டமாகும். பாண்டிமங்கல அதிஅரசன் என்ற இப்பட்டம் போன்று பிற்காலத்தில் பராந்தக நெடுஞ்சடையனின் காலத்தில் வாழ்ந்த உத்திரமந்தி ஒருவனுக்கு 'பாண்டிமங்கல விசையரையன்' என்று வழங்

யுள்ளதை ஆனைமலைக் கல்வெட்டு, தெரிவிக்கின்றது. 'அதி அரசன்' என்ற இப்பட்டப்பெயர் பல்லவர்களது நடுகற்களில் 'அதிஅரைசர்' என்று குறிப்பிடப்படுகின்றது.

இக்குடைவரையை எடுத்த சாத்தனேறனுக்கு இப்பெயர் பாண்டியமன்னன் சேந்தன் செழியனால் அளிக்கப்பெற்றிருக்க வேண்டும். இவன் சேவூர் என்ற ஊரினைச் சார்ந்தவனாக விளங்கியமையால் சேவூர்கிழான் என்று கல்வெட்டில் குறிப் பிடப்படுகின்றது. இச்சேவூர் இன்று 'செவ்வூர்' என்ற பெயரில் பொன்னமராவதிக்கு அருகிலுள்ள பூலாங்குறிச்சியினை அடுத்து விளங்குகின்றது. இது சோழநாட்டிற்கும், பாண்டியநாட்டிற் கும் இடையில் வடஎல்லைப்புறத்தில் அமைந்த ஊராகும். இராசராசனின் தந்தை சுந்தரசோழன் சோழன் தலைகொண்ட வீரபாண்டியனைத் தோல்வியுறச் செய்த இடம் இச்சேவூராக இருக்கவேண்டும். இச்சேவூருக்கு அருகேயுள்ள பூலாங்குறிச்சி யில்தான் அண்மையில் வரலாற்றுச் சிறப்புமிக்க சேந்தன் கூற்ற னின் கல்வெட்டு கண்டறியப் பெற்றுள்ளது.

கி.பி. 1135-இல் வெட்டப்பெற்ற பாண்டியன் ஸ்ரீவல்லப னின் (கி.பி. 1132-1163) கல்வெட்டு இக்கோயிலுக்கு நான்கு மா நிலம் விட்டதைத் தெரிவிக்கின்றது. மகாதேவர் கோயிலில் இருந்த தேவகன்மிகளும் சிமகேஸ்வர கண்காணி செய்வார் களும் ஸ்ரீவல்லபனிடம் வேண்டிக்கொண்டபடி முன்பே இம்மன்னனால் கொடுக்கப்பெற்ற இரண்டு மா அரை நிலத்துடன் மேலும் ஒரு மா அரை நிலத்தையும் சேர்த்து நான்கு மா நிலமாக இவ்வூரில் அளிக்கப்பெற்றது. இந்நிலம் இவ்வூரில் இருந்த மானாபரணன் ஏரிக்கீழ் அம்மன்களுக்கு கிழக்கிலும் தேவி வாய்க்காலுக்குத் தெற்கிலும் பழ நத்தத்திற்கு வடக்கிலும் வீரபாண்டியன் பிலாற்றுக்குக் கிழக்கிலும் இருந்தது.[3]

மேலும் இக்கோயிலின் மகாமண்டபத்தில் உள்ள தூண் களில் பிற்காலத்தில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் காணப் படுகின்றன. ஒரு தூணில் 'பாலைமுற்றம்' என்ற பெயர் காணப்படுகின்றது.

குடைவரைக் கோயிலின் சிறப்பு

பாண்டிய நாட்டில் இக்குடைவரைக் கோயிலுக்கு முன் எடுக்கப்பெற்றது பிள்ளையார்ப்பட்டிக் குடைவரைக் கோயிலாகும். அதனை அடுத்து கி.பி. 637-இல் இக்கோயில் எடுக்கப்பெற்றிருக்கின்றது. பாண்டிய நாட்டில் காணப்படும் குடைவரைக்கோயில்களில் பெரும்பாலனவை. எக்காலத்தினைச் சார்ந்தவை என்று மயங்கவைக்கும் வண்ணம் அவற்றில் கல்வெட்டுக்கள் இன்றிக் காணப்படுகின்றன. பிள்ளையார்ப் பட்டி குடைவரைக் கோயிலில் அதனைக் குடைவித்தத் தச்சன் பெயர் மட்டும் காணப்படுகின்றது. ஆனால் இம்மலையடிக் குறிச்சி கோயில் பாண்டியநாட்டில் யாரால் எந்த அரசனின் தூண்டுதலால் கட்டப்பெற்றது என்பதற்குக் கிடைத்த முதல் சான்றாக விளங்குகின்றது.

இக்குடைவரைக் கோயிலை எடுக்கத்தூண்டிய சேந்தன் செழியன் பல்லவநாட்டில் மலையைக்குடைந்து புதிது புதிதாக குடைவரைக் கோயில்கள் எடுத்த மகேந்திரவர்மனின் சமகாலத்தவன். இம்மகேந்திரவர்மன் மண்டகப்பட்டு என்னும் ஊரில் சிவன், பிரம்மா, விஷ்ணு என்ற மும்மூர்த்திக்கே மலையைக் குடைந்து ஒரு குடைவரைக் கோயிலை எடுத்துள்ளான். அக் கோயில் கல்வெட்டில் அவனோ இம்மூன்று கடவுளர்க்கும் மண், மரம், செங்கல், உலோகம் என்ற நான்கு பொருளையும் பயன்படுத்தாது மலையைக் குடைந்து கல்லாலேயே முதன் முதலாகக் கோயில் எடுப்பித்ததாகக் கூறிக்கொள்கின்றான். இம் மகேந்திரவர்மனின் வாசகத்தின் விளைவே பாண்டிய நாட்டில் சேந்தன் செழியனால் எடுப்பிக்கப்பெற்ற மலையடிக்குறிச்சி குடைவரைக் கற்றிருக் கோயிலாக எதிரொலித்தது. இதனால் தான் சேந்தன் செழியனால் ஆணையிடப்பெற்று எடுப்பிக்கப் பட்ட மலையடி குறிச்சி குடைவரைக் கோயிலுக்கு மண், மரம், கல், உலோகம் இன்றி கல்லினாலேயே மட்டும் செய்யப்பெற்ற குடைவரைக்கோயில் என்ற பொருளில் 'கற்றிருக்கோயில்' என்று பெயர் புனையப்பெற்றது.

இக்குடைவரைக் கோயில் பாண்டிய நாட்டில் சம்பந்தர் வருகைக்கு முன்னர் பல்லவ நாட்டில்மகேந்திர பல்லவனின்

மதமாற்றத்தால் அங்கு பக்தி இயக்கத்தின் அலை முழுமையாக வீசிக்கொண்டிருந்த காலத்தில் எடுக்கப் பெற்றிருக்கின்றது.

மகேந்திரவர்மன் பல்லவநாட்டில் பல குடைவரைக் கோயில்களைத் தோற்றுவித்து மறைந்த பிறகு அவனது மகனான நரசிம்மவர்மனின் ஆட்சியின் தொடக்கக் காலத்தில் இக்குடைவரைக்கோயில் எடுக்கப்பெற்றிருக்கின்றது. இதனால் இக்குடைவரைக் கோயிலின் தூண்களில் காணப்படும் வேலைப் பாடுகளும், போதிகைகளும், துவாரபாலர் சிற்பங்களும் மகேந்திரவர்மனின் குடைவரைக்கோயிலில் உள்ளவை போன்று காணப்படுகின்றன. மேலும் மகேந்திரவர்மனின் காலத்தில் எடுக்கப்பெற்ற இரண்டு அரைத்தூண்களும், இரண்டு முழுத் தூண்களும் கொண்ட முகமண்டபத்துடன், வல்லம் குடைவரைக்கோயிலின் அமைப்பை ஒத்து இக்குடைவரைக்கோயில் காணப்படுகின்றது.

இக்குடைவரைக்கோயில் எடுக்கப்பெற்ற காலத்தில் பல்லவ நாட்டில் ஆட்சிபுரிந்து கொண்டிருந்த மகேந்திர பல்லவனின் மகனான நரசிம்மன் காலத்தில் எடுக்கப்பெற்ற தளவானூர்க் குடைவரைக்கோயிலிலும் இக்கோயிலில் காணப்படும் மகர தோரணம் போன்றே காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்குடைவரைக்கோயில் பல்லவர்க்குரிய கலைமரபை அடியொற்றி எழுந்திருப்பினும் பாண்டிய நாட்டில் மகேந்திரவர்மனுக்கு முன்பிருந்தே வளர்ந்து வந்துகொண்டிருந்த பாண்டியநாட்டுக் கலைமரபையும் பின்பற்றித் தனக்கேயுரிய கலைப் பாணியுடன் விளங்குகின்றது. இக்குடைவரைக் கோயிலில் காணப்படும் தூண்களின் எண்பட்டைப்பகுதி தாமரை இதழ்களின் நடுவேயிருந்து கிளம்புவது போன்று காட்டப்பட்டிருப்பது பல்லவர் குடைவரைக் கோயிலில் காணமுடியாததாகும். இது பிற்காலப் பாண்டியர் தூண்களின் வளர்ச்சியினைச் சித்திரிக்கும் முதல்படியாக அமைந்துள்ளது.

இடைக்காலப் பாண்டியர் காலத்திற்குப் பின்னர் இக்கோயில் சிறப்பு குன்றத் தொடங்கியது. இதற்குக் காரணம்

இடைக்காலப் பாண்டியர் காலத்திலேயே இவ்வூரில் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் தனித்தனியாக இரண்டு கட்டடக்கோயில்கள் ஊரின் நடுவில் எடுப்பிக்கப்பட்டமையே ஆகும்.

இடைக்காலப் பாண்டியர் சிவன்கோயில்

குடைவரைக் கோயிலுக்குத் தென்மேற்கே அன்னதானப்பொட்டலில் முற்றும் இடிந்துபோன நிலையில் காணப்படுகின்றது. தற்போது இவ்விடத்தில் லிங்கம் ஒன்றும் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அழகிய நந்தி ஒன்றும் காணப்படுகின்றன.

பெருமாள் கோயில்

இடிந்துபோன சிவன்கோயிலுக்குத் தென்கிழக்கே சிதைவுற்ற நிலையில் பெருமாள்கோயில் காணப்படுகின்றது. இது சிறிய கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றைப் பெற்று விளங்குகின்றது. இக்கோயிலை கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சி புரிந்த இடைக்காலப் பாண்டியர் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஸ்ரீவல்லபபெருமாள் எனக் கல்வெட்டுகள் உரைப்பதால் இக்கோயில் ஸ்ரீவல்லபன் (கி.பி. 1132-1163) காலத்தில் எடுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். இக்கோயிலுக்குரிய பெருமாள் சிலையின் தலைப்பகுதிமட்டும் சற்று உடைந்துபோன நிலையில் காணப்படுகின்றது.

முப்பிடாதி அம்மன் கோயில்

இதுவே இன்று இவ்வூரில் சிறப்பாகப் போற்றப்பெறும் கிராமதேவதை கோயிலாக விளங்குகின்றது. இக்கோயில் தற்காலத்தில் கட்டப்பெற்றதாகும். பிடாரி அம்மனே முப்பிடாதி அம்மன் என்று மருவி அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

மானாபரணன் பேரேரி

இது இவ்வூரின் மேற்கு எல்லையில் காணப்படுகின்றது. குடைவரைக்கோயிலில் உள்ள ஸ்ரீவல்லபன் கல்வெட்டில் இவ்வேரி 'மானாபரணப் பேரேரி' என்று குறிப்பிடப்படுகின்றது. இவ்வேரி கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில்

வாழ்ந்த சிவகாசிச் செப்பேட்டை வெளியிட்ட வீர பாண்டியனின் தந்தையின் பெயரால் தோற்றுவிக்கப்பெற்றிருக்க வேண்டும். சிவகாசிச் செப்பேட்டில் வீரபாண்டியன் மானாபரணனுக்கு மகன் என்று குறிப்பிடப்படுகின்றது. இவ்வேரி கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரபாண்டியன் காலத்திலோ அல்லது அவனது தந்தை மானாபரணன் காலத்திலோ தோற்றுவிக்கப் பெற்றிருக்கவேண்டும். இவ்வேரியிலிருந்து தண்ணீரை வெளிக்கொணர்ந்த வாய்க்கால் ஒன்று 'வீரபாண்டியன் பிலாறு' என்று அழைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து நீரை எடுத்துச் சென்ற சில நீர்க்கால்கள் 'அம்மன் கால்' என்றும் 'தேவிவாய்க்கால்' என்றும் அழைக்கப்பட்டிருப்பதை ஸ்ரீவல்லபனின் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

அடிக்குறிப்புகள்

1. A.R.E. Nos: 607-608 / 1915.
2. K.R. Srinivasan, 'Malaiyadi-K-Kurichi Pandya cave Temple and Inscription'
3. A.R.E. Nos: 607-608 / 1915.

தஞ்சை மராட்டியர் - நீதி பரிபாலனம்

ச. கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ.,
தொல்பொருள் அலுவலர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, தஞ்சாவூர்.

மராட்டியர் ஆட்சிக் காலத்தில் தஞ்சாவூர்ச் சீமைக்குப் போனால் பாட்டுக்களுடைய தாரதம்யங்களை அறியலாமென்று பெல்லாரி போன்ற இடங்களிலிருந்து பல அறிஞர்கள் வந்துள்ளனர். இவர்கள் காலத்தில் கலை உன்னத நிலையில் இருந்த போதிலும் நீதி நெறி பிறழ்ந்ததாகவே காணப்படுகிறது. பதவி ஒன்றையே குறிக்கோளாகக்கொண்ட மராட்டியர் தன் மானத்தை இழக்கவும் துணிந்தனர். நாட்டில் குழப்பம் மிகுந்தது. இங்கே தடியெடுத்தவன் தண்டல்காரன் என்ற நிலையைப் பார்க்கிறோம். ஆங்கிலேயரின் கீழ் பெயரளவில் மன்னர்களாக மராட்டியர் ஆட்சிபுரிந்தனர்.

நீதி மன்றங்கள்

மராட்டியர் ஆட்சியின்போது நான்கு நீதிமன்றங்கள் தஞ்சையில் இருந்தன. அவை:

1. தருமசபை:-பெரிய வழக்குகளைத் தீர்க்கும் நீதி மன்றம்.

2. முந்திரிக்கு சபை: சில்லரை வழக்குகளைத் தீர்க்கும் நீதிமன்றம்

3. பிரதிட்டித சபை: கோட்டைக்குள்ளேயே அங்குள்ள வழக்குகளைத் தீர்ப்பது. இதை நியாய சபை (கீழ்க்கோர்ட்டு) என்றும் கூறுவர்.

4. கார்பார் பிரசங்கம்: சபையில் தீராத வழக்குகளைத் தீர்த்துவைக்கும் நீதிமன்றம்.

மேற்கண்ட நான்கு சபைகளுடன் 'நியாயாதீசசபை'யும் இருந்தது. கீழ் நீதிமன்றம், தருமசபைக்குப்பின் மேல்முறையீடு செய்யும் நீதிமன்றமும் இருந்ததைப் பார்க்கிறோம். 'நியாயநசி மகால்' என்ற சபை ஒன்றும் இருந்தது. கி.பி. 1824க்குப் பிறகு இது இயங்கவில்லை. மகாலில் இருந்து மன்னன் அளிக்கும் தீர்ப்பே இறுதித் தீர்ப்பாகும்.

ஏழைகளுக்கு நீதி இல்லை

வரலாற்றாசிரியர் குறிப்பிடுவதுபோல் மாராட்டியர் காலத்தில் நாட்டில் குழப்பமே நிலவியது என்பதும், ஏழைக்கு நீதி கிடைப்பது முயற்கொம்பாகவே இருந்ததென்பதும் பின்வரும் சான்றுகளால் அறியலாம்:

1. திருவையாற்றில் சர்க்கார் நிலத்தை அளந்து கொண்டிருந்த ஐந்து ஊழியர்களைக் காவலர்கள் பலாத்காரமாக வட்டாட்சியரிடம் அழைத்துக்கொண்டுபோய் நிறுத்தி, சிறையில் போட்டிருக்கிறார்கள். இத்தவறினைச் சுட்டிக்காட்டி 1828-இல் மனு கொடுக்கப்பட்டுள்ளது.

2. அனுமந்த சிங்கு என்பவர் ஹைதராபாத்தில் திருடர்களின் தொல்லைக்கு ஆட்பட்டுத் தஞ்சைக்கு வருகிறார். இவர் வியாபாரி. இவரிடமுள்ள சால்வைகளை, சிலர் காசுதராமல் எடுத்துச் சென்றுவிடுகிறார்கள். அவர்களுள் ஒரு திருடன் சிக்க, வியாபாரி கொத்தவாலிடம் (நகரக் காவலன்) ஒப்படைக்கிறான். கொத்தவால் அவனை விட்டுவிட்டு வியாபாரியின் வேலைக்காரனை அழைத்துச் சென்று சாவடியில் வைக்கிறான். வேலைக்காரன் இல்லாமல் பட்டினி கிடந்த அனுமந்தசிங் 9-1-1848-இல் முறையிட்டிருக்கிறான்.

3. 1820-இல் களிமேடு என்னும் ஊரில் வாழும் வீராயி, செம்பு ஒன்றைத் திருட அவளுக்குக், கடுமையான தண்டனை தருகிறார்கள். செம்பை அவள் கழுத்தில் கட்டி நான்கு வீதிகளிலும் தண்டோராவுடன் இன்ன குற்றம் செய்தாளென்று சொல்லி அடித்துக்கொண்டே சென்றனர். பெண்ணென்றும் பாராமல் திருட்டுக்குற்றத்திற்குக் கொடூர தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

4. கும்பகோணத்தில் 1769-இல் பிள்ளையார் சதுர்த்தி யன்று ஒரு துலுக்கன் கற்களை எறிந்து ஒரு பிராமணனுடைய தலையை உடைக்க 3 பணம் மட்டுமே அபராதம் விதிக்கப் பட்டுள்ளது.

5. பொய்நகையை அடகுவைத்துப் பணம் வாங்கிய வெங்கட சுப்பையாவுக்கு நியாயாதீச சபையார் ஆறு வருடங்கள் விலங்குடன் ஜெயிலில் வைத்து மராமத்து வேலைவாங்கத் தீர்ப்புக் கூறியிருக்கின்றனர்.

6. 36 துலுக்கர் குடும்பங்களுக்குச் சொந்தமான நிலத்தை அரசன் ஆக்கிரமிப்புச் செய்துவிட, 22-7-1841-இல் மேற்படி துலுக்கர்கள் மன்னரிடம் கெஞ்சி முறையிட்டதைப் பார்க் கிறோம்.

லஞ்ச ஊழல்

மராட்டியர் ஆட்சியில் லஞ்சம் தலைவிரித்தாடியது என் பதைச் சில ஆவணங்கள் மூலம் அறியமுடிகிறது:

1. 1847-ஏப்ரல் 8-ஆம் தியதி கோட்டைக்குக் கொண்டு வரும் விறகுக்காரர்களைப் பரிசோதனை செய்து லஞ்சம் வாங்கி யதால் கீழவாசலுக்கு அருகில் ஒரு சாவடி அமைத்து விறகு கொண்டு வருவோரிடம் விசாரிக்க மனு பெற்றனர்.

2. வெண்ணாற்றின் பாலத்திற்குச் சமீபத்தில் காவலர்கள் பெண்களின் மூட்டைகளைப் பரிசோதனை செய்வதாகச் சொல்லி பணம் வாங்கியதால் அதைத்தடுக்க 1847 அக்டோபர் 7-ஆம் நாள் மனு கொடுக்கப்பட்டுள்ளது.

3. 7-3-1846-இல் வீரராகுப்பிள்ளை அரசருக்குக்கொடுத்த மனுவின்படி, இவருடைய மகளை 32 பேர் பலாத்காரமாகத் தூக்கிச் சென்று தாலி கட்டிவிட இவர் நியாயாதீச சபையில் வழக்கு தொடுக்கிறார். நியாயாதீச சபை எதிரிகளுக்கு சரீர தண் டனை தருகிறது. எதிரிகள் தர்ம சபையில் முறையிடுகிறார்கள். கீழ்க் கோர்ட்டின் தீர்ப்பை தர்மசபை உறுதி செய்கிறது. எதிரி கள் நியாயாதீச சபைக்குச் செல்கிறார்கள். நீலகண்டரின் தாய்

சுந்தராம்பாள் 400 ரூ அல்லது 500ரூ செலவு செய்து தண்டனையை அபராதமாக மாற்ற முயலுகிறார். 27-4-1847-இல் தீர்ப்பு வழங்கப்பட்டபோது சரீர தண்டனை மன்னிக்கப்பட்டு 21 ரூபாய் அபராதம் கட்டினால் போதுமென்று தீர்ப்பாகிறது.

பணம் இருந்தால் நீதியையும் வளைத்து விட முடியுமென்பதை இந்த நிகழ்ச்சி மூலம் அறியலாம்.

மரபுகள் மீறப்பட்டன

சில நேரங்களில் சாத்திர சம்பிரதாயங்களும், மரபுகளும் மீறப்பட்டதையும் பார்க்கிறோம். வேதம் ஓதக்கூடாத நாட்களில் கூட தீர்ப்புகள் வழங்கப்பட்டன:

1. 22-8-1846-ஆம் தேதியிட்ட ஆவணம், வேதம் படிக்கக் கூடாத தினத்தில் விவகாரத்தை விசாரணை செய்யவும் மனுக்களை வாங்கவும் கூடாதென்று வழக்கமிருந்தும், கிருஷ்ண பக்சம் நவமி முதல் அந்தமாதத்திய அமாவாசைக்குப் பிறகு பாக்கி இருந்தால் அவைகளை இரண்டாவது மாதத்தில் போடும் படியாக உத்தரவு வேண்டும் என்று குறிக்கிறது.

2. 1880-இல் திருவாரூர் சுவாமியின் பூசை நேரத்தில் சுத்த மத்தளம் வாசிக்கிறவன் குருக்களிடம் உபதேசம் பெற்று சைவ தீட்சையைக் கொண்டு அவனே பரம்பரையாக சுத்த மத்தளம் வாசிப்பது வழக்கம். பங்குனி முதல் கோவிலின் அமீனா வகையறாக்கள் அவனை நீக்கி குருக்களிடம் தீட்சை பெறாத ஒருவனை மேளக் காரனாக்கியுள்ளனர்.

3. பிரமாணம் செய்கிறவர்கள் நெருப்புச் சட்டியை வெறும் கையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நாஞ்சிக் கோட்டையார் சொல்கிறார்கள். அது சரியென்று தோன்றவில்லை என்று முக்கிய கலெக்டர் தெரிவித்தார் என 1828-ஆம் ஆண்டு எழுதப்பட்ட ஆவணம் ஒன்று கூறுகிறது.

ஆக, ஆங்கிலேயர்களின் செல்வாக்கின் காரணமாகவே சாத்திர சம்பரதாயங்கள் புறக்கணிக்கப்பட்டன எனலாம்.

நல்ல தீர்ப்பு

இவர்கள் ஆட்சியில் நேர்மையான சில நல்ல தீர்ப்புகளும் வழங்கப்பட்டன. சான்றாகக் கவிதை செய்கிறவர் பத்து நாட்கள் வராததற்கும் பாடுகிற கிருஷ்ணா இராமசாமி பத்து நாட்கள் வராததற்கும் மிருதங்கம் வாசிக்கிறவன் 4 நாள் வராத தற்கும் அபராதம் விதிக்கப்பட்டதை 4-1-1856-இல் அளிக்கப் பட்ட உத்தரவால் அறிகிறோம். அவ்வாறே நாகூர் சையத் கமால் தன் மேலதிகாரியைத்திட்டி சிறைதண்டனை அடைந்த தால் அவனுடைய பாக்கியைத் தராமல் விட்டதைப் பார்க் கிறோம்.

அரசு மொழி

மராட்டியர் ஆட்சியில் 'மோடி எழுத்தே' அரசுக்குரிய எழுத்தாகவும் மராட்டிய மொழியே அரசுமொழியாகவும் இருந் தது. 1855 ஜூலை முதல் கச்சேரியில் தமிழ் மொழியில் கணக்குகள் தயார் ஆயிற்று. ஆனால் சர்க்காருக்கு அனுப்ப வேண்டிய கணக்குகள் மட்டும் மோடியில் எழுதப்பட்டது. சிவானந்த நட்டுவன் தமிழில் கொடுத்த மனு, மோடியில் நகலும் கையெழுத்துத் தமிழிலும் இருந்ததைப் பார்க் கிறோம்.

மராட்டியர் காலத்தில் கலை வளர்ந்தது என்றாலும் நீதி வழங்குதல் பாரபட்சமாகவே இருந்துள்ளது என்பது தெளிவு.

★

விக்கிரமபாண்டியன்

ஆ பத்மாவதி, எம்.ஏ.,
கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28

குடியாத்தம் வட்டம் திருவல்லத்திலுள்ள முதலாம் இராஜாதிராஜனின் 29-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டொன்று,[1] இடைக்கால பாண்டியர் வரலாற்றில் புதிய ஒளியை ஏற்படுத்தியிருக்கிறது. இக்கல்வெட்டினையும் இன்னும் சில கல்வெட்டுக்களையும் இடைக்காலப் பாண்டியர்கள் என்ற நூலிலுள்ள சில குறிப்புக்களையும்[2] ஆதாரமாகக்கொண்டு ஒரு புதிய இடைக்காலப் பாண்டியனை அறிமுகப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

முதலாம் இராஜாதிராஜனின் 29-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த(கி.பி 1046) மணிமங்கலத்திலுள்ள கல்வெட்டொன்றால் அவனது இலங்கைப் படையெடுப்பினைப்பற்றி அறிந்து கொள்ளலாம். அக்கல்வெட்டு

> "...தென்தமிழ் மண்டலம் முழுவதும் இழந்து ஏழ்கடல் வீழம்புக்கு இலங்கேசநாகிய விக்கிரம பாண்டியன் பருமணி மகுடமும் காண்டகு தநதாக்கி..."[3]

எனக் கூறுகிறது. அவனது 30-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டும்,[4] இலங்கையர் கோமகன் விக்கிரம பாகு, விக்கிரம பாண்டியன், வீரசலாமேகன், ஸ்ரீவல்லபன் ஆகியோரைப் போரில் வென்றதாகக் கூறுகிறது.

இவற்றிலிருந்து கி.பி. 1046க்கு முன்னர் தமிழகத்தை ஆண்ட விக்கிரம பாண்டியன் என்பவன் நாட்டை இழந்து இலங்கை சென்று ஆண்டிருக்கிறான். அங்கு முதலாம் இராஜாதிராஜனால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறான் என்று யூகிக்கலாம். அப்படியென்றால் தன்நாட்டை இழந்து

இலங்கைக்கு செல்லக்காரணம் என்ன? தமிழகத்தில் யாரிடம் தோற்று இலங்கை சென்றான் என்ற கேள்விகள் எழுகின்றன.

முதலாம் இராஜராஜன் பாண்டிநாட்டைக் கைப்பற்றிய பின்னர் சோழராட்சி பாண்டிநாட்டில் முற்றிலும் நிலை நாட்டப்பட்டு விட்டது. முதலாம் ராஜேந்திரன் காலத்தில், கி.பி. 1021-22-ல் தன் புதல்வர்களுள் ஒருவனைச் சோழ பாண்டியனாக நியமித்து விட்டான். அப்படியென்றால் தென் தமிழ் மண்டலத்தை ஆண்டதாகக் கூறப்படும் விக்கிரம பாண்டியன் நிலை என்னவாக இருந்திருக்கும் என்பதை நம்மால் ஊகித்துக்கொள்ள முடியும். சந்தேகமின்றி அவன் சோழ பாண்டியனுக்கு அடங்கி ஆட்சி புரிந்திருத்தல் வேண்டும். இந்நிலையில் சோழபாண்டியர் கல்வெட்டை ஆய்ந்தால் திருநெல்வேலி மாவட்டம் திருவாலீச்வரத்திலுள்ள ஜடாவர்மன் சுந்தர சோழ பாண்டியன் கல்வெட்டில் விக்கிரமபாண்டிய பிரம்மராயன்[5] (கி.பி. 1038-39) என்பவன் குறிக்கப்படுகிறான். எனவே மேற்கூறிய விக்கிரம பாண்டியன் சோழபாண்டியனுக் கடங்கி ஆட்சி புரிந்து வந்திருக்கிறான் எனத் தெரிகிறது.

இவ்வாறு அடங்கி ஆட்சிபுரிந்த அவனுக்குத் தன் நாட்டை விட்டு ஓடும் நிலை ஏற்பட்டிருக்கிறதென்றால் அவன் பாண்டிய நாட்டுச் சுதந்திரத்திற்காகச் சோழனை எதிர்த்திருக்க வேண்டும்.

முதலாம் இராஜாதிராஜன் காலத்தில் கி பி. 1046க்கு முன்னரே விக்கிரபாண்டியன் இலங்கை சென்றிருத்தல் வேண்டும் எனப்பார்த்தோம். கி.பி. 1045க்கு முன்னர் முதலாம் இராஜாதிராஜன், தன் தம்பி சுந்தரசோழபாண்டியன் மதுரையில் சோழபாண்டியனாக ஆட்சி புரிந்துகொண்டிருந்த போது மூன்று பாண்டியர்களுடன் போரிட்டான். அப்போரில் முதலாம் இராஜாதிராஜன் வீரபாண்டியனையும், மானா பரணனையும் கொன்றான். சுந்தரபாண்டியனை முல்லையூரில் ஓடி ஒளியுமாறு துரத்தினான் என்று கல்வெட்டுச் செய்தி யுள்ளது.[6] இச்சம்பவம் நடந்தது கி.பி. 1045க்கு சற்றுமுன்னர். இக்காலகட்டத்தில் மூன்று பாண்டியர்களுடன் போரிட்டு வென்ற நிகழ்ச்சியினை ஒட்டியே விக்கிரமபாண்டியன் இலங்கை

சென்றிருத்தல் வேண்டும். அந்த மூன்று பாண்டியர்களைப் போல விக்கிரம பாண்டியனும் சோழனை எதிர்த்த காரணத்தினாலேயே நாட்டை இழந்து இலங்கை சென்றிருக்கிறான் என ஊகிக்கலாம்.

எனவே கி.பி. 1045க்கு முன்னர் தோற்றோடி இலங்கை சென்று தென்பாகத்தை ஆண்டுகொண்டிருந்த விக்கிரம பாண்டியனை[7] கி.பி. 1046க்கு சற்றுமுன்னர் இலங்கைப்படை யெடுப்பின்போது முதலாம் இராஜாதிராஜன் மீண்டும் விடாது தோற்கடித்தான். அதன் பின்னர் விக்கிரம பாண்டியனின் நிலை என்னவாயிற்று எனத் தெரிந்துகொள்வது அவசியம்.

குடியாத்தம் வட்டம் திருவல்லத்திலுள்ள முதலாம் இராஜாதிராஜனின் 29-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று விக்கிரமபாண்டியனைத் தோற்கடித்தது பற்றிக் கூறவில்லை. அக்கல்வெட்டில்,

"....ஸ்ரீவிக்கிரமபாண்டிய தேவர் சாமந்தன் திருச்சிற்றம்பலமுடையானான சோழபாண்டிய மாராயன் பக்கலும் இத்தேவர் அணுக்கியார் மதுராந்தகியார் பக்கலும் இத்தேவர் சாமந்தன் நக்கன் ஆடவல்லானான செழியகுல தில்லை மாராயன் பக்கலும்'[8]...."

எனக் கூறிச்செல்கிறது.

இக்கல்வெட்டில் விக்கிரமபாண்டிய தேவரின் அணுக்கியார் மதுராந்தகியார் குறிக்கப்படுகிறார். முதலாம் இராஜேந்திரன் மதுரையை அந்தகம் செய்தவன் என்ற பொருளில் மதுராந்தகன் என்ற சிறப்புப்பெயர் பெற்றிருந்தான். எனவே பாண்டி நாட்டிலுள்ள அதிகாரிகளோ பிறரோ அதுபோன்ற பெயரைப் பெற்றிருத்தல் முடியாது. எனவே அணுக்கியார் மதுராந்தகியார் யார் என்பதை ஆராய வேண்டும்.

"ஸ்ரீசிய்வல தேவர்க்கு யாண்டு 3 இருஞ்சோணாட்டு ஊறு உணி அரையன் மதுராந்தகனான கருநீலக்குடி நாடாள்வான் இட்ட அணைக்குறி"[9]

என உள்ளது. இக்கல்வெட்டை ஆய்ந்த திரு என். சேதுராமன் அவர்கள், பாண்டியனின் கல்வெட்டில் மதுராந்தகன் என்ற

பெயர் வரக்காரணம் அவன் சோழனாட்டைச் சேர்ந்த அதிகாரி. பாண்டிய நாட்டுக் காரியங்களை மேற்பார்வையிடுவதற்காகச் சோழனால் அனுப்பப்பட்டிருத்தல் வேண்டும் என்கிறார்.[10]

சோழ அரசுக்குக் கட்டுப்பட்டு ஆட்சி புரிந்துவந்த சீவல்லப பாண்டியனின் ஆட்சி நடவடிக்கைகளைப் பார்வையிட தந்தை முதலாம் ராஜேந்திரன், சோழநாட்டு அதிகாரி மதுராந்தகனை அனுப்பியதுபோல், மகன் முதலாம் இராஜாதிராஜனும் தனக்கு அடங்கி ஆட்சி புரிந்துவரும் விக்கிரமபாண்டியனுக்கு அணுக்கி யாராக மதுராந்தகியாரை அனுப்பியிருத்தல் வேண்டும். விக்கிரம பாண்டியனுக்கு அருகிலேயே இருந்து அவனது நட வடிக்கைகளைக் கவனித்துக் கொள்வதற்கு அணுக்கியார் மதுராந்தகியாரை நியமித்து ஆட்சி செய்த முதலாம் இராஜாதி ராஜனின் திறம் போற்றுதற்குரியது. எனவே,

1. கி.பி. 1038-இல் விக்கிரம பாண்டியன் சோழனுக்குக் கீழ் ஆட்சிபுரிந்தான்.

2. கி.பி. 1045க்கு சற்று முன்னரோ அல்லது சற்று பின் னரோ மூன்று பாண்டியர்களுடன் உரிமைக்குரல் எழுப்பித் தமிழ் நாட்டை இழந்து இலங்கைக்கு ஓடிச்சென்று அங்கு ஆட்சி புரிந்தான்.

3. கி.பி. 1047க்கு சற்று முன்னர் இலங்கையில் விக்கிரம பாண்டியன் முதலாம் இராஜாதிராஜனால் மீண்டும் தோற்கடிக் கப்பட்டான்.

4. கி.பி. 1048-இல் விக்கிரம பாண்டியன் மீண்டும் பாண்டி நாட்டை நட்புறவுடன் பெற்றுச் சோழனின் மேலாதிக் கத்தின் கீழ் ஆட்சிபுரிந்தான்.

சோழ வல்லரசு தமிழ் நாட்டிலும் பிற நாடுகளிலும் வலு வுன்றியிருந்த காலத்தில் தமிழகத்தில் பாண்டியர்கள் வல்ல ரசுக்குக் கட்டுப்பட்டும், வாய்ப்புக் கிடைத்தபோது உரிமையை நிலைநாட்ட முயன்றும் கொண்டுமிருந்தார்கள். இத்தகைய

இடைக்காலப் பாண்டியர்கள் வரிசையில் வந்த ஒருவன்தான் இந்த விக்கிரம பாண்டியன்.

அடிக்குறிப்புகள்

1 S.I.I. vol. IV 329.

2 Medieval Pandyas p. 71 by N. Sethuraman.

3 Ibid p. 72. foot Note. 11.

4 S.I.I. vol. VIII No: 199.

5 S.I.I. vol. XIV No: 160.

6 S.I.I. vol. XVII No: 312.

7 கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலா, 'காந்தளாயிற் கண்டுபிடிக்கப் பட்டுள்ள சோழ இலங்கேஸ்வரன் காலத்துக் கல்வெட்டு. பாவலர் துரையப்பாப் பிள்ளை நூற்றாண்டு விழா மலர்-1972 பகுதி II பக். 1-9

8 S.I.I. vol. IV No: 319. line 71.

9 Medieval Pandyas p. 72 foot- Note-6

10 Ibid p. 69.

★

தொழில் நுட்பம்

கல் தேர்ந்தெடுத்தல்

ச. குருசுவாமி, டி.எஸ்.ஏ.
ஸ்தபதி
தொல்பொருள் ஆய்வுத்துறை, மதுரை

வழிபாட்டுக்குரிய திருமேனிகளும், சிற்பங்களும், நீண்ட காலம் நிலைத்து நிற்க வேண்டியவைகளாகும். அதனால் இவை செய்வதற்குத் தேர்ந்தெடுக்கும் கல்லை நன்கு பரிசோதித்து எடுக்க வேண்டும். இதில் கற்களின் நிறம், ஓசை, வடிவம், உற்பத்தி முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டு அவற்றின் குணங்களையும் தன்மைகளையும் சோதித்துச் சிற்பங்களுக்கேற்ற கற்கள் என்றும் வழிபாட்டுத் திருமேனிகளுக்கு ஏற்ற சிலைகள் என்றும்; ஆலயம், திருமேனிகள் முதலியவற்றை நிர்மாணிப்பதற்கேற்ற சிலைகள் என்றும் சிற்பநூல்களில் பாகுபடுத்திக் கூறப்பட்டிருக்கிறது.

சிற்பியானவன் அச்சிலையின் குணதோசங்களை அறிந்து எல்லாவற்றிற்கும் பொருத்தமான குண நலன்களுடைய சிலைகளையே தேர்ந்தெடுத்து உபயோகித்தல் வேண்டும். மலைகள், கடற்கரை, தீர்த்தக்கரை, நதிக்கரை, பால்மரத்தடி, வனங்கள், தேவாலயங்களுக்கு அருகில், ஆகிய இடங்களில் உற்பத்தியாயிருக்கும் கற்களே சிற்ப வேலைகள் செய்ய மிகவும் ஏற்றதாகும்.

கற்களின் நிறம்

வெள்ளை, சிவப்பு, கருப்பு, மஞ்சள், பச்சை ஆகிய நிறமுள்ள கற்கள் என ஐந்து வகைப்படும்.

வெள்ளை

வெள்ளை நிறக்கற்கள் ஏழு விதமாகும். அவை பசும்பால் நிறம் போன்றும், சந்திரன் நிறம் போன்றும், சங்கு நிறம் போன்றும், முத்து நிறம் போன்றும், படிகத்தின் நிறம்

போன்றும், மல்லிகை நிறம் போன்றும், முல்லை நிறம் போன்றும், ஏழு வகைப்படும்.

சிவப்பு

சிவப்பு நிறக்கற்கள் ஏழு வகைப்படும். அவை செம்பருத்திப் பூ நிறம், முள்முருங்கைப்பூ நிறம், பட்டுப்பூச்சி நிறம், ஜாதிலிங்க நிறம், சிவந்த சந்திரன் நிறம் (பாலச்சந்திரன்), மாதுளம்பூ நிறம், வேங்கைப்பூ நிறம் ஆகும்.

கருப்பு

கருப்பு நிறக்கற்கள் நீலோத்பலபுஷ்பம், கருவண்டு, மயிலின் கழுத்து, எருமை மூக்கு, கருமையான தேள், கருப்பு பயறு, குறும் பயறு, கண் மை, எருமைக் கண் என்று ஒன்பது வகைப்படும்.

மஞ்சள்

மஞ்சள் நிறக்கற்கள் பொன்நிறம், செண்பகப் பூ நிறம். பூசணிப்பூ நிறம், குறிஞ்சிப்பூ நிறம், என நான்கு வகைப்படும்.

பச்சை

பச்சை நிறக்கற்கள் ஐந்து வகையாகக் கூறப்படுகிறது. அவை பேரிச்சை இலை, அருகம்புல், மூங்கில் குருத்து, சிலந்தியின் கால், கரும்பின் நுனி எனப் பச்சை நிறக் கற்கள் ஐந்து வகைப்படும்.

கற்களின் சாதி பேதங்கள்

சிவப்பு நிறக்கற்களைச் சத்திரிய சாதி என்றும், வெண்மை நிறக் கற்களைப் பிராமண சாதி என்றும், மஞ்சள் நிறக் கற்களை வைசியசாதி என்றும், கருப்பு நிறக் கற்களை சூத்ர சாதி என்றும் சிற்ப சாத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நான்கு வகைக் கற்களிலும் லிங்கம், பிரதிமை செய்து

STATE DEPARTMENT MADRAS

பிரதிட்டை செய்தால் பலனைத் தருவதுடன் தருமத்தையும், மோட்சத்தையும் அளிக்க வல்லது எனவும் சிற்ப நூல்கள் கூறுகின்றன.

கற்களில் ரேகைகள், புள்ளிகள், களங்கங்கள்

கயிறு முறுக்கியது போன்றும், சூரிய கிரணம் போன்றும் உருவமுடையது ரேகைகள் எனப்படும். நாவல் பழம், திராட்சைப் பழம், முலைக் கண் இவை போன்று வட்ட வடிவில் உள்ளவை புள்ளிகள் எனப்படும். கருப்பு இரும்பு, கருங்குளவி கருத்த மேகம், மயிலின் தோகை, இவை போன்ற நிறமுடையது களங்கம் எனப்படும். இந்த மூன்று வகை குறைபாடுகளுடைய கற்களை நீக்கித் தான் சிலைக்கான கற்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மேற்கூறிய குறைபாடுகள் உள்ள கற்களில் திருமேனிகள் செய்யும் பொழுது பிரதிமைகளின் அங்கங்கள் உடைந்து விட வாய்ப்புண்டு.

தோசமுள்ள கற்கள்

பொன்னும், வெண்கலமும், இரும்பும் கலந்தது போல் புள்ளிகளாக உள்ள கற்கள் தோசமுள்ள கற்களாகும். கருங்கல்லில் சிவப்புப் புள்ளிகளும், வெண்மை நிறக்கற்களில் கருப்புப் புள்ளிகளும் உள்ள கற்களில் லிங்கம், சிலைகள் செய்யக் கூடாது.

ஓசையால் கற்களின் குணமறிதல்

கற்களின் பலத்தையும், உறுதியையும் கண்டறிந்து ஆண் சிலை (கல்) பெண் சிலை, அலிசிலை, அழகுச்சிலை, விருத்தச் சிலை எனப்பெயரிடப்படுகிறது.

நீண்ட சதுரமாகவும், பத்து, பன்னிரண்டு கோணங்களாகவும் வடிவம் பெற்றிருப்பது ஆண் சிலை. மணி ஓசை போல் நன்கு சப்தம் உடையதாகவும், நீண்ட ஒலி உள்ளதாகவும், சதுரமாகவும், கோணமாகவும் இருக்கும் சிலை பெண் சிலை. முரித்தான ஓசைபோல் நாதமும் உலர்ந்து, பிளவுபட்டு ஓசையற்றும் நன்கு வட்டவடிவமாக இருப்பது அலிசிலை. வெண்கல ஓசை உள்ளதாக இருப்பது அழகுசிலையாகும். பல

வித ஓசை உள்ளதாகவும், மண் பாத்திரங்களில் தட்டினால் கேட்கும் நாதத்தைப் போன்று ஒலி உள்ளதும் விருத்த சிலை யாகும். இவ்வாறு ஓசையினால் கற்களின் குணமறிய வேண்டும் என 'சிலா சங்கரஹணம்' என்ற சிற்பநூல் விவரிக்கிறது.

கற்களில் சிரசு கொள்ளும் விதி

கிழக்கு மேற்காக இருக்கும் கல்லுக்குச் சிரசு கிழக்கேயும், தெற்கு வடக்காக கிடக்கும் கல்லுக்கு சிரசு வடக்கிலும் கொள்ள வேண்டும். ஆண் சிலையில் லிங்கத்தையும், புருஷ பிரதிமை களையும், பெண் சிலையில் ஆவுடையார் பீடத்தையும், பெண் வடிவப் பிரதிமைகளையும் நிர்மாணித்தல் வேண்டும். அலிசிலை யில் ஆதார பீடத்தைச் செய்தல் வேண்டும்.

யாகபூமி, மயானபூமி உப்புநீர் உள்ள இடம் ஆகிய இடங் களிலுள்ள கற்களைச் சிற்ப வேலைக்கு எடுக்கக் கூடாது. இத் துடன் காற்று, வெயில், நெருப்பு, இடி முதலியவைகளினால் கேடுற்ற கற்களும், மிகவும் கடினமாக உள்ள கற்களும், பல நிறங்கள் கலந்த கற்களும் சிற்ப வேலைகளுக்கு ஏற்றதல்ல. மீன், தவளை முதலிய ஜந்துக்களின் தோலைப்போல் உள்ளதும், புருகிப் போனதுமாகிய கற்களும் சிற்பவேலை களுக்கு ஏற்றதில்லை.

கற்களின் தலைபாகம்

மலையின் சிகரத்தில் உற்பத்தியான கல்லின்முகம் மேல் நோக்கியும் மலையின் பக்கங்களில் உற்பத்தியான கல்லின் முகம் மலையை நோக்கியுமிருக்கும். பூமியில் உற்பத்தியான கல்லின் முகம் பூமியை நோக்கி இருக்கும். நீரில் உற்பத்தி யான சிலையின் முகம் நதியை நோக்கியிருக்கும். இவற்றுள் பூமியில் உற்பத்தியான கல்லே சிறந்ததென்று கூறப் பட்டுள்ளது.

இவ்வாறு பற்பல முறையில் கற்களைப் பரிசோதித்துக் கொண்டு அதன் பிறகுதான் சிற்ப ஆயுதங்களினால் கற்களை உடைத்தெடுத்து ஆலயத்திற்கு வடக்கில் அமைந்துள்ள சிற்ப-சாலைக்கு கொண்டு வந்து பிரதிமைகளை வடிக்க வேண்டும் என "சிலாசங்கரஹணம்," என்ற சிற்ப நூல் கூறுகிறது.

பல நிறக் கற்கள் கிடைக்கும் இடங்கள்

மஞ்சள் நிறக் கற்கள்

வட இந்தியாவில் மிகுதியாகக் கிடைக்கின்றன.

பச்சை நிறக் கற்கள்

வடார்க்காடு மாவட்டம் திருவண்ணாமலை வட்டாரத்திலும், தென்னார்க்காடு மாவட்டம் திண்டிவனம் பகுதியிலும் செஞ்சி வட்டாரத்திலும், சேலம் மாவட்டத்திலும் கிடைக்கிறது. இதனைப் பூமிக்கு அடியிலிருந்து தோண்டி எடுக்கிறார்கள்.

கருப்பு நிறக் கற்கள்

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரத்திலும், மதுரை மாவட்டம் பழநி வட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டத்திலும், திருச்சி மாவட்டம் விஜய கோபாலபுரத்திலும், செங்கை மாவட்டம் வாலாஜாபாத் அருகில் உள்ள பட்டிமலைக் குப்பத்திலும், நாகலாபுரத்திலும், வடார்க்காடு மாவட்டம் செங்கம் வட்டாரத்திலும் (வைரக்குன்று), தர்மபுரி மாவட்டம் ஓசூர் வட்டாரத்திலும் சிற்ப வேலைகளுக்கேற்ற கருப்பு நிறக் கற்கள் கிடைக்கின்றன.

சிவப்பு நிறக் கற்கள்

சேலம் மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத்திலும் கிடைக்கின்றன.

வெள்ளை நிறக் கற்கள்

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கிடைக்கிறது. இக்கற்களைத் தீயிட்டுச் சுட்டு வீடு, தொழுவங்களுக்குத் தளமாகப் பதிக்கிறார்கள். தமிழகத்தில் இக்கற்களில் இருந்து விக்ரகங்கள் செய்வதில்லை. வட இந்தியாவில் குறிப்பாக பனாரஸ், தென்இந்தியாவில் ஐதராபாத் முதலிய இடங்களில் விக்ரகங்கள் செய்கிறார்கள். வெள்ளைக் கல்லினால் செய்த சிலையினை மதுரை அருள்மிகு மீனாட்சி ஆலயத்தில் காணலாம். அதிகமான சிலைகள் ஐதராபாத் சாலார் ஜங் அருங்காட்சியகத்தில் உள்ளன.

செப்பு உருவங்கள் மற்றும் காசுகள் சுத்தம் செய்தல், பாதுகாத்தல்

த. ஆனந்தன், பி.எஸ்சி.
உதவி இரசாயனர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, மதுரை

பொதுவாக உலோகங்கள் கரிமப் பொருள்களை விட நீண்ட ஆயுளை உடையவை என்றாலும் சிதைவிற்கு விதிவிலக்கல்ல. தாமிரமும் வெள்ளீயமும் கலந்த உலோகக் கலவையான வெண்கலமும்; தாமிரமும், துத்தநாகமும் கலந்த உலோகக் கலவையான பித்தளையும் அக்காலத்தில் மிகவும் புகழ்பெற்ற பொருட்களாகும். இவ்வுலோகக் கலவைகளே செப்புத் திருமேனிகள் மற்றும் காசுகள் செய்வதற்குப் பயன்படுத்தப் பட்டன. தாமிரமும் அதன் உலோகக் கலவைகளும் எந்தெந்த வகையில் பாதிக்கப்படுகின்றன, அவற்றை எந்த வழியில் சீர் செய்து பாதுகாக்கலாம் என்பதைக் காண்போம்.

தாமிரத்தில் ஏற்படும் பாதிப்புகள்

தாமிரமும் அதன் உலோகக் கலவைகளும் சுலபமாகக் கரம்பு பிடித்துக் கரையக்கூடியவை. குறிப்பாக அவை பூமியில் புதைந் திருக்கும் காலங்களில் வேகமாகப் பாதிக்கப்படுகின்றன. நிலத் தடி நீர் பலவகையான உப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள் ளது. அவை உலோகங்களுடன் கிரியை புரிந்து தாமிரத்தை உலோக உப்புக்களாக மாற்றுகின்றன. தாமிரத்தின் உப்புக் களான தாமிர ஆக்ஸைடுகள், தாமிர கார்பனேட்டுக்கள், தாமிர குளோரைடுகள், மற்றும் தாமிர சல்பேட்டுக்கள் எளிதில் கரையும் தன்மை உடையன. இவ்வுப்புக்களே தாமிரத்தின் மேல்பகுதியில் படிந்து அவற்றை வலிமையற்றதாகவும், எளிதில் உடையக் கூடியவையாகவும் மாற்றுகிறது. இத்தகைய கரம்பு பிடித்த செப்புத் திருமேனிகளையும், செப்புக்காசுகளையும் உட னடியாக ஆய்வுக்கூடத்தில் வேதியல் செயற்பாட்டின் மூலம் கரையும் உப்புக்களை நீக்கி அழிவிலிருந்து காத்துவிடலாம்,

உலோக நோய் (Bronze Disease)

குளோரைடு உப்புக்கள் கரம்பாகப் படிந்துள்ள தாமிரப் பொருட்களின் மீது மிகவும் அதிகமான கவனம் செலுத்த வேண்டியுள்ளது. தாமிரத்தில் படிந்துள்ள கரம்பில் உள்ள உப்புக்களில் குளோரைடு இருந்தால் அவை தொடர்ச்சியாக உலோகங்களை உப்புக்களாக மாற்றிவிடும். இவை பூமியில் இருந்து எடுக்கப்பட்ட நீண்ட நாட்களுக்குப் பிறகு கூட இவ்வாறு தாமிரத்தை அதன் உப்புக்களாக மாற்றும் சக்தி கொண்டவை. இவ்வாறு குளோரைடின் சேர்க்கையினால் தொடர்ச்சியான கரைவிற்கு உள்ளாகும் தாமிரமானது கடைசி நிலைவரை அழியக்கூடிய தன்மை உடையதாகிவிடுகிறது. இதை உலோக நோய் என்பர். இந்த நோயால் தாமிரத்தின் மேல் கரும்பச்சை நிறத்தில் ஈரத்தன்மையுள்ள பட்டைகள் தெரியும். தாமிரத்தின் தளத்தின் மேலுள்ள குளோரைடு இருப்பது கண்டுபிடிக்கப் பட்டால் அவை உடனடியாக ஆய்வகத்தின் சோதனைக்கு அனுப்பப்பட வேண்டும். அருங்காட்சியகங்களில் உள்ள தாமிர, வெண்கலப் பொருட்களில் இந்த உலோக நோய் உள்ளதா எனச் சோதனை செய்யப்படவேண்டியது அவசியமாகும். அதிகமான ஈரப்பசை இந்த நோயை அதிகப்படுத்துகிறது. இந்நோயால் மிகவும் பாதிக்கப்பட்டுக் கரைந்த நிலையில் உள்ள பொருட்களை மேலும் பாதிக்கப் படாது உலர்ந்த சூழ்நிலையில் வைக்க வேண்டும்.

உலர்ந்த சூழ்நிலையில் வைக்கும் முறை

சிலிக்கன் பளிங்குக் கற்கள் (silicagel) என்னும் ஒருவகையான கற்கள் உள்ளன. இவை சுற்றுப்புறச் சூழ்நிலையில் உள்ள ஈரத்தன்மையைக் கட்டுப்படுத்தி உலர்ந்த சூழ்நிலையைத்தரும். இந்த கற்களை வைப்பதற்கு ஏற்ற அமைப்புடன் சிறப்பான முறையில் செய்யப்பட்ட காட்சிப் பெட்டிகளில் வைக்கவேண்டும்.

நீலப்பச்சை படியாத பொருட்களைக் காக்கும் முறை

கரம்பு படியாத செப்புப்பொருட்கள் சுத்தமான உப்புத் தன்மையில்லாத சூழ்நிலையில் காட்சிக்கு வைக்கப்படுகின்றன.

எனவே அவை மேலும் கரையாது. ஆனால் மெல்லிய ஆக்ஸைடு ரேகைகள் அவற்றின்மேல் தோன்றும். ஆனால் இந்த ஆக்ஸைடுகள் பொருட்களுக்குச் சேதம் விளைவிப்பதில்லை. இவற்றின்மீது உலோக எண்ணெய்ச்சாயத்தைப் பாதுகாப்புப் பூச்சாகப் பூசுவதன்மூலம் களிம்பு பிடிப்பதிலிருந்து மீட்கலாம்.

செப்புக் காசுகள் அல்லது தாமிர உலோகக் கலவைகள் வேதிமுறை செயல்பாடுமூலம் சுத்தம் செய்யும் முறை.

தாமிரத்தின் மேல் படிந்துள்ள பச்சைப் படிமங்களை நீக்கும் முறை.

பச்சைப்படிமம் படிந்த தாமிரம் கீழே கூறப்பட்டுள்ள இருவகையான திரவங்களில் ஏதேனும் ஒன்றில் மூழ்கவைத்துப் பச்சை நிறம் நீங்கும்வரை சுத்தம் செய்யப்படுகிறது.

ரோக்கல்லே காரஉப்புத் திரவம் (Alkaline Rochelle salt Solution)

50 கிராம் எரிசோடா (commercial flake of causticsoda) சோடியம் ஹைடிராக்சைடு இரண்டையும் ஒரு லிட்டர் காய்ச்சி வடித்த நீரில் கரைக்க வேண்டும். இத்துடன் 150 கிராம் ரோக்கல்லே உப்பு எனப்படும் சோடியம் பொட்டாசியம் டார்ட்ரேட் கரைக்கவேண்டும்.

கார கிளிசரால் திரவம்

150 கிராம் எடையுள்ள எரிசோடாத் துணுக்குகளை ஒரு லிட்டர் காய்ச்சி வடித்த நீரில் கரைத்து, அத்துடன் 50 கிராம் கிளிசரால் சேர்க்கப்படுகிறது. இது இரண்டாம் வகைத் திரவம்.

மேலே கூறப்பட்டுள்ள திரவங்களில் ஏதேனும் ஒன்றில் செப்புப்பொருட்களை நான்கு மணிநேரம் ஊறவைக்கவேண்டும் பின் பொருட்களைத் திரவத்தில் இருந்து எடுத்துக் குழாய்நீரில் கழுவவேண்டும். கழுவும் பொழுது மெல்லிய நைலான் துடைப் பானைக்கொண்டு தேய்க்க வேண்டும். இச்செய்முறைக்குப் பின்பும் பச்சை நிறம் தங்கி இருந்தால் பொருளைப் புதிய

திரவத்தில் இன்னும் நான்கு மணிநேரம் ஊறவைக்க வேண்டும். தாமிரப் பொருளிலிருந்து பச்சைநிறம் அல்லது நீலப்பச்சை முழுவதும் நீங்கும்வரை இந்தச் செய்முறையைத் திரும்பத் திரும்பச் செய்யவேண்டும்.

பின்னர், அது நீர்த்த கந்தக அமிலத்தில் அரைமணி நேரம் ஊறவைக்கப்படுகிறது. பின்னர், பொருள் வெளியே எடுக்கப் பட்டுக் கடுமையாக தேய்க்கப்படுகிறது. தேய்ப்பதற்கு மெல்லிய துகிலைப் பயன்படுத்த வேண்டும். பின், குளிர்ந்த நீரில் கழுவி, உலர்த்தி, இரண்டு முறை பாதுகாப்பு திரவம்[1] பூசப்படுகின்றது.

அகழ்வாராய்ச்சியில் கிடைக்கும் பொருட்கள் அல்லாமல் மிகப்பழமையான காலந்தொட்டு ஆலயங்களில் இருந்து வரும் செப்புத் திருமேனிகளைச் சுத்தம் செய்யப் புளி, எலுமிச்சை போன்றவற்றை உபயோகப்படுத்துகின்றனர். புளி, எலுமிச்சை போன்றவற்றில் உள்ள சிட்ரிக் அமில சத்தினால் உருவங்கள், அப்போதைக்குப் பளபளப்பாகின்றன. ஆனால் இவை செம்பின் மேற்புறத்தை நிறம்மாற்றிக் கருமைபடிய வைத்துவிடும். எனவே இவ்வாறு புளி, எலுமிச்சை போன்றவற்றை உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

அடிக்குறிப்பு

1. 20 கிராம் மெழுகுத் துணுக்குகளை 10 கிராம் வெள்ளைப் பெட்ரோலில் கரைத்துத் தயாரிக்கப்படுவது.

★

பொதுவியல்

வழக்கொழிந்த இரு மரபுகள்

அ. இராசேந்திரன்
M.A., (தமிழ்); M.A. (வரலாறு); B.Ed.,
கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28

இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் நடை முறையில் இருந்து வந்த இரு மரபுகளைப் பற்றி இக்கட்டுரை ஆய்கிறது.

1. ஏதில் பிணம் தழூஉதல்

"பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில்பிணம் தழீஇ யற்று" (குறள் 913)

என்ற குறளின் விளக்கவுரையில் பரிமேலழகர் கூலிக்குப் பிணம் எடுப்பார் காணப்படாதோர் இடத்தின்கண் பிணத்தைத் தழுவியதற்கு ஒக்கும் என்று விளக்கம் தருகிறார். ஏனைய உரையாசிரியர்கள் இவ்வுவமையைக் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றனர். இருட்டறையின் உள்ளே கிடந்ததொரு வேற்றுப் பிணத்தைக் கூலிக்குத் தழுவியது போல என்று கூறியுள்ளனர். இந்த விளக்கத்தைப் படிக்கும்போது சில ஐயங்கள் தோன்றலாம்.

1 *கூலிக்குப் பிணம் தூக்குவோர் பிணத்தைத் தழுவக் காரணம் என்ன?*

2 *அதுவும் இருட்டறையின்கண் தழுவியதேன்?*

3 *இதற்காக ஏன் கூலி பெற்றார்கள்?*

பண்டுதொட்டுத் தமிழகத்தில் பிணம் எடுப்போர் கூலி பெற்றுப் பிணம் தழுவினரா? ஏன் தழுவினர்? இல்லாத ஒன்றை உரையாசிரியர்கள் புனைந்துரைத்தனரோ? என்ற கேள்விகள் தோன்றுகின்றன.

தமிழர், மணமாகா கன்னிப் பெண்கள் இறத்தலைப் பாவமாகக் கருதினர். கன்னிமை கழியாமல் இறத்தலைப் பெரும் பாவமாகக் கருதினர். இப்பாவத்தைப் போக்கத் தற்காலத்துச் சில சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. இச்சடங்குகளைச் செய்யாது புதைத்தால் அவர்கள் வீட்டில் பெண் சந்ததி அற்றுப் போகும் என்று கருதப்பட்டது.

தஞ்சை மாவட்டத்தில் ஒரு கன்னிப் பெண் இறந்து பட்டால் கீழ்க்கண்ட சடங்கைச் செய்து பிணத்தைப் புதைக்கிறார்கள். இதைக் கட்டைக் கல்யாணம் என்பர். பெண்ணின் பிணத்தை ஈமக்காட்டில் இறக்கியவுடன் ஏழு அடை சுட்டு எருக்கிலையில் படைத்து, அரிசி மாவால் ஒரு ஆண் மகனின் உருவம் செய்து பிணத்திற்கும் அந்த பொம்மைக்கும் திருமணம் செய்து வைக்கிறார்கள். அந்த மாவு பொம்மை மணமகனாகக் கருதப்படுகிறது. அந்த உருவத்திற்கு எருக்க மாலை சூட்டிப் பெண்ணின் பிணத்திற்கும், அந்த ஆண் உருவத்திற்கும் திருமணம் செய்து வைக்கிறார்கள்.

சேலம் மாவட்டத்தில் சில பகுதிகளில் இத்திருமண முறை மாறுபட்டுக் காணப்படுகிறது.

இறந்த கன்னிப் பெண்ணின் பிணம் வீட்டில் இருக்கும் போது, அப்பெண்ணின் முறைமாமனுக்கு எருக்க மாலை சூட்டிக் குதிரையில் உட்கார வைத்து முக்கிய வீதிகளின் வழியே ஊர்வலமாக அழைத்துச் செல்கிறார்கள். ஊர்வலத்தில் கூடைகளில் அரிசி, சந்தனம், மாலை போன்ற பொருட்களைச் சீராகக் கொண்டு செல்கிறார்கள். பிணம் இருக்கும் வீட்டிற்கு ஊர்வலம் வந்தவுடன், குதிரையிலிருந்து முறை மாமனைக் கீழே இறக்குகிறார்கள். அவன் தான் அணிந்திருக்கும் எருக்க மாலையைக் கன்னிப் பெண்ணின் பிணத்திற்கு அணிவிக்கிறான். இந்த வழக்கம் தற்போது அருகி விட்டது.

தமிழகத்தின் சில பகுதிகளில், வாழை மரத்தை நட்டு வைத்து மணமகனாக்கிக் கன்னிப்பெண்ணின் பிணத்திற்கு மணம் செய்விக்கிறார்கள். இவ்வாறு நடத்தப்படும் கன்னித் திருமணங்கள் ஒரு 'மரபின் எச்சம்' எனத் தோன்றுகிறது.

எகிப்து நாட்டில் இறந்த கன்னிப் பெண்ணின் உடலை மம்மியாகச் செய்வதற்கு முன் பைரேட்டுகள் என்போர் தழுவினர் என்பதும், இதனின்றும் மீட்சி பெற மூன்று நாட்கள் பிணத்தை வைத்திருந்து புதைத்தனர் என்றும் வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள்.

"மலபாரில் நம்பூதிரி சமுதாயத்தில் பெண்களைச் சிறு குழந்தையாக இருக்கும்போதே திருமணம் செய்து கொடுத்து விடுகிறார்கள். அவள் கன்னி கழியாமல் இறந்து பட்டால் பாவம் என்பதால் ஒரு புலையனிடம் பிணத்தைக் கொடுத்துக் கன்னி கழிக்கச் செய்கிறார்கள். இதற்காக அவர்கள் அவனுக்குக் கூலி கொடுத்து விடுகிறார்கள்" இக்கருத்தை 25 ஆண்டுகள் இந்தியாவில் வாழ்ந்து, Hindu customs, manners & ceremonies என்ற நூலை நமக்கு வழங்கிய துபாயி என்ற பிரஞ்சுப் பாதிரியார் குறித்துச் செல்கிறார்[1].

1874-இல் வெளிவந்த திருவாங்கூர் மக்கள் கணக்கெடுப்பு அறிக்கையிலும் இக்கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

1875-இல் வெளிவந்த கொச்சி மக்கள் கணக்கெடுப்பு அறிக்கையிலும் இக்கருத்து குறிக்கப்பட்டுள்ளது.[2]

ஆக எகிப்து, தென்தமிழ் நாடு பகுதிகளில் நிலைபெற்று இருந்த கன்னி கழிக்கும் சடங்கைத்தான் உரையாசிரியர்கள் கூறியுள்ளார்கள் போலும்.

2. அழிஞ்சி மனை ஏறுதல்

கிராமப் புறங்களில் 'அழிஞ்சி மனை ஏறாதே, அவிசாரியா போகாதே' என்ற பழமொழி வழக்கில் உள்ளது. 'அழிஞ்சி என்ற சொல்லுக்குக் 'கெட்டுப்போய்' என்று தற்காலத்தில் பொருள் கூறலாம். ஆனால் இப்பொருள் தவறு என்பதை மற்றொரு மரபு நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது.

சேலம் மாவட்டத்தில் இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன் ஒரு வழக்கம் நிலைபெற்று இருந்தது. அதாவது மணமாகாத ஒரு கன்னிப்பெண் பிற ஆடவனோடு தொடர்பு கொண்டு

களவியல் வாழ்க்கை நடத்திவருகிறாள். அது பெற்றோர்களுக்குத் தெரிந்ததால் அந்த செய்தி அம்பல், அலராகி ஊர் முழுதும் பரவுவதற்கு முன், அந்தப் பெண்ணுக்கும் வேறொரு ஆடவனுக்கும் மணம் பேசித் திருமணம் செய்து வைக்கிறார்கள்.

அவ்வாறு திருமணம் செய்யும் போது சில சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் சடங்கை 'அழிஞ்சி மனை ஏறுதல்' என்கிறார்கள். இந்தச் சடங்கு செய்யாமல் பெண்ணை வேறு ஒரு ஆடவனுக்குத் திருமணம் செய்து வைத்தால்; மனையில் ஏற்றினால்; பாவம் என நம்பினர்!

மணப் பெண்ணை விடியலில் குளிப்பாட்டி, அந்தப் பெண்ணின் தாய் அவளைத் தனியான ஒரு அறைக்கு அழைத்துச் சென்று அழிஞ்சித் தழையை அப்பெண்ணின் அடி வயிற்றில் மறைத்துக் கட்டி மணமேடைக்கு அனுப்பி வைக்கிறாள்.

அழிஞ்சி என்பது இந்திய இலங்கைப் பகுதிகளில் மட்டுமே விளையும் ஒரு வகை மருத்துவக் குணமுடைய மரம். இதை அலாஞ்சியம் சால்விபோலியம் எனத் தாவர நூலார் குறிக்கிறார்கள்.

சித்த மருத்துவத்தில் இத்தழையைப் பற்றிய ஒரு சிறப்புச் செய்தி காணப்படுகிறது. இவ்விலையை அரைத்து அடிவயிற்றில் கட்டினால், வயிற்றில் உள்ள செத்த பிள்ளை கூடக் கீழே விழும், கரு கலையும் என்று கூறப்படுகிறது. மாற்றான் பிள்ளை வயிற்றில் இருந்தாலும் அழியட்டும் என்ற நல்லெண்ணத்தில் தான் இச்சடங்கைச் செய்தார்களோ எனத் தோன்றுகிறது.

*

அடிக்குறிப்புகள்

1. Abble J.A. Duboies, Hindu customs manners and ceremonies-p. 165.
2. Census Report of Native Cochin - page. 35

மன்று - ஒரு வரலாற்றுப் பார்வை

சொ. சாந்தலிங்கம், எம்.ஏ.,
தொல்பொருள் அலுவலர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, தஞ்சாவூர்.

'மன்று' சொற் பொருள்

மன்று என்பது மன்றம், அம்பலம், திடல், சதுக்கம், பொதியில் என்று பல பொருள்களில் வழங்கப்பட்டு வருகிறது. மன்று என்பது நீதிமன்றம், ஊர்ச்சபை என்ற பொருள்களிலும் பிற்காலத்தில் வழங்கியிருக்கிறது. மன்று என்பதற்குக் கால் நடைகளின் பட்டி என்றும் கூறப்படும். இச்சொல் இன்றும் தருமபுரி மாவட்டத்தில் 'மண்டு' என்ற சொல்லாக மருவி வழங்கி வருகிறது. மன்று என்னும் சொல் சங்க காலந்தொட்டு வழங்கிவந்தமையும், இடைக்காலத்திலும், இன்றும் மக்களின் சமூக வாழ்க்கையில் எத்தகைய பங்கினைப் பெற்றுள்ளது என்பதையும் சுருக்கமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சங்க காலத்தில் மன்றம்

சங்ககாலத்தில் மக்கள் வாழ்ந்த ஒவ்வொரு ஊரிலும் மன்றம் என்ற ஒரு பொது இடம் இருந்தது என்பதற்கு இலக்கியங்கள் ஆதாரங்களைத் தருகின்றன. இத்தகைய மன்றங்களில் வேங்கை, வேம்பு போன்ற மரங்கள் நிறைந்திருந்தன.[1] சுரை, பீர்க்கு போன்ற கொடிகள் படர்ந்தும் புதர் மண்டியும் சில மன்றங்கள் இருந்தன.[2] இத்தகு மன்றங்களில் மக்களில் பலதரப்பட்ட வகையினரும் கூடுவார்கள். சிறுவர்கள் ஓடி விளையாடக்கூடிய இடமும் இதுவே.[3] வீரர்கள் போர் இல்லாத காலங்களில் அமர்ந்தும் படுத்தும் ஓய்வு கொள்ளும் இடம் இது[4]. வெளியூரிலிருந்து புரவலர்களைத் தேடிவரும் இரவலர்கள் இத்தகு மன்றங்களிலேயே தங்கியிருந்தனர்[5]. இம்மன்றங்களில்

இருந்த மரங்களில் கட்டப்பட்டிருந்த கிணைப்பறையையும், முரசையும் மக்கள் முழக்கினர்.[6] இசைவாணர்கள் மன்றங்களில் அமர்ந்து தங்கள் யாழை இசைத்துப் பாடினர்.[7]

மன்றின் சிறப்பு

ஓர் ஊரின் வளமும் சிறப்பும் அவ்வூர் மன்றத்தின் பொலிவைக் கொண்டு மதிப்பிடக் கூடியதாக இருந்தது. பகைவர்கள் அடிக்கடிப் புகுந்து நிரைகளைக் கவர்ந்து சென்றதால் சில ஊர்களில் மக்கள் குடிபெயர்ந்து மன்றம் பொலிவிழந்தது.[8] போர்களும் மன்றங்களிலேயே நிகழ்ந்தது. எனவே மன்றம் இரத்தக்காடாயிற்று.[9] அத்தகு மன்றங்கள் பாழ்பட்டன. பகை நாட்டவரின் மன்றினை அழித்துப் பாழ் செய்வதையே சிலர் குறிக்கோளாகக் கொண்டனர்.[10]

இம்மன்றங்களில் குரவைக்கூத்து நிகழ்தலும் உண்டு.[11] போரில் கணவரை இழந்த மகளிர் தீப்பாய்ந்து மாய்ந்ததும் இம்மன்றத்தின் கண்ணே.[12] தன் காதல் தலைவியைப் பெறாத தலைமகன் தன் காதல் திறத்தை ஊரார் அறியும் பொருட்டு மன்றின் கண்ணேயே மடல் ஏறுவான்.[13] முல்லை நிலமக்கள் தங்களுக்கே உரிய ஏறுதழுவுதல் என்னும் வீர விளையாட்டை மன்றிலேயே நிகழ்த்துவர்.[14] அதைக்கண்டு தங்கள் மனங்கவர் காதலரைத் தெரிவு செய்ய இளம்பெண்கள் மன்றில் கூடுவர்.[15] தங்கள் காதல் பற்றிய அலர் மன்றில் பரவுவதை இழிவெனக் காதலர் கருதினர்.[16]. இம்மன்றத்தின் எழிலைப் பேணுவதும் தூய்மைப்படுத்துவதும் முறைப்படுத்தப் பட்டிருந்தது.[17]

சிலம்பு காட்டும் மன்றம்

சங்ககாலத்தில் இருந்தது போன்றே தொடர்ந்து மன்றம் மக்கள் வாழ்க்கையில் பெரும் பங்கு வகித்தது என்பதனைச் சிலம்பும் மேகலையும் நமக்குக் காட்டுகின்றன. இத்தகு மன்றங்களில் பல்வித மரங்களின் பூந்தாதுகள் உதிர்வதால் எருவாகி மன்றம் சிறப்படைந்திருந்தது என்று சிலம்பு கூறும்.[18] புகார் நகரத்தில் வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூதச்சதுக்கம், பாவைமன்றம் என்று ஐவகை மன்றங்கள் இருந்தன.[19] ஒவ்வொரு மன்றமும் ஒவ்வொரு

TAMIL NADU STATE DEPARTMENT
147
LIBRARY
MADRAS-

விதச்சிறப்புக்குக் காரணமாயிருந்தன. எயினர் மன்றங்களில் முள்வேலியிட்டு அடைத்துத் தாங்கள் ஆறலைக்களவாகனாய்க் கவர்ந்துவந்த பொருட்களைப் பகிர்வர்.[20] மதுரை நகரமெங்கும் சுற்றிவந்த கோவலன் பல்வேறு மன்றங்களையும் சுற்றி வந்தான்.[21] திருத்தங்கல் என்னும் ஊரில் தங்கிய பராசரன் என்னும் அந்தணன் பசுமையான மரங்களடர்ந்த மன்றிலேயே தங்கினான்[22] என்று பல செய்திகளில் மன்று பற்றிய குறிப்பு களைச் சிலம்பு காட்டுகிறது.

இந்திரவிழாக் காலத்தில் மன்றங்களில் மக்கள் புதுமணல் பரப்பினர் என்பதை மணிமேகலை காட்டும்.[23] சக்கரவாளக் கோட்டம் என்னும் சுடுகாட்டுக் கோட்டத்தில் ஐவகை மன்றங் கள் இருந்தன.[24] காயசண்டிகை, அவள் கணவன் காஞ்சனன், மணிமேகலை, உதயகுமாரன் ஆகியோர் மன்றங்களிலேயே அலைந்து ஒருவரையொருவர் தேடித்திரிந்தனர். மன்றங்களில் பாவைகள் இருந்தன என்பதற்கும் இலக்கியங்கள் சான்று காட்டி நிற்கின்றன. சிலம்பின் பாவை மன்றமும், மேகலையின் கந்திற்பாவையும் இத்தகையனவே. அகநானூற்றிலும்[25] மன்றில் பாவை இருந்ததாகச் செய்தி உண்டு.

பிற்கால பக்தி இலக்கியங்களில் மன்று என்பது அம்பலம் என்ற பொருளில் இறைவன் ஆடும் இடம் என்றே வழங்குகிறது. மன்றுளீர், மன்றுள் ஆடிய செய்யதாள், மன்றில் நிறைந்து நடமாட வல்லார், மன்றுளே திருக்கூத்தாடி என்று சிவபெருமான் பலபடப் பேசப்படுவதைப் பெரியபுராணத்தைக் கொண்டு[26] அறியலாம்.

கல்வெட்டுக்களில் மன்று

கல்வெட்டுக்களில் பல இடங்களில் பயின்று வரும் 'மன்று' என்னும் சொல் நீதிமன்றம் (court) என்னும் பொருளில் வழங் கப்படுகிறது.[27] கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டி யரின் மானூர்க் கல்வெட்டு கிராம சபைகள் செயல்பட்டவிதம் பற்றிப் பேசும் முதல் கல்வெட்டாகும். இக்கல்வெட்டில் ஊர்ச் சபைகளில் கொண்டுவரப்படும் வழக்குகள் விவாதம் செய்வதற்கு பங்கு பெறுவோர்க்கு உரிய விதிமுறைகள் வரையறுத்துக் கூறப் பட்டுள்ளது. இவ்வாறு விவாதம் செய்வதற்கு "மன்றாடுதல்"

என்னும் சொல் வழங்கப்படுகிறது. எனவே இச்சொல் நீதி மன்றம், விவாதம் சம்பந்தப்பட்ட சொல் என்பது வெளிப்படை. இதனை அடிப்படையாகக்கொண்டே சேக்கிழார் பெருமான், சுந்தரரைத் தடுத்தாட்கொள்ள முதிய வேதியனாக வந்த இறைவனையே "பழைய மன்றாடி போலுமிவன்"[29] என்று பாடுகிறார். இவ்வாறு கிராமசபை கூடி வழக்குகளைத் தீர்த்த அந்த இடத்திற்கு அந்நாட்களில் மன்றம் என்னும் பெயர் வெளிப்படையாக வழங்கப்படவில்லை. மானூர்க் கல்வெட்டிலும், உத்திரமேரூர்க் கல்வெட்டிலும், கோவர்த்தன மண்டபம் என்றே கூறப்பட்டுள்ளது.

கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டுச் சோழ நாட்டுக் கல்வெட்டுக்கள் சிலவற்றில் நிலத்திற்கு எல்லை கூறும்பொழுது 'மன்றுக்கு மேற்கும்', 'மன்றுக்கு வடக்கும்' என்று கூறப்படுகிறது.[30] எனவே இக்காலகட்டத்திலும் மன்று என்பது ஊரில் ஒரு மையமான இடமாகக் கருதப்பட்டிருக்கிறது என்று கொள்ளலாம். மன்றுகளில் கூடித்தீர்க்கும் வழக்குகளில் தண்டமாக விதிக்கும் பொருளைத் தருமாசனத்தின் முன்வைப்பது மரபு. இப்பொருளை 'மன்றுபாடு' என்று கல்வெட்டு கூறும்.[31]

கி.பி. 10-12ஆம் நூற்றாண்டுகளில் காணப்படும் பல தமிழ்க் கல்வெட்டுகளில் 'மன்றாடி' என்ற சொல் ஒரு பிரிவு மக்களின் சாதிப் பெயராக வழங்கப்பட்டு வந்திருக்கிறது. மன்றாடி குலத்தைச் சேர்ந்தவர்கள் கால்நடை மேய்க்கும் இடையர்களாகக் கருதப்பட்டுள்ளனர். பல கோயில்களுக்கும் விளக்கு எரிப்பதற்குத் தானமாக வழங்கப்பட்ட மாடுகள், ஆடுகள் முதலியன இத்தகைய மன்றாடிகளிடத்திலேயே (இடையர்கள்) ஒப்படைக்கப்பட்டு நெய் பெறப்பட்டுள்ளன. இவர்களையே 'கோன்' (கோனார்) என்றும் வழங்கப்பட்டுள்ளது. "மன்றாடிகளில் தெலுங்கராயக்கோன் கண்ணாடி அப்பனும், சாத்தக்கோன் மகன் கோண்டிக்கோனும், பூமக்கோன் மகன் வடுகக்கோனும், போத்தக்கோன் மலையனும் புடொலனும் சந்திராதித்தவரை ஆண்டு ஒன்றுக்குத் தொண்ணூற்று ஆறு நாழி நெய்...[32] என்று கல்வெட்டு குறிப்பதைக் கொண்டு அறியலாம்.

'மண்டு' தருமபுரியின் வழக்கும் வகைப்பாடும்

வரலாற்று ஆய்வாளர்களுக்கும் மானிடவியல் பண்பாட்டியல் ஆய்வாளர்களுக்கும் பல புதிய புதிய செய்திகளைத் தருவது தருமபுரி மாவட்டம். சங்க இலக்கியங்கள் காட்டும் சமூக வாழ்க்கையையும் நிலவியல் அமைப்பையும் இன்றும் மாறாத தன்மையினைத் தன்னகத்தே கொண்டுள்ளது இப்பகுதி. இங்கு மன்று என்னும் சொல் அதே பொருளில் ஆனால் 'மண்டு' என்று மருவி வழங்குகிறது. அநேகமாக எல்லா ஊர்களிலும் மண்டு என்பது உண்டு. ஊரின் மையப்பகுதியிலோ ஒதுக்குப் புறத்திலோ உள்ள ஒரு பொதுவான திடலை மண்டு என்று இம் மக்கள் வழங்குகின்றனர். சங்க இலக்கியங்கள் காட்டும் மன்றம் போல பலவித மரங்கள் நிறைந்தும், பல்லிசை முழக்கமும், இடையறாத மக்கள் கூட்டமும் இப்போது இங்கு இல்லை என்றாலும் பழமைப் பண்பாட்டு எச்சங்கள் இன்றும் இம்மண்டுகளில் அவ்வப்போது காணப்படுகின்றன. சில மண்டுகளில் கி.பி. 7-8-நூற்றாண்டைச் சேர்ந்த பல சுடுமண்பொம்மைகளும், புதியகற்காலக் கருவிகளும் கிடைத்துள்ளன. 'நாட்டு நியாயம்' என்னும் சிறிய பூசல்களின் தீர்வும் நிகழ்கின்றன. பெரும்பாலும் ஊர்ப்பெயர்களாலேயே மண்டுகள் அழைக்கப் படுகின்றன. இங்கு நிகழும் விழாக்களும் பொன்னியம்மன் மண்டு, செல்லியம்மன் மண்டு என்று தாய்த்தெய்வ விழாக்களாகவே உள்ளன. 5 முதல் 18 வரையான பல சிற்றூர்களும் சேர்ந்து ஒரு பொதுவான, மண்டில் விழாச் செய்கின்றனர். 5 அல்லது 7 ஆண்டுகட்கு ஒரு முறை விழா நிகழும். பல மண்டுகளில் தாய்த் தெய்வங்கட்கான சிறுசிறு கோயில்களும் காணப்படுகின்றன. ஒவ்வொரு மண்டிலும் ஊஞ்சல் காணப்படுகிறது. ஊஞ்சல் ஆடி விழுந்து இறந்த விளையாட்டு வீரர்களுக்கும் கூட நடுகல் எடுக்கப்பட்டு மன்றிலே வைக்கப் பட்டுள்ளதையும் காணலாம். இம்மண்டு விழாவினை நன்கு நுணுகி ஆராய்ந்தால் பல அரிய பண்பாட்டுச் செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. அந்தவகையில் லளிகம் என்ற ஊரின் மண்டு விழாபற்றிய செய்தியைமட்டும் கீழே தருகிறேன்.

லளிகம் கிராமத்தைத் தாய்க்கிராமமாகக் கொண்ட 12 சிறு கிராமங்கள் சேர்ந்து இம்மண்டு விழாவை நிகழ்த்துவர். இப்பன்னிரண்டு கிராமங்களுக்கும் சேர்த்து 5 தர்மகர்த்தாக்கள்

உண்டு. தாய்க் கிராமமான லளிகத்தில் நாட்டுக்கவுண்டர் இருக்கிறார். இவரே இம்மண்டு விழாவின் தலைமையாளர். ஒவ்வொரு ஊரிலும் ஊர்க்கவுண்டரும், மந்திரிக் கவுண்டரும் கோல்க்காரன் என்ற ஏவலாளனும் உண்டு. நாட்டுக்கவுண்டர் கோல்க்காரனை அழைத்து தர்மகர்த்தாக்கள் அனைவர்க்கும் செய்தி அனுப்பி மண்டு செய்வது பற்றிய முடிவு எடுப்பதற்கு வரவழைப்பார். தர்மகர்த்தாக்களும், ஊர்க்கவுண்டர்களும் லளிகம் மண்டில் கூடிப் பேசி முடிவு எடுப்பார்கள். இம்முடிவை 12 கிராமங்களுக்கும் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு பறையன் என்னும் அரிசன ஏவலாள் ஒருவரிடம் ஒப்படைக்கப்படும். அவர் துடும்பு என்னும் ஒருவிதப் பறையை வைக்கோல் புரியால் சப்தம் வராமல் அடித்து ஊர் மக்களிடம் செய்தியைத் தெரிவிப்பார். இவ்வாறு தெரிவிக்கும் போது நள்ளிரவில் நிர்வாணமாகச் சென்று தெரிவிக்க வேண்டும். அந்நேரத்தில் அவரை எதிரில் யாரும் பார்த்து விட்டால் பார்த்தவர் உடனே இறந்து விடுவார் என்ற நம்பிக்கை நிலவுகிறது. 'துடும்பு சாட்டுதல்' என்ற சொல்லைச் சொல்வதற்கே இந்தச் சமூகத்தினர் அஞ்சுகின்றனர். இரண்டு முறை நான் தொடர்ந்து சொல்லி விட்டதால் அந்நிகழ்ச்சியோடு நெருங்கிய தொடர்பு கொண்ட ஒருவர் திடீரென்று அருள் வரப்பெற்று ஆவேசமாகத் தரையில் வீழ்ந்து ஆடி அடங்கினார். மீண்டும் அச்சொல்லைச் சொல்ல வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

இவ்வாறு அறிவிக்கப்படும் விழா மூன்று நாட்கள் நடக்கும். பெரும்பாலும் அறுவடைக்குப் பிறகு வைகாசி, ஆடி மாதங்களில் நிகழும். செவ்வாய்க்கிழமை சக்தி அழைப்பு, புதன்கிழமை தலை கூடுதல் மாவிளக்கு எடுத்தல், வியாழன் அன்று கூளியாட்டம், மஞ்சள் நீராடல் என்று நிகழ்ச்சிகள் அமையும். விழாவிற்கு ஆகும் செலவுகளைத் தர்மகர்த்தாக்களே ஏற்றுக் கொள்வர். அவர்களுக்கு மானிய நிலங்கள் உண்டு. வேறு சில ஊர்களில் மக்களிடத்தில் வரி வசூல் செய்தும் நடத்துவ துண்டு. ஊர் மண்டின் மையத்தில் பாக்கு மரம் ஒன்று நட்டு அதிலிருந்து நாலாபுறங்களிலும் வேப்பிலைத் தோரணங்கள் கட்டப்படும். இத்தோரணங்களே மண்டின் எல்லைகளாகக் கருதப்படும். இவ்வெல்லைக்குள் மாத விலக்கான பெண்கள் விழா முடியும் வரை வரக்கூடாது என்ற தடை உண்டு.

சக்தி அழைப்பு

மூன்றுநாள் மண்டு விழாவின் முதல்நாள் நிகழ்ச்சி இது. இதில் கரகம் எடுக்கும் நிகழ்ச்சி நடைபெறும். கரகத்தைக் காட்டிலிருந்து அருள்கொண்டு எடுத்து வருதலே சக்தி அழைத்தல் எனப்பெயர் பெறும். கரகம் ஆண்கரகம், பெண் கரகம் என இரண்டுவிதம் கொண்டது. ஆண்கரகம் எடுப்பவர் பறையர் வகுப்பைச் சேர்ந்தவர். பெண்கரகம் எடுப்பவர் வெள்ளாளக் கவுண்டர். ஆண் கரகம் மண்கலசத்தால் செய்து அதில் வேப்பிலை செருகி வெள்ளியாலான குடைகள் வைத்து அலங்கரிக்கப்பட்டுக் கொண்டுவரப்படும். பெண்கரகம் உலோகச் செப்பு ஒன்றில் வேப்பிலை அலங்கரிப்புடன் கொண்டு வரப்படும். ஆண்கரகம் எடுக்கும் பறையன் 15 நாட்கள் பெண்கரகம் எடுக்கும் வெள்ளாளர் வீட்டிலேயே சாப்பிடவேண்டும். தம் இனத்தவரின் தெருக்களில் அந்நாட் களில் போகக்கூடாது என்ற தடையும் உண்டு. ஆண்கரகத்தை ஒவ்வொரு முறையும் குயவர் புதிதாகச் செய்து கொடுப்பர். அதற்கு அவர்களுக்கு நெல் வழங்கப்படும். சக்தி அழைப்புக் கெனக் கரகத்தை எடுத்துக்கொண்டு 'அம்மாவனம்' என்னும் காட்டிற்கு எல்லோரும் செல்வர். அப்போது ஒரு குதிரையை மாலைகள் போட்டு நன்கு அலங்கரித்துக் கொண்டு செல்வர். நாட்டுக்கவுண்டரும் பிற தர்மகர்த்தாக்களும் ஒவ்வொருவித மான மரியாதையுடன் வருவர். நாட்டுக் கவுண்டர் சிவப்புக் கம்பளம் போர்த்தி உருமாலை கட்டி வருவார். இன்னொருவர். செருப்பு அணிந்து வருவார் மற்றொருவர் குடைபிடித்துக் வருவார். வேறொருவர் விசிறிமடிப்பு வஸ்திரம் போட்டு வருவார்.

இவ்வாறு இவர்கள் அம்மாவனம் சென்றடையும்போது அங்கு ஆஞ்சநேயர் கோயில் அய்யர் அக்னிகுண்டம் தயார் செய்து வைத்திருப்பார். அதில் இருளப்பூசாரிதான் முதலில் இறங்க வேண்டும். இவ்விருளன் தேன் எடுத்தல், இருளங் கிழங்கு அகழ்தல் முதலிய தொழில்களும் விவசாயமும் செய் கிறான். இருளப்பூசாரி அதிகாலையிலேயே மலைக்குச் சென்று ஒரு குகையில் ஒளிந்துகொள்வான். சக்தி அழைப்புக்குச் சென்ற மக்கள் ஒருமித்த குரலில் கொக்கரித்து அவனை அழைப்பர். அப்போது அவன் அம்மன் அருள்பெற்றுக் கையில்

பிரம்புடன் ஓடிவந்து குண்டத்தில் இறங்கிக் குதிரையின் பிடரியைப் பிடித்துக்கொண்டு வருவான். அப்போது ஆட்டுக்கிடாய், எலுமிச்சம்பழம் வெட்டிப் பலிகொடுப்பர். இப்படிப் பலி கொடுப்பதற்கென இம்மண்டைச் சேர்ந்த கிராமத்துக் குறும்பர்கள் 7 ஆடுகள் தானமாகக் கொடுக்கவேண்டும். இவர்கள் முற்காலத்தில் கால்நடைகள் மிகுதியாக வைத்திருந்தனர். இப்போது விவசாயமே தொழில். பலிகொடுத்தவுடன் கரகத்தை எடுத்துக்கொண்டு ஊர்திரும்புவர். சக்தி அழைக்கும் முதல்நாள் நிகழ்ச்சி இப்படியாக முடியும்.

தலைகூடுதலும் விளக்கு எடுப்பும்

இது இரண்டாம் நாள் நிகழ்ச்சியாகும். முதல் நாள் கொண்டுவரப்பட்ட ஆண், பெண் கரகங்கள் தனித்தனியே வெவ்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருக்கும். முதலில் மேளதாளத்துடன் சென்று ஆண் கரகத்தை அழைத்துக்கொண்டு மண்டுக்கு வருவர். பின் பெண்கரகத்தை அழைத்துக்கொண்டு வருவர். இரண்டும் ஒன்றையொன்று சந்திக்கும்போது இரண்டு பூசாரிகளும் அருள்கொண்டு ஆவேசமாக ஆடுவர். அவர்களைப் பிறர் பிடித்துக்கொள்ளாவிட்டால் இருவரும் மோதிக்கொள்ளும் நிலையும் ஏற்படும். பின்பு இரண்டு கரகங்களும் ஒன்றையொன்று நெருங்கிச் சந்திக்கும். இதற்குத் தான் 'தலை கூடுதல்' என்றுபெயர். முற்பகலிலேயே இந்நிகழ்ச்சி முடிவடையும். இது முடிந்தபின் ஊர்ப்பெண்கள் மாவிளக்கு எடுத்துக்கொண்டு ஊரின் ஒருபுறத்திலுள்ள குறிஞ்சி மாரியம்மன் கோயிலுக்குச் சென்று வழிபட்டுப் பொங்கல் வைப்பர். இம்மாரியம்மன் கோயிலில் சிற்ப உருவம் ஏதும் இல்லை. கூர்மையான கற்களையும், புதிய கற்காலக் கைக்கோடாரிகளுமே மஞ்சள் பூசப்பெற்று அம்மனாகக் கருதி வழிபடப் படுகின்றன. பொங்கல் வைப்பதுடன் இரண்டாம் நாள் நிகழ்ச்சி முடிவடையும்.

கூளியாட்டம்

இது மூன்றாம் நாள் நிகழ்ச்சி. கூளி என்பது கோயிலுக்கென்று நேர்ந்துவிடப்படும் எருதினைக் குறிக்கும் சொல். ஒவ்வொரு ஊருக்கும் ஒரு கூளி உண்டு. கால்நடைகளுக்கு நோய்வராமல் தடுப்பதற்காகவும், கால்நடைச் செல்வம் பெருகு

வதற்காகவும் ஓர் எருதை ஊரில் யாரேனும் ஒருவர் கோயிலுக்கு விட்டுவிடுவார். ஒரு நல்ல நாளில் அதைக் கோயிலுக்கு அலங்கரித்து அழைத்து வந்து சங்கு, சக்கரச் சூடு போட்டு விடு வார்கள். அது யார் நிலத்தில் மேய்ந்தாலும் அடித்து விரட்டு வதில்லை. இக்கூளிகள் இறக்கும் காலத்தில் அதன் சவஅடக்கம் சிறப்பாக நடைபெறும். அதை உண்பதோ தோல் உரிப்பதோ இன்றி அப்படியே மேளதாளத்துடன் சென்று புதைத்து மேலே மேடை கட்டிவிடுவார்கள்.

இக்கூளியின் கழுத்தில் இருபுறமும் நீண்ட கயிற்றைக் கட்டிக் கொண்டு பலரும் அவரவர் பக்கம் இழுத்து விளையாடுவது தான் கூளியாட்டம் என்பது. மேளதாளம் அடித்து அதற்கு இசைய ஆடவிடுவதும் உண்டு. முதலில் எல்லாக் கூளிகளும் மண்டிற்குக் கொண்டு வரப்பட்டுத் தீர்த்தம் தெளிக்கப்பட்டுச் சிறிது நேரம் மண்டில் ஆடிய பிறகு அவரவர் ஊருக்கு அழைத்துச் சென்று விடுவர். தாய்க் கிராமக் கூளிக்குத்தான் முதலில் தீர்த்தம் தெளிப்பது என்ற வழக்கமும் உண்டு. கூளியாட்டத்தின்போது இறந்து பட்ட வீரர்களுக்கு நடுகல் எடுக்கப்பட்டதும் பிற்காலத்தில் உண்டு. மண்டுகளில் பலமுறை ஆடிய கூளிக்குப் பெருஞ் சிறப்பு உண்டு. ஆண் களில் துணிச்சல்காரர்களை 'இவன் மண்டில் ஆடிய கூளி' என்று பெருமையாகச் சொல்வதும் வழக்கம்.

கூளியாட்டம் முடிந்தபின்னர் மஞ்சள் நீராடுதல் நிகழும். ஆண் கரகம், பெண் கரகம் இரண்டையும் எடுத்துக்கொண்டு கிணற்றிற்குச் சென்று நீராடுவர். நீராடுவதற்கு முன்பாக ஆண்கள் ஒருவர்மீது ஒருவர் மஞ்சள் நீர் தெளித்துக் கொள்வர். நீராடும்போது ஆண் கரகமான மட்கலசத்தை நீரோடு விட்டுவிட்டு அதில் உள்ள வெள்ளிக் குடையை மட்டும் எடுத்துக்கொண்டு வந்து பத்திரமாக அப்பூசாரி வீட்டிலேயே வைத்துக்கொள்வார். அடுத்த முறையும் அதையே பயன் படுத்துவர். பெண்கரகமான உலோகச் செப்பையும் வீட்டிற்கு அப்பூசாரி எடுத்துச் சென்று விடுவார். மஞ்சள் நீராடி கரகத்தை நீரில் விடுவதுடன் விழா நிறைவடையும்.

முடிவுரை

தருமபுரி மாவட்டத்தில் காணப்படும் இந்த மண்டு வழிபாடு தாய்த் தெய்வ வழிபாட்டுடன் முற்றிலும் தொடர்பு கொண்டது. சிலப்பதிகாரம் வேட்டுவ வரியில் கொற்றவை கோயிலை முன்றில் என்று கூறுகிறது. பிற்காலத்தில் தேவியின் கோயில்களில் முற்றம் இருப்பதைச் சிறப்பித்துக் கல்வெட்டுகள் கூறுவது பழைய மரபின் தொடர்ச்சியே. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டு ஒன்றில் " பிடாரி பொது வகை ஊருடையாள் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும், இவ்வூர் காடுகாள் கோயிலும் திருமுற்றமும், இவ்வூர் துர்க்கை யார் கோயிலும் திருமுற்றமும் இவ்வூர் காளா பிடாரி குதுரைவட்டமுடையான் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் " என்று கூறப்பட்டுள்ளது. முதலில் தோன்றிய வழிபடும் இடம் முன்றில் என்று தெரிகிறது. தேவி கோயில்கள் திருமுற்றம், சக்தி முற்றம் என்று அழைக்கப் பெற்றது. முற்றம் பின்னர் கோயிலுடன் இணைக்கப் பெற்றது"[33] என்பார் பி. எல். சாமி அவர்கள். இக்கருத்தை மனத்தில் கொண்டு நாம் தருமபுரியில் உள்ள மண்டுகளை நோக்கினால் அவை தாய்த் தெய்வங்கள் உறையும் இடங்களாகக் கருதி முற்கால மக்கள் வழிபட்ட இடங்கள் என்று கொள்ளலாம். நம் நாட்டின் பிற்பகுதிகளைப் போன்று இம்மண்டுகள் பெருங்கோயில்கள் கட்டி இணைக்கப் படாமல் பழமை மாறாத வகையிலேயே இன்றும் முற்றம் என்னும் நிலையிலேயே உள்ளன எனலாம்.

மன்று அல்லது மண்டு என்பது தெய்வம் வந்து நிலை பெறும் இடம் என்று நெல்லை மாவட்ட நாட்டுப்புறப் பாடல் ஒன்றினால் அறிய முடிகிறது. கோணங்கி அடித்துக் குறி சொல்லும் பூசாரி தான் குறி சொல்வதற்குத் துணை வரும்படித் தெய்வக் கருப்பனை அழைப்பதாக ஒரு பாடல். கருப்பன் பெரும்பாலும் தாய்த் தெய்வங்களின் அடியவன்.

" மன்றுக்கு நானழைத்தேன்
மன்னவரே வாருமிப்போ "

" பூசை முடியுமட்டும்
புண்ணியனே உன் காவல்
மண்டு முடியுமட்டும்
மன்னவனே உன்காவல் "[34]

என்று தெய்வத்தை அழைத்துத் தான் குறி சொல்லும் இடத்தில் குடிபெறச் சொல்கிறான். குறி சொல்லி முடித்தவுடன் அத் தெய்வத்தை அம்மன்றைவிட்டுப் பெயர்ந்து போகவும் சொல்கிறான்.

"மன்று முடித்தேனிப்பே
மன்னவரே போய்ச் சேரும்
பூசை முடித்தேனிப்போ
போய்ச் சேரும் புண்ணியரே"[35].

எனவே மண்டு என்பது தெய்வம் உறையும் இடமாகக் கருதப் படுவது வெளிப்படை. தருமபுரி மாவட்டத்தில் வழங்கப்பட்டு வரும் மண்டு விழாக்கள் மூலம், இப்பகுதிகளின் முந்தைய கிராமச் சமுதாயக் கூட்டுவாழ்க்கையும், நாட்டுக் கவுண்டர், ஊர்க்கவுண்டர் என்ற பழைய நிலைகளில் கிராம நிர்வாக வடிவ மும்பெறப்படுகிறது. இருளர் என்னும் பழங்குடி இனத்தவரின் சமூக உறவுகளும் காணமுடிகிறது. வேட்கோவர்கள் கரகம் செய்து கொடுக்கும் மரபும், கால்நடை மேய்ப்பர்களாகிய குறும்பர்கள் 7 ஆடுகளைத் தானமாக வழங்கும் பழக்கமும் வரலாற்று நிகழ்ச்சிகளின் பிந்தியவடிவங்களே.

பொதுவாக, இம்மண்டில் எடுக்கப்படும் விழாக்கள் பொன்னியம்மன், செல்லியம்மன் வழிபாட்டு விழாக்களாக இருப்பதால் இது தாய்த்தெய்வ வழிபாட்டுடன் வளமை வழி பாட்டையும் உள்ளடக்கியதாகக் கருதலாம். பொன்னி, செல்லி என்பது வளமையைக் குறிக்கும் சொற்களும், தெய்வங்களும் ஆகும். மேலும் அறுவடைக்குப் பிறகும், நல்ல விளைச்சல் கண்ட ஆண்டிலுமே இவ்விழா கொண்டாடப்படுவதாலும், விழாவில் தலை கூடுதல் நிகழ்ச்சி என்பது ஆண், பெண் உறவு போன்ற வளமைச் சடங்கின் கூறாகக் காட்சிஅளிப்பதாலும் இது ஒருவகை வளமை வழிபாடே என்று கொள்வதில் தவறில்லை.

அடிக்குறிப்புகள்

1. அகம்: 158, 232, 251 புறம்: 34, 325, 371, 374 ஐங்குறு: 259.
2. அகம்: 287, 373
3. புறம்· 334

4. அகம்: 75
5. புறம்: 135, 390
6. புறம்: 374, அகம் 251
7. பதிற்றுப்பத்து: 23
8. அகம்: 377
9. பதிற்றுப்பத்து: 35
10. பெரும்பாண்: 423, 24 பதிற்று: 25
11. அகம்: 239
12. அகம்: 239
13. குறிஞ்சிக்கலி: 58
14. மருதக்கலி: 96
15. Ibid: 103
16. அகம்: 201
17. மருதக்கலி: 96
18. சிலம்பு-கொலைக்களக் காதை 102 நீர்ப்படை 74
19. Ibid இந்திரவிழவூர் எடுத்தகாதை 115-140
20. Ibid வேட்டுவ வரி 10-11
21. Ibid ஊர்காண் காதை 213-14
22. Ibid கட்டுரைக் காதை 74-76
23. மணிமேகலை 1:10-11
24. Ibid 6: 80-91
25. அகம்:157
26. பெரியபுராணம் - தடுத். புராணம்: 68,71 சேரமான். புராணம்: 135. திருநீல. புராணம்: 42
27. Dr. R. Nagasamy-'Studies in Ancient Tamil Law and Society'-p.449
28. S.I.I. Vol. XIV No: 37.
29. பெரியபுராணம் தடுத்த: 48
30. திருத்துறைப்பூண்டிக் கல்வெட்டு: 172, 200 1976.
31. S.I.I. vol. XIX No. 344
32. S.I.I. vol. XVII No. 701
33. பி.எல். சாமி 'தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு' பக். 48-46
34. நா. வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள் பக். 68
35. Ibid பக். 72

★

PULANKURICCI INSCRIPTION - a relook

NATANA. KASINATHAN, M.A.,
Director of Archaeology
(incharge)

The outstanding Pulankuricci inscription, which was recopied recently by the Tamilnadu State Department of Archaeology helps us gather information to add to what we adready know. The epigraph was first discovered and copied by the Department in 1979.[1] A research paper was presented at the Vth International Tamil Conference - Seminar by Dr. R. Nagaswamy.[2] He drew the attention of scholars to its importance. He was able to bring out only a few points on the socio-economic and administrative aspects of the inscription as at that time it had not been completely deciphered. In the concluding portion of his paper discussed the date of the inscription and said categorically that it was dated in 192 of the Saka era, corresponding to 270 A.D.

The year 192 mentioned in the inscription appears as the regnal year of Kōccēndan Kūṟṟan. The herostone inscriptions of the following centuries i.e. 5th-6th century A.D. give only the regnal year.[3] But the cavern epigraphs belonging to the first three centuries of the christian era do not mention any year.[4] So the practice in Tamilnad till 6th century A.D. was to mention only the regnal year. The 192 found in this epigraph cannot be taken as the regnal year as in the other cases, since it is too long for an individual. Therefore it must be an era which was not indigenous. It might be an era instituted by the Kaḷabhra dynasty, as Kōccēndan Kūṟṟan is believed to have been a Kaḷabhra king.[5]

The Kaḷabhra inroads into Tamilnad are generally believed to have taken place in the 3rd century A.D. Adding 192 years to 250 A.D. (the probable date of the Kaḷabhra inroad) makes 442 A.D. as the date of this inscription. The palaeography of

this record supports this date[6]a. The Saka date suggested by Dr. R. Nagaswamy is doubted by Thiru N. Sethuraman on the basis of the astronomical details given in this epigraph. According to him, the Saka year is a solar year which begins on Chittirai Ist and ends on the last day of Panguni. Since the 36th day of the year 192, given in this record, falls in the Tamil month of Thai, the year must have started either from Karthigai or Margali. He decides that this inscription quotes a local era which was prevalent at that time.

Dr. Y. Subbarayalu, who examined this inscription *in situ* has pointed out that there are two inscriptions, one starts 'with . . ndarku' and another starts with 'Kōccēndan Kūrrarku'.[7] This roused the interest of the Department of Archaeology and induced it to copy this epigraph again. Its team of epigraphists[8] have prepared the transcripts which throw more light on the cultural aspects of the period to which these inscriptions belong.

First, there are three inscriptions engraved from north to south on the slope of the hill. The first one, on the northern end was written during the period of one . . . Cēndan whose identity is still in doubt, but may probably be the father of the Cēndan Kuṟṟan whose inscription is found at the southern end. The second is completely worn out. The third starts with 'Kōccēndan Kūrrarku yāṇḍu nūrruttonnūrriraṇḍu'. The first and third are complete, though there is some negligible damage in the first record.

The first inscription records the gift of some land which was purchased from a certain Pulattavan by Kaḍalahapperum-paḍaittalaivan, the son of a feudatory. A piece of land called 'Kaḍayavayal of Chiṟṟiyūr', a brahmadāya of Kūḍalūrnāḍu and another of Veḷḷērrānmangalam were the gifts. This consisted of wet and dry lands. The donor also gave his share of taxes collected on Kārāṇmai, Kalakkīḻmai and Mēlāṇmai from Pāṇḍināḍu and Kongunāḍu. It seems that he had also donated his cattle (Kālāsam,) his relatives (tamar), and his servant (Kuḍikaḷ). This reminds us of the Kuḍinīngā dēvadānam of the later cōla records. The inscription states specifically who

were the administrators of the grant. They were . . . Uḍaiyār, Brahmadāyamuḍaiyār, Nāḍukāppār, Puṛankāppār and Uppūr-kāppār. If this grant was misused or was not properly maintained the Neṛiyaṛam Ceytār and the Tattamar would enquire and individually punish the defaulter by imposing a fine of one thousand six hundred kāṇam. The point of interest here is that this appears to be the earliest example of the later practice of enquiring by Dharmasana and awarding punishment during the Pallava and Chola periods.

The executors of this grant were Kēṭṭārulaviyapperuntiṇai Nallankilān Inangumān, Ulaviyapperuntiṇai Nallankilan . . . . ḷankūṛṛaṇ and Ulaviyapperuntiṇai Ālattūrkilān who seems to have been a transit revenue official. Since this grant was concerned with a land gift, the revenue officers seemed to have performed the execution of it. Kēṭṭarulaviyapperuntiṇai Nallankilān Inangumān and Ulaviyapperuntiṇai Nallankiḷāṇ . . . lankūṛṛan appear to havc been brothers, having had Nallankilān as their father.

The second is completely mutilated. The third which is fortunately well preserved deserves attention. This is the most interesting record. It refers to the establishment of two Dēvakulams and a Paḷḷi at three different places by the donor Kaḍalahapperumpaḍaittalaivan, who figures in the first record. A Dēvakulam was established on the Paccericcin hill of Veḷhūru village in Ollaiyurkkurram, while the other was at Viḷamaru village in Muthūṛṛukkūṛṛam. The ḍaḷḷi and a shrine (Kōṭṭam) of Vasidēvanār were established to the north of the Ulaviyattān tank of Matirai. The donor entrusted these to the Attikōsattār (the elephant corps of merchant guild), Uḷmanaiyār (Manai-pperuñjanam of the Perungathai and the Ahapparivāram of the later Chōḷa period), and Nāṛpāṛtiṇai (probably the four kinds of army).

These temples seem to have been maintained by Pāṇḍakar (Treasurer) Cēvukar (Meykāval), Marumaccārihaḷ (may be equalled with the pariccārahar of a later period) Dharmihaḷ

(Dēvakanmihaḷ) and Kāvalkoṇḍāṛu, the above said army personnel. The Executors of this grant are Kēṭṭārulaviyapperuntiṇai Nallankilān Inankumān, Ulaviyapperuntiṇai . . . Arukilān Kīraṇ Kāri and Ulaviyapperuntiṇai Ambar Kilān Kumārampōndai. The scribe who wrote on palm leaf is mentioned as Kīran Kāri and the name of the engraver on the stone is found as "Nraiyankāri of Veṇṇāḍu".

Territorial Divisions

In the Sangam age Tamilakam was broadly divided into Chera, Chola and Pandi nadus. They were in turn divided into nāḍus or kūṛṛams and ūrs for administrative reasons. The present inscriptions mention some nāḍus, kūṛṛams, mangalams and ūrs. Pandi and Kongunāḍus are mentioned as the bigger divisions. Kūḍalur nāḍu, Veṇṇāḍu, Ollaiyūrkkūṛṛam and Muthūṛṛukūṛṛam are found the next small divisions and the Brahmadeya villages and ūrs seem to have been the smallest units in those days.

Reference to Kongunāḍu are rare in Sangam works. It seems that it gained popularity during the 4th-5th century, since it is found in this epigraph as one of the biggest divisions. An interesting feature is mention of a brahmadāya village Cirraiyur of Kudalur nadu, which seems to have continuously been a brahmadeya village in Kudalurnadu even during the 12th - 13th century A.D. according to a late inscription.[9] As per medieval chola records,[10] this Kūḍalūr nāḍu and Ollaiyūr kūṛṛam cover the area of present Tirumayam Taluk in Pudukkottai district. Kudalur nadu seems to have been named after a village called Kudalur which is about 15 km. north of Pulankuricci. Kudalur is mentioned in inscription of a later period as Sundarachola-purattu kudal..[11] Mutturrukkurram covers the area of the present Arantangi and Tiruvadanai taluks (Pudukkottai district) while Veṇṇāḍu represents Mayiladuthurai and Nannilam taluks Thanjavur district) [12]

Devakulams, Palli and Kottam

The words, 'Il' and 'Perumpaḍai' occur in 'Tolkappiyam' in connection with hero worship. They may be the initial form of

the temple. In 'Silapatikāram', we get references to Kōyil, Kōṭṭam, Niyamam and Nagaram for different deities. An earlier reference to a Dēvakulam occurs in an inscription of Mahendravarman I, at Vallam in Chengalpattu District.[13] This Devakulam was established by an individual named Kandasēnan, the son of Vayantapiriarasar during the period of Mahendravarman, the Pallava king. It is a cave temple enshrining Siva. Therefore the Dēvakulams in the Pulānkurichi inscription may represent the temple either of Siva or Vishnu.

'Maduraikkānji' refers to a number of Jain and Buddhist monasteries at Madurai. Kadalakapperumpaḍaittalaivan seems to have added a paḷḷi at north of the Ulaviyattān tank at Madurai. The tank cannot be identified now.

Some ancient terms

A number of interesting ancient names occur in these two epigraphs for various kinds of social, religious, commercial organisations. Three kinds of people are referred to as the custodians of the temples and paḷḷi, namely Attikōsattār, Uḷmanaiyār and Nāṛpārthiṇai. The term 'Attikōsam' has been elaborately discussed by Thiru. Poongunran in his article, identifying it as a group of soldiers (elephant corps) employed by the merchant guilds.[14] Uḷmanaiyār is identified with Manaiperunjanam mentioned in 'Perungathai'.[15] This may also be identified with Akapparivāram of the Medieval Chōḷa period. These were guarding the palaces. The proper meaning of Nāṛpārthiṇāikaḷ is not understood, but it may probably be the guardians of four kinds of land.

The persons who were entrusted with administering the endowment are called Pāṇḍakar, Sēvukar, Virumaccārikaḷ, Dharumikal and ūru Kāvalkoṇḍār. Pāṇḍakar may be the same as Pāṇḍarakar, the treasurer. Sēvukar may be equivalent to the Meykāval of the later period. The meaning of Virumaccārikal is not clear but probably the paricārakar of Chōḷa period. Dharumikaḷ are the Dēvakanmikaḷ and ūru Kāvalkoṇḍār are the

village police. It seems that Veḷkūru was the ancient name of the present Pulankuricci which had a Kuḍumbu to govern the activities of the village. The first mention of Kuḍumbu occurs in a Brahmi inscription atTirupparankunram.[16]

Executive Officers

As executive staff, five officers are mentioned in both the inscriptions. All have the title Ulaviyapperuntiṇai indicating that they were the transit revenue staff.

The following are the texts of the first and the third inscriptions :

பூலாங்குறிச்சி மதகுமலைச் சரிவின் வடபுறம் உள்ள கல்வெட்டு

1. . . . . ந்தற்கு யாண்டு நூற்றுத் . . . . . .
2. . . . . நூ . . . . . .
3. . . . . நா . . . . லுள்ள . . . . தா . . . . ம . . . . . .
4. . . . . மருகண் மகன் [க]டலகப் பெ . . . . .
5. . . . . ல் . . . . . ன்[ஒ]ல்லையூருக்கூற்[ற]
6. . . . . செ . . . . மான்ச . . . ப . . . . த் . . . . .
7. . . . . ய . . . . ப் . . . . . .
8. . . . . கூரங்குள . . வயல்லை . . . . . .
9. . . . . ப . . . . நில . . . ரு நிலனும் புன்செஇ நிலனும் வெள்ளேற்றான் மங்கலமென் . . . . .
10. . . . . ழவரும் [இரு கரையும்] கூடலூரு நாட்டுப் பிரமதாயஞ் சிற்றையூருப் பிரம்மதாயக்கி
11. . . . ங்க . . . யும் [மீயா] ட்சியுங் கொண்டாளும் மவூருப்படுங் கடைய வயலென்னும்

12. . . . . புலத்தவன் விற்றுக் கொண்டு கொடுத்த புன்செ நிலனு[ம்]

13. . . . . த்துப் பிரம்மதாயத்துட் பிரம்மதாயக் கிழவ ரான

14. . . . . றராலும் பிரம . . . . யுங் காரண்மையுமாகக் கொண்டாளுந் நீர் நிலனும் புன்

15. . . . நிலனும் பெற்றுஞ் . . . . பாண்டிநாட்டுங் கொங்க நாட்டும் மவருகாராண்கிழமையுங் கல

16. க்கிழமையுந் மேல்லா[ண்]மையுங் கொண்ட[ன]வும் மவருடைய காலாசமுந் தோட்டங்களும் மவரு தமரை யும் ம

17. வரு குடிகளையும் . . . ச . . . ம் உடையாரும் பிரம்ம தாயமுடையாருந் நாடுகாப்பாரும் புறங்காப்

18. பாரும் முப்பூரு காப்பார் . . . . [தாயந்] நெறிஅறஞ் செஇதாரு தத்தமானும் வேறுவேறு ஆஇரத்தறுநூ

19. று காணந் . . . . வேன் . . ன்ற . . ரு கேட்டா ருலவியப் பெருந்திணை நல்லங்கிழான் இனங்கு

20. மானும் முலவியப்[பெருந்திணை] . . ங்கிழான் . . ளங் கூற் றனும் . . . முலவியப் பெருந்திணை ஆலத்தூர் கி . . .

21. . . . . பெ . லை . . துவான் மன்றாடுகங் குமான் யா . . டைப்பி . . . . ர . . . தளருக்க

22 . . . . கள்ளுக்கு . . . .

பூலாங்குறிச்சி மதகுமலைச் சரிவின் தென்புறம் உள்ள கல்வெட்டு

1. கோச் சேந்தங் கூற்றற்கு யாண்டு நூற்றுத் தொண் ணூற்றி

2. ரண்டு நாண் முப்பத்தாறு பக்கந் தைப்பிறை நாள் ப[ன்]ன . . ள மருகண் மகன் கடலகப் பெரும் படைத்

3. தலைவன் [எ]ங்குமான் னொ[ல்][லை]யூருக் கூற்றத்து வேள்கூருப் பச்செறிச்சின் மலைமேற் செஇ வித்த தேவகுலமும்

4. முத்தூற்றுக் கூற்றத்து விளமரு செஇவித்த தேவகுலமும் மதிரை உலவியத்தான் குளத்தின் வடபக்கத்துச் செஇவி

5. த்த தாபதப்பள்ளியுள் [வ]சிதேவனாரு கோட்டமும் மவை அத்திகோயத்தாரு முள்மனையாருந் நாற்பாற்றிணை களுந் தமக்கு காவலாக

6. அவற்றுக்குற்றது செயக்கொண்டமையால் லவற்றை வ . . றுத்தும் மவற்றுக்குப் பெயப்பட்ட அறப்புறநடையாட்டுவ தூஞ் செயும்

7. பாண்டங்கருஞ் சேவுக்கரும் விரும்மச்சாறிகள்[ளு]ந் தருமிகளு மூ[ரு]காவல் கொண்டாரு ஆராஇந்து வைஇக் கப்பட்டாரு அ[ல்]லது வழிபடப்

8. பெறாமையும் மவற்றுட் பச்செறிச்சில் மலைமேற் செ இவி[த்ததேவகு] லத்துக்குக்குக் குடும்பியராவாரு குழ

9. லூருத் தூஞ்சிய உடையாரால் வேள்கூருப் பெயப்பட்ட குடும்பி[யர்]. வழி[ய]ல்லது வேறூரு குடும்பாடப் பெறா மையும்

10. மத்தேவகுலத்துக்குற்றதூ[ஞ்செ]ய்து வல்லது குற்றந் தொழில் செயு[வார்]கள்ளு[த் தண்டஞ்]செயவும் மெழுதி வைக்கென்றருள்ளித்தாரு

11. கேட்டா ருலவியப் பெருந்திணை நல்லங்கிழான் இனங்கு மானு முலவியப் பெருந்திணைப் . . . . அறுகிழான் கீரங் காரி

12. யு முலவியப் பெருந்திணை அம்பருகிழான் குமாரம் போந்தையுங் கேட்டுவந்து கூறி[ன]ன் னோலை எழுது வான் றாமன்காரி

13. கண்ணன் இது கடைப்பி ஓலைக் காற்கண்டெழுதிக் கொடுத்தேன் [வெ]ண்ணாட்டன் ந[ரியங்] நரியங்காரி

FOOT NOTES

1. D. Tulasiraman, Archaeologist of this office, discovered these while he undertook his field survey on Archaeological objects.